# கலைக்கேசரி

KALAIKESARI

CULTURE • HERITAGE • TRADITION • EVENTS • FASHION • INTERVIEWS • ENTERTAINMENT

VOLUME : 07 ISSUE : 03 Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 135 / News / 2016



## Significance of the month of Aadi

## கொம்பு முறிக்கொம்பு விளையாட்டுச் சடங்கு

## இலங்கையின் மிகவும் புராதனமான சைவசமய பண்பாட்டுச் சின்னங்கள்

www.kalaikesari.com / July 2016

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 100.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 125.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 6.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.........CHF 10.00 | EUROPE..EU€ 7.00 |

ISSN 2012-6824

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்: Contents:




## அட்டைப்பட விளக்கம்;



உலகில் மிகப்பெரும் கல்லால் உருவாக்கப்பட்ட உருவச்சிலையாக விளங்குவது லெஷான் புத்தர் சிலையாகும். செங்குத்துப்பாறை ஒன்றில் செதுக்கப்பட்ட இப்புத்தர் உருவச்சிலை 71 மீட்டர் உயரம் கொண்டது. 1996ஆம் ஆண்டு, இவ்வுருவச் சிலைப்பகுதி ஐ.நா. மரபுரிமைச் சின்னமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.











06 'லோஸர்' எனப்படும் திபெத்திய புதுவருட கொண்டாட்டங்கள்

26 மலையகக்கல்வியின் குறியீடாக விளங்கும் அட்டன் ஹைலண்ட்ஸ் மத்திய கல்லூரி

42 லெஷான் மாபெரும் புத்தர் உருவச்சிலை

46 செம்மை நிலை எழுத்துக்களுடன் உறவாடிய சிற்பி சிவசரவணபவன்

50 தெரிந்த பெயர் தெரியாத விபரம் - மூங்கில்

56 கோத்திரம் என அழைக்கப்படும் வரகு

59 சங்கமன்கண்டி பிள்ளையார் ஆலயம் மூர்த்தி சிறிது, கீர்த்தி பெரிது

68 பல்கலை வித்தகி விஜயலட்சுமி சண்முகம்பிள்ளை

78 **From 'Veruddy' to 'Virumpi'** A creative engagement with the Children

80 Significance of the month of **Aadi**



**PUBLISHER**
Express Newspapers (Cey) (Pvt) Ltd.
185, Grandpass Road, Colombo 14,
Sri Lanka.
T.P. : +94 11 7322732
Fax : +94 11 2327827
kalaikesari@expressnewspapers.lk
www.kalaikesari.com

**EDITOR**
Annalaksmy Rajadurai
luxmi.rajadurai@yahoo.com

**CONTRIBUTORS**
Prof. S. Pathmanathan
Prof. Saba Jeyarasa
Dr. Viviyan Sathyaseelan
Dr. Arumainathan Sathiskumar
Mrs. Vasantha Vaithyanathan
Mrs. Pathma Somakanthan
Mrs. Thilaka Wijayaratnam
Mr. Sivalingam Sivakumaran
Dr. S.Jeyasanker
Miss. Tharshini Thirunavukkarasu
Mrs. Yoga Yogendran

**PHOTOS**
S.Sivakumaran
Robert Antony
A.Jeyaseelan
S.karthikesu

**LAYOUT**
M.Sritharakumar
S.Thanusan

**ICT**
S. T. Thayalan

**ADVERTISING & SUBSCRIPTIONS**
V.Shivakumar - 071 6845751
shivan@encl.lk

**CIRCULATION**
T.Ravi - 077 7751021

ISSN 2012 – 6824


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பக்கம்

## Editor's Note



வணக்கம் கலைக்கேசரி வாசகர்களே!

To our esteemed readers,

**July, 2016**

சிலப்பதிகாரம் மணிமேகலை சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி என்னும் ஐம்பெரும் காப்பியங்களில் முதலில் வைத்து எண்ணத்தக்க சிறப்புப் பெற்று விளங்குவது சிலப்பதிகாரம் என அறிஞர் போற்றுவர். அக்காப்பியம் கூறி வைத்த செய்திகள் அற்புதமானவை. அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதும் உரைசால் பத்தினியை உயர்ந்தோர் போற்றுதலும் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும் இப்பெருமைமிகு காப்பியம் விளக்கி வைத்த சேதிகளாகும். இளங்கோ அடிகளால் ஆக்கப்பெற்று அனைத்து மக்களாலும் போற்றப்படும் சிலப்பதிகாரம், கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் ஆக்கப் பெற்றதென்பது அறிஞர் கருத்து.

இப்பெயர் பெற்ற காவியம், அக்கால கட்டத்தில் சோழ நாட்டின் தலைநகராகச் சிறப்புப் பெற்று விளங்கிய காவிரிப்பூம் பட்டினத்தைப் போற்றும் பாங்கு மனங் கொள்ளத்தக்கது. இது இக்காப்பியத் தலைவனான கோவலனும் தலைவியாகிய கண்ணகியும் பிறந்து வாழ்ந்திருந்த நாடு. பண்டைய நாள் கடல் அரிப்பினாலும் கடல் கோளினாலும் நகரின் பெரும்பகுதி அழிந்துவிட்டபோதும் பின்னர் காலப்போக்கில் கட்டி எழுப்பப்பட்ட காவிரிப்பூம் பட்டினம் இன்று அதன் பண்டைய பெருமைகளை பறைசாற்றும் ஒன்றாக விளங்குகின்றது.

அதற்கு ஒரு சான்றாக இன்றைய சிலப்பதிகார கலாபவனமும் விளங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. பண்டைக் காவிரிப்பூம் பட்டினம் குறித்து இளந் தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் கட்டுரை ஒன்று இம்முறை கலைக்கேசரியை அலங்கரிப்பதைக் காண்பீர்கள்.

அவ்விதமே கிழக்கு மாகாணத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் அமைந்துள்ள சங்கமன்கண்டி பிள்ளையார் ஆலய வரலாறு குறித்த தகவல்களும் கொம்புமுறி விளையாட்டுப் பாரம்பரியம் குறித்த தகவல்களும் நல்வாசிப்புக்குரியன.

மேலும் வழமைபோன்று பல அரிய கட்டுரைகள் இவ்விதழில் இடம்பெறுகின்றன. வாசித்து மகிழுங்கள்.

நன்றி: மீண்டும் சந்திப்போம்

அன்புடன்

Scholars hail Silapathikaram as the leading one, among these five famous Tamil epics, namely, Silapathikaram, Manimekalai, Chinthamani, Valaiyapathy and Kundalakesi. The messages conveyed by this great epic(Silapathikaram) are amazing. The Epic says that Dharma destroys rulers who shun good governance; People of repute praise women of chastity and that effects of misdeeds of the past will have consequences at the present time.

Scholars are of opinion that this classic epic that was created by Sage Ilango, was made in the2nd century A.D. The way in which Silapathikaram extols Kaveripoom Pattinam, the famous ancient port city of Chola Kingdom is admirable. This was the birth place of Kovalan the hero of the epic and that of the heroine Kannaki. It is stated that this city was destroyed by sea erosion and tsunami. Kaveripattanam in course of time was reconstructed to a certain extent, signifying the ancient name of that celebrated city.

The Silapathikaram Gallery, that stands now can be noted as a symbol of that celebrated ancient city glory. Having the younger generation in mind, Kalaikesari in this issue gives an article on Poompuhar.( Kaveripoom Pattinam)

Likewise, articles on the history of Sangaman Kandy Pillaiyar Temple that situated in Thirukovil area in the Eastern Province and about 'Kombumuriattam' Festival may also interest readers. As usual, in this issue, you can also read some more interesting articles. Read and enjoy.

Thank you.

Annalakshmy Rajadurai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'லோஸர்' எனப்படும் திபெத்திய புதுவருட கொண்டாட்டம்



உலகில் பொதுவாக, எல்லா நாட்டு மக்களுக்கும், அவர்களது புதுவருடப்பிறப்பு மிக முக்கியமானது. புதுவருடம் பிறக்கும் காலம், பல்வேறுநாட்டு, இன மக்களுக்கும், அவர்தம் மரபுரீதியான நம்பிக்கையைப் பொறுத்து வேறுபடுகிறது. ஆனால் கீழைத்தேச நாடுகளில் பலவற்றின் புதுவருடப் பிறப்பு, சந்திரனை, அதனது இயக்கத்தை வைத்தே கணிக்கப்படுகின்றது.

திபெத்திய மக்களைப்பொறுத்தவரை அவர்களது புதுவருடப் பிறப்பு முதலாவது சந்திர மாதத்தில் (Lunar month) அல்லது பெப்ரவரி மாதத்தில் பிறக்கிறது. இம்மக்களைப் பொறுத்தவரை அவர்களது அனைத்துக் கொண்டாட்டங்களையும் விட, புதுவருடப்பிறப்பு மிகச் சிறப்பானதோர் கொண்டாட்டமாகும். இதனை திபெத்தியர்கள் 'லோஸர்' என அழைப்பார்கள். 'லோஸர்' (Losar) என்றால் திபெத்திய மொழியில் புதுவருடம் என அர்த்தமாகும்.

இந்தப் புதுவருடப்பிறப்பை இளையோர் முதல் முதியோர் வரை அனைவரும் மிகவும் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். அதாவது சாதாரண மக்கள், பிக்குமார், பிக்குனிகள் ஆகிய அனைவருக்குமே உற்சாகம் தரும் கொண்டாட்டமாக 'லோஸர்' அமைகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதுவருடம் பிறக்கும் அந்த முதல் நாள் குடும்பத்தின் அனைத்து அங்கத்தவர்களும் தங்களது மரபுரீதியான ஆடைகளை அணிந்து தமது ஆலயத்தில் ஒன்றுகூடியிருப்பார்கள். பின்னர் எல்லோரும் ஒன்றாக காலையுணவினை மகிழ்ச்சியுடன் உண்டு களிப்பார்கள். புதுவருடப் பிறப்பன்று குடும்பத்தவர்கள் அனைவரும் கட்டாயம் வீட்டில் தங்கியிருக்க வேண்டும். அப்போது அவர்கள் உண்டு, கழித்து மிகச் சந்தோஷமாகப் பொழுதைக் கழிப்பார்கள்.

வருடம் பிறந்த முதல் நாளன்று அல்லது மூன்றாவது நாள், இனபந்துக்கள் யாவரும் வீட்டில் ஒன்று கூடி, வீட்டின் நான்கு மூலைகளிலும் உயரத்தில் கட்டப்படும் வணக்கக் கொடிகளை மாற்றிக் கொள்வார்கள். பொதுவாக புதுவருடக் கொண்டாட்டம் பதினைந்து நாட்கள் வரை நீடிக்கும். பல்வேறு கிராமங்களிலும், பல்வேறு விதமான நிகழ்ச்சிகளை, சமூக ஆற்றுகைக்குழுக்கள் ஒழுங்கமைத்து நடத்தும். இந்நாட்களில் சமய நிகழ்வுகள் தொடங்கி, கலாசார நிகழ்வுகள் வரை, ஏராளமான நிகழ்ச்சிகள் மிகக் குதூகலமாக நடத்தப்படும்.

லோஸரின் முதல் நாள், 'லாமா லோஸர்' என அழைக்கப்படும் திபெத்திய பௌத்தர்கள், மரபு ரீதியாக தமது குருமார்களை அல்லது தர்ம ஆசிரியர்களை வருடப்பிறப்பு தினத்தன்று சந்தித்து வாழ்த்துக்கூறி மகிழ்வார்கள்.

அன்றைய தினம் சாதாரண மக்கள் தமது உறவினர்கள், நண்பர்களிடம் குறுகிய விஜயங்களை மேற்கொண்டு, தமது புதுவருட நல்வாழ்த்துக்களைத்

**"தற்காலத்தில் கணிசமான திபெத்திய மக்கள் உலகின் பல பாகங்களிலும் வாழ்வதனால் லோஸர் (புத்தாண்டு) ஓர் உலகரீதியான கொண்டாட்டமாகவே மாறி வருகிறது. அதிலும் குறிப்பாக இந்தியா, நேபாளம், அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது."**



வெண்ணெய்க் கட்டிச் சிற்பங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







புது வருட கொண்டாட்டத்தின் போது மக்கள் கவர்ச்சிகரமான ஆடைகள் அணிந்து ஆடி மகிழும் காட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்துக் கொண்டு கொண்டாடி மகிழ்வார்கள். அவ்வேளை, அவர்கள் திபெத்திய பியர் எனக் கூறப்படும் சாங்கோல் (Changkol) மதுபானத்தை அருந்தி களித்திருப்பர். அத்துடன் தமது பகுதிகளில் உள்ள ஆலயங்கள், மடாலயங்களுக்கு விஜயம் செய்வர்.

லோஸரின் இரண்டாவது நாளை, 'கையல்போ லோஸர்' என அழைப்பர். அதன் அர்த்தம் 'அரசனின் லோஸர்' என்பதாகும். இது வரலாற்று ரீதியாக அரசர்களுக்கும் சமூகத்தலைவர்களுக்கும் மரியாதை செலுத்தும் நாளாகும். பண்டைக் காலத்தில் இந்நாளில் அரசாங்கங்கள் அமைச்சர்களுக்கும் தமது மக்களுக்கும் வாழ்த்துத் தெரிவித்து மகிழ்வார்கள்.

பிற்காலத்தில் தலாய்லாமா திபெத்தின் ஆட்சியாளராக வந்தபின், மக்கள் அரசாங்க அதிகாரிகளுக்கும் வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கும் வாழ்த்துத் தெரிவிக்கத் தொடங்கினர்.

லோஸரின் மூன்றாம் நாள், 'சோக்யொங் லோஸர்' என அழைக்கப்படும் அன்றைய தினம் மக்கள் பல்வேறு தெய்வங்களுக்கும் தர்மத்தின் பாதுகாவலர்களுக்கும் விசேட வணக்கங்களைச் செய்வார்கள். மலைகளிலும் வீட்டின் கூரைகளிலும் வணக்கக் கொடிகளைப் பறக்க விடுவார்கள். வணக்க ஆராதனைகளைச் செய்யும் வேளையில் 'ஜூனிஸர்' என்னும் இலைகளை எரிப்பதுடன் பத்திகளையும் கொழுத்துவர்.

முதல் மூன்று நாட்களும் இவ்வாறு பூர்வாங்க ஆன்மீக அனுஷ்டிப்புகள் இடம்பெற்றாலும் லோஸரின் 15ஆம் நாள் இடம்பெறும் வெண்ணெய்க் கட்டி விளக்குக் கொண்டாட்டம் வரை கொண்டாட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்று வரும். இக்கொண்டாட்டத்தை 'சொங்கா சோபா' என்பர். (Chonga Choepa) கொண்டாட்டத்தின் இறுதி நாளான அன்றைய தினம் மிகப்பெரும் வெண்ணெய்க் கட்டி சிற்பக்கலை உருவாக்குவதற்கு முன் பிக்குகள் தூய்மைப்படுத்தும் கிரியைகளை மேற்கொள்வர்.

கண்ணைக் கவரும் கலைச்சிற்பமாக விளங்கும் வெண்ணைக் கட்டி சிற்பங்கள் மடாலயங்களில் காட்சிக்கு வைக்கப்படும். இது ஒரு பிரமாண்டமான ஆன்மீக கலைக் கண்காட்சியாகும்.

தற்காலத்தில் கணிசமான திபெத்திய மக்கள் உலகின் பல பாகங்களிலும் வாழ்வதனால் லோஸர் (புத்தாண்டு) ஓர் உலகரீதியான கொண்டாட்டமாகவே மாறி வருகிறது. அதிலும் குறிப்பாக இந்தியா, நேபாளம், அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. அத்துடன் திபெத்திய பௌத்த மத செல்வாக்குள்ள நாடான பூட்டான் மற்றும் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள் சிலவற்றிலும் கொண்டாடப்படுகின்றது. திபெத் நாட்டில் புத்த மதம் பரவுவதற்கு முன்னரே பொன் (Bon) காலத்திலிருந்தே ஒவ்வொரு மாரி காலத்திலும் ஒரு ஆன்மீகக் கொண்டாட்டம் நடைபெற்று வந்துள்ளது என சில வரலாற்று நூல்கள் தெரிவிப்பதாக கூறப்படுகின்றது. அவ்வேளை மக்கள் தெய்வங்களையும் உள்ளூர் ஆவிகளையும் திருப்திப்படுத்த கொண்டாட்டம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. இந்த சமயக் கொண்டாட்டமே படிப்படியாக திபெத்திய நாட்காட்டியின் பொருத்தமான தொடர்புடன் வருடாந்த பௌத்த கொண்டாட்டமாக மாறியதாக நம்பப்படுகிறது. பொருளாதார ரீதியில் பெரும் முன்னேற்றம் காணாவிட்டாலும் திபெத்திய மக்கள் உலகில் மகிழ்ச்சியான மக்களில் அடங்குகின்றனர்.

- கங்கா



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மிகவும் புராதனமான சைவசமய பண்பாட்டுச் சின்னங்கள்

**கலாநிதி சி.பத்மநாதன்**
தகைசார் பேராசிரியர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்

இலங்கையிற் சைவசமயத்தினதும் புராதனமான சிவாலயங்கள் சிலவற்றினதும் ஆதிகால வரலாற்றினை ஆதாரங்களோடு நிறுவக் கூடிய சூழ்நிலை இப்பொழுது கிடைத்துள்ளது. அது தெய்வாதீன மானது என்று தான் சொல்ல வேண்டும். பாடல்பெற்ற தலங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகியனவே இலங்கையின் மிகவும் புராதனமான சிவாலயங்கள் என்ற கருத்து நிலைபெற்றுள்ளது. ஆயினும் அவை உற்பத்தியான காலத்தை வரையறை செய்ய முடியவில்லை. அதற்கான தொல்பொருட் சின்னங்கள் இதுவரை கிடைக்கவில்லை அந்த நிலைமாறி விட்டது. எழுத்துகள் பொறித்த அவற்றுக்குரிய ஆதியான சின்னங்கள் உள்ளன.

பாடல் பெற்ற தலங்களைப் போன்ற பழைமையுடைய வேறும் பல சைவக்கோயில்கள் இருந்தன என்பது அண்மைக் காலத்தில் அடையாளங் காணப்பட்ட தொல்பொருட் சின்னங்கள் மூலம் தெரியவந்துள்ளது.



திருக்கோணேஸ்வரத்து ஆதியான நந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் அவை அமைந்திருந்தன. தமிழ்ப் பிராமி வரிவடிவங்கள் எழுதிய சிவலிங்கம், நந்தி, கடவுட் படிமங்கள் என்பவற்றின் மூலம் அவை ஏறக்குறைய 2000 ஆண்டுகளை உள்ளடக்கிய வரலாறு கொண்டவை என்பதை அறிய முடிகின்றது. இப்பொழுதுள்ள நிலையில் இலங்கையின் இந்து சமய வரலாற்றை மீளுருவாக்கம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தமிழ்ப் பிராமி வரிவடிவங்களின் பெயர் எழுதிய சைவ சமய பண்பாட்டுச் சின்னங்கள் பல காணப் பட்டுள்ளன. இந்த எழுத்து முறையை அறிந்து கொள்ள முடியாதமையால் இச்சின்னங்களிற் காணப்படும் கல்வெட்டுகளை இதுவரை எவராலும் படிக்கமுடியவில்லை. அதனால் இச்சின்னங்களின் காலம், உற்பத்தி, பிரதிமாலட்சணங்கள் என்பவற்றை உரிய வகையிலே அறிஞர்களாற் புரிந்து கொள்ள முடியவில்லை.

இக்கட்டுரையிலே எல்லாமாக பத்து (10) உருப்படிகள் பற்றிய விபரங்கள் அவற்றிலுள்ள பெயர்கள் மூலம் விளக்கப்படுகின்றன. அவற்றிலே முதன்மையானது அண்மைக் காலத்திலே திருக்கோணேஸ்வரத்தின் வளாகத்தில் நிலத்தின் கீழ் கிடந்த நந்தியின் உருவம். மற்றைய வடிவங்கள் எல்லாம் கலாசார முக்கோணம் வெளியிட்ட சிவனின் படிமங்கள் என்னும் நூலில் வெளியிடப்பட்டவை. இலங்கையில் இந்து சமயம் பற்றிய ஆய்வுகளில் இங்கு விளக்கப்படும் படிமங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

இலங்கையின் முதன்மைச் சிவாலயங்களின் வரிசையில் அடங்கும் திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம் ஆகியவற்றின் உற்பத்தி பற்றிய வரலாற்று அடிப்படையிலான விபரங்களை இப்பொழுது தகுந்த ஆதாரங்களுடன் விளக்க முடிகின்றது. புராதன கால இலங்கையிலே சைவசமயம் பெற்றிருந்த சிறப்பினை மதிப்பீடு செய்யக்கூடிய வகையில் இப்பொழுது உறுதியான தொல்லியல் ஆதாரங்கள் கிடைக்கின்றன. இலங்கையிலுள்ள மிகப் புராதனமான சிவன் கோயில்கள் நாகர்குல வேளிர்களால் அமைக்கப் பட்டவை என்பது இப்பொழுது தெரியவந்துள்ளது. அவர்களைக் குறிப்பிடும் நூற்றுக்கணக்கான தமிழ்க் கல்வெட்டுகள் உள்ளமையும் இந்நாட்களிலே தெரியவந்துள்ளது. நாகர் தமிழ்மொழி பேசியவர்கள் என்பதும் இலங்கையிலே



அர்த்த நாரி
அபயகிரிய
அருங்காட்சியகம்
அநுராதபுரம்

கற்காலத்தை முடிவுக்குக் கொண்டுவந்து ஓர் உற்பத்தி முறையினை உருவாக்கியவர்கள் என்பதும் உறுதியாகிவிட்டன.

இங்கு விளக்கப்படும் சமய சின்னங்கள் இலங்கையிற் சைவசமயம் பரவியமையில் நாகர் கொண்டிருந்த பங்கினை உணர்த்துகின்றன. அவற்றிலே காணப்படும் பெயர்களின் அடிப்படையில் முன்னே குறித்த பத்துப் படிமங்களையும் மேல்வருமாறு இலக்கமிட்டு, வரிசைப்படுத்தி விளக்கலாம்.

### 1. திருக்கோணேஸ்வரத்தின் ஆதியான நந்தி

பாடல் பெற்ற இரு தலங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வரம் இலங்கையின் மிகவும் புராதனமான சிவாலயங்களுள் ஒன்றாகும். அதனைப் பற்றிய புராதனமான சான்றுகள் இலக்கியங்களிற் காணப்படுகின்றன. அவற்றிலே காலத்தால் முற்பட்டது மகாவம்சத்தில் உள்ளது. அது மகாசேனனின் காலம் (கி.பி 274-301) பற்றியது. பௌத்த சமயத்திற்குத் தடையாக இருந்தமையால் இலங்கையின் கிழக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையிலே கோகர்ணம், கலந்த என்னும் பிராமணனின் கிராமம், ஏரகாவில்ல (எருவில்) ஆகிய இடங்களில் இருந்த தேவாலயங்களை அழித்துவிட்டு அவற்றினிடத்திலே விகாரங்களை மகாசேனன் கட்டினான் என்று சொல்லப் படுகின்றது.

அதற்குப் பிற்பட்டது. வாயுபுராணக் குறிப்பு. கிபி ஐந்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட, வட இந்தியாவில் உற்பத்தியான வாயுபுராணத்தில் கிழக்குக் கரையிலுள்ள கோகர்ணம் என்னும் மகத்தான சிவாலயம் பற்றிக் கூறப்படுகின்றது. (வைபுர்ணவஹ் தீரே கோகர்ண நாமதேயஸ்ய சிவாலயம் மகத்). வாயு புராணம் லங்காபட்டணம், (இலங்கைத்துறை), அகஸ்திய பவனம் ஆகியன பற்றியும் சொல்வதால் அது இலங்கையிலுள்ள கோகர்ணத்துச் சிவாலயம் பற்றியே குறிப்பிடுகின்றது என்பது தெளிவாகின்றது. காலக்கிரம வரிசையில் மூன்றாவதாக வருவது திருஞானசம்பந்த மூர்த்திநாயனார்பாடியருளியதிருக்கோணேஸ்வரப் பதிகம் கோணேசர் கல்வெட்டு, தட்சணகைலாச புராணம் போன்ற நூல்கள் காலத்தால் மிகவும் பிற்பட்டவை. கோயிலின் உற்பத்தி பற்றி அவற்றில் ஆதாரபூர்வமான குறிப்புகளை எதிர்பார்க்க முடியவில்லை. இதுவரை கிடைத்துள்ள தொல்லியற் சின்னங்கள் எட்டாம் நூற்றாண்டுக்கு உரியவை.

சில ஆண்டுகளுக்கு முன், திருக்கோணேஸ்வரத்தில், பிள்ளையார் கோயிலுக்குப் பின்புறமாக நிலத்தை வெட்டிய பொழுது ஒரு பெரிய நந்தி நிலத்தில் ஆறடி ஆழத்திற் புதைந்திருப்பதைக் கண்டனர். நிலத்தை வெட்டிய பொழுது அது இரண்டு பாகங்களாக உடைந்துவிட்டது. எனினும் கோயிலார் அதனைப் பொருத்தி, சீமெந்தில் அமைக்கப்பட்ட பீடத்தில் ஏற்றி வைத்துள்ளனர். அதன் முதுகுப் புறத்தை உலோகப்பட்டை ஒன்றினால் மூடியுள்ளனர்.

நந்தியம்பெருமான் கோயிற் கட்டடங்களுக்கு வெளியே அமைந்துள்ளதால் எவரும் அதனைப் பார்க்கமுடியும். அதனைப் பற்றிய சில குறிப்புகளை விளம்பரப் பலகையில் மும்மொழிகளிலும் எழுதி வைத்துள்ளனர். இந்நாட்களிலே பழைமை வாய்ந்த சைவசமய சின்னங்களைச் சோழர் காலத்தவை என்று சொல்வது மரபாகிவிட்டது. எவரும் எதையும் சொல்லலாம். அவற்றைத் தட்டிக் கேட்போர் எவருமில்லை. இந்த நந்திக்கும் சோழர்களுக்கும் எதுவிதமான தொடர்பும் இல்லை. தென்னிந்திய சிற்பக்கலை பற்றி சிறிதேனும் அறிந்தவர்கள் இதனைப் புரிந்து கொள்வார்கள். நிலத்தின் கீழிருந்து மீட்கப்பட்ட நந்தி பற்றிய விபரங்கள் வியப்பிற்குரியவை. கோயிலாரும் அங்கு கடமை புரியும் பிராமணரும் அவற்றை அறிந்திருக்கவில்லை. திருக்கோணேஸ்வரம் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை வெளிப்படுத்தும் சின்னமாக அதன் ஆதியான நந்தி வெளிவந்துள்ளது. அதன் வடிவமைப்பு பல்லவ, சோழர் காலங்களில் உருவாக்கப்பட்ட நந்திகளின் வடிவமைப்பிலிருந்து வேறுபட்டது. அதன் உடல் மிகப்பெரியது கனதியானது. ஆனாற் கழுத்து, கட்டையானது உடம்பின் அளவிற்கேற்ப கழுத்து நீளமானதாக அமையவில்லை.



சிவனின் தாண்டவக்கோலம், கடலாதெனிய

நந்தியில் மணிணாகன் என்ற பெயர் காணப் படுகின்றமை அதன் சிறப்பம்சமாகும். அப்பெயர் ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்துக்குரிய தமிழ்ப் பிராமி வரிவடிவங்களில் எழுதப்பட்டுள்ளது. வரிவடிவங்களின் வளர்ச்சி நிலையின் அடிப்படையில் மட்டுமே தொல்பொருட் சின்னங்களின் கால எல்லைகளை நிர்ணயிக்க முடியும். நந்தியின் காலத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சைவ, நாக வழிபாட்டு கலப்புச்சின்னம்
சிவன், பொலன்னறுவை, வெண்கலம்



சிவன் - பார்வதி இஸுறுமுனியா அருங்காட்சியகம்

அடிப்படையில் ஆதியான ஆலயம் அமைக்கப் பட்ட காலத்தை உணர்ந்து கொள்ள முடிகின்றது. அதனாலே திருக்கோணேஸ்வரம் சுமார் 2000 வருடங்களுக்கு முன் உற்பத்தியாகியதென்று கொள்ளமுடிகின்றது.

திருக்கோணேஸ்வரத்தின் உற்பத்திக்கும் நாகருக் கும் இடையிலான தொடர்பினை வெளிப்படுத்தும் சாதனம் என்ற வகையிலும் இந்நந்திக்குப் பெருஞ் சிறப்புண்டு. வேறிடங்களிற் காணப்படும் நாகரின் பண்பாட்டுச் சின்னங்களிற் போல, இடைவெளி களின்றி நந்தியின் உருவம் முழுவதும் மணிணாகன் என்ற பெயர் செதுக்கப்பட்டுள்ளது. மணிணாகன் என்பது நாகர் வழிபாட்டு மரபிற் கடவுளைக் குறிக்கும் பெயர். அவர்கள் சைவம், பௌத்தம் ஆகிய சமயங்களுக்கு மாறிய பின்பு புத்தர்பிரானை யும் சைவசமயக் கடவுளரையும் மணிணாகன் என்றே குறிப்பிட்டனர். திருக்கோணேஸ்வரத்தின் உற்பத்தி நாகர்குல வேளிரோடு தொடர்புடையது என்ற விபரம் அங்கு கண்டெடுக்கப்பெற்ற நந்தி மூலமே வெளியாகின்றமை வரலாற்றுச் சிறப்புடையது.

அதன் சிறப்புக்கேற்ற வகையிலும் பாதுகாக்கக் கூடிய வகையிலும் ஒரு மண்டபத்தைக் கட்டி அதனுள் நந்தியை வைப்பது கோயிலாரினதும் சைவசமூகத்தவரினதும் கடமையாகும். உடைந்து விட்ட நந்தி வழிபாட்டிற்குரியதன்று. அது மக்க ளினதும் குறிப்பாக மாணவர்களினதும் பார்வைக்கும் உரியது. அது கிடைத்தற்கரிய சின்னம். வரலாற்றிலே ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தும் சின்னம். இதுவரை இலங்கையிற் கிடைத்த நந்திகளில் இதுவே காலத்தால் முற்பட்டது போலத் தெரிகின்றது. இதனைப் போன்ற மிகப் பழைமையான வடிவம் தமிழகத்திற் கிடைத்திருப்பதாகத் தெரியவில்லை. இங்கு வெளியிடப்படும் சிந்தனைகள் எமது மாணவராகிய ஹோபிநாத் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்துள்ள புகைப்படங்களை ஆதாரமாகக் கொண்டவை. அதை நேரிலே பார்க்குமிடத்து வேறும் சில அம்சங்களைத் தெளிவுபடுத்துவது சாத்தியமாகலாம்.

இனி விளக்கவுள்ள உருப்படிகள் எல்லாம் கலாசார முக்கோணம் வெளியிட்ட நூலொன்றி லுள்ள படிமங்களின் படங்களை அடிப்படையாகக் கொண்டவை. அவை எல்லாவற்றிலும் பெயர் தமிழ்ப்பிராமி வரிவடிவங்களில் எழுதப் பட்டுள்ளது. நூலைப் பதிப்பித்தவர்கள் பெயர்கள் கல்வெட்டாக அமைந்திருப்பததைக் கண்டு கொள்ளவில்லை. அதனால் படிமங்களின் கால எல்லையினையும் அவர்களால் வரையறை செய்ய முடியவில்லை. அவை எல்லாவற்றிலும் மணிணாகன் என்ற பெயர் காணப்படுகின்றது. அதன் அடிப்படையில் மட்டுமே படிமங்களின் சிறப்பான அம்சங்களைப் புரிந்து கொள்ளலாம்.

### *2. முன்னேஸ்வரத்துச் சிவலிங்கம்*

முன்னேஸ்வரம் கோயிலின் மூலஸ்தானத்து வெளிப்புறச்சுவரின் மேற்குப் பக்கத்தில் தேவகோட்டமொன்றில் லிங்கமொன்று தாபிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது. விமானங்களின் மேற்குப் புறத்திலே லிங்கோத்பவரின் உருவத்தைத் தாபனம் பண்ணலாம் என்பது ஆகம, சிற்பசாஸ்திர நியதி. ஆனால் இங்கு விமானத்திலன்றிக் கருவறையின் வெளிப்புறக் கோட்டத்திலே சிவலிங்கம் காணப் படுகின்றது.

கடவுட் படிமங்களைப் பற்றிப் பேசும் பொழுது அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூன்று வகைகளைப் பற்றிப் பேசுவது மரபு. அவற்றுள் முதலிரண்டும் சிவலிங்க வடிவங்கள். கடவுட் படிமங்களற்ற, வெறுமையான சிவலிங்கம் அருவத் திருமேனி என்று கொள்ளப்படும். உருவம் அமைந்த சிவலிங்கம் அருவுருவத் திருமேனி. அது லிங்கோத்பவர். இங்கு விளக்கப் படுவது அவ்வாறான ஒரு வடிவம் 73 சென்ரிமீற்றர் உயரமானது. முன்னேஸ்வரத்து மூலஸ்தானத்தில் இருப்பது இலிங்கோத்பவரின் ஆதியான வடிவம் என்பதில் ஐயமில்லை. அதிற் காணப்படும் இரு வகையான அம்சங்கள் கவனித்தற்குரியவை. ஒன்று அதிலே செதுக்கப்பட்ட உருவங்கள். மற்றது அதில் அமைந்துள்ள சொற்கள். இவ்விரு வகையி லான வடிவங்களை அவதானித்து, அவற்றைத் தொடர்பு படுத்திப் பார்ப்பதன் மூலமே இந்த வடிவத்தின் அம்சங்களைப் புரிந்துகொள்ள முடியும்.

இலிங்கத்தின் நடுப்பகுதியில் ஒரு ஆணின் உருவந் தெரிகின்றது. அது இயல்பான கோலத்தில் கலையழகு பொலிந்த வண்ணமாகச் செதுக்கப் பட்டுள்ளது. உடலின் உறுப்புக்கள் பொருத்தமான அளவுகளில் அமைக்கப்பட்டுள்ளன. இதனைப் பற்றிக் கூறுமிடத்து நான்கு கரங்களைப் பற்றி நூலாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆயினும் புகைப்படத்தில் இரு கரங்கள் மட்டுமே தெரிகின்றன. இடக்கரம் உயர்த்திய நிலையிற் காணப்படுகின்றது. மற்றது கீழ்நோக்கி வீசிய கோலமானது.

பிரமனும் விஷ்ணுவும் முறையே உச்சியில் அன்னமாகவும் காலடியிலே வராகமாகவும் உள்ள னர் என்றும் நூலாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் அவ்விதமான உருவங்களை எம்மாற் காணமுடியவில்லை. கால்களின் கீழ் எழுத்துகள் தெரிகின்றன. அவற்றின் கீழ் நாகரின் பண்பாட்டுச் சின்னங்கள் சிலவற்றிற் போல பாம்பு சுருண்டு கிடக்குமாப் போன்ற தடித்த வளையம் தெரிகின்றது.

படிமத்தின் தலைப் பாகத்தின் மேல் இரண்டு நீளமான தண்டினை உடைய, திரிசூலங்கள் புள்ளடியின் வடிவத்தில் அமைந்துள்ளன. புள்ளடி மேலே அமைந்துள்ள திரிசூலத்தின் வடிவமொன்று திருகோணமலையிற் கிடைத்த பிராமிக் கல்வெட்டொன்றில் அமைந்திருப்பது குறிப்பிடற்குரியது. எழுத்துகள் தெரிவது இச்சி வலிங்கத்தின் சிறப்பம்சமாகும். தமிழ்ப்பிராமி வடிவங்கள் மிகவும் பழைமையான வடிவங்கள். மணிணாகன் என்ற பெயர் உச்சிப் பாகத்திலும் வேறிடங்களிலும் தெரிகின்றது. பள்ளி என்ற சொல்லின் அடையாளமும் தெரிகின்றது. இலங்கையிலே தமிழ்ப்பிராமிச் சாசனங்கள் கி.மு. 250 கி.பி. 300 ஆகிய காலத்திலே புழக்கத்தில் இருந்தன. ஆகையால் தமிழ்ப் பிராமி வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ள லிங்கோத்பவரின் வடிவம் ஏறக்குறைய 2000 வருடங்களுக்கு முற்பட்டதாகும். இதன் படத்தை விளக்கியவர்கள் இது நவீன காலத்துக்குரியது என்று சொன்ன கூற்று பொருந்தாக்கூற்று.

முன்னேஸ்வரம் கோயிலின் மூலஸ்தானமும் அர்த்த மண்டபமும் 15ஆம் நூற்றாண்டில், விஜய நகர கலைப்பாணியிற் புனரமைத்த கோயிலின் பகுதியாகும். போர்த்துக்கேயர் விமானத்தையும் வேறு கட்டடங்களையும் இடித்து அழித்தனர். அதற்கு முன் அங்கிருந்த செல்வங்களைச் சூறையாடிவிட்டனர்.

கர்ப்பகிருகத்தில் இருந்த இலிங்கத்தை நீக்கி விட்டு அதனிடத்திலே குரிசை வைத்துக் கிறிஸ்தவ சமய முறைப்படி வழிபாடு செய்தனர்.

போர்த்துக்கேயரின் ஆட்சி அழிந்த பின், கண்டி நாயக்க மன்னரின் காலத்திலே கோயிலின் சில பகுதிகள் புனராக்கம் பெற்றன. அந்நாட்களிற் பழைய கர்ப்பகிருகத்தின் மேற் செங்கல் வேலைப் பாடான விமானமும் புதிதாக அமைக்கப்பட்டது. தொல்பொருள் திணைக்களத்தினர் முன்னேஸ் வரத்திலே கள ஆய்வுகளை நடத்தவில்லை. கோயிலின் கட்டுமானங்களின் வரலாறு பற்றி அவர்கள் எதனையும் அறிந்திருக்கவில்லை. அந்த அறியாமையின் காரணமாகச் சில பிரச்சினைகள் இந்நாட்களில் ஏற்படுவதுண்டு. கோயிலின் இறையகம் 15 ஆம் நூற்றாண்டளவில் விஜயநகர கலைப்பாணியில் அமைக்கப்பட்டதெனின் அதன் தேவகோட்டத்தில் 2000 வருடங்களுக்கு முற்பட்ட எழுத்துகள் பொறிக்கப்பட்ட இலிங்கம் அதன் தேவகோட்டத்தில் எவ்வாறு தாபனமாகியது என்ற வினா வாசகர்களின் மனங்களில் இயல்பாகவே ஏற்படும். அதற்கு விடை காண்பது கடினமான தன்று. கட்டடங்களைப் புதிதாக அமைக்குமிடத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில சமயங்களிற் பழைய கட்டடங்களின் பாகங்களும் அவற்றோடு கலந்துவிடுவதுண்டு. மணிணாகன் என்ற எழுத்துப் பொறித்த, கோயிலின் ஆதியான இலிங்கம் தலத்தில் இருந்தமையால் அதனை மேற்குப் புறக்கோட்டத்திலே சாஸ்திர விதிப்படி நிர்மாணஞ் செய்துள்ளனர். அன்று அவர்கள் செய்த நற்பணியின் பயனாகவே இன்று முன்னேஸ்வரம் கோயிலின் உற்பத்தியின் ஆதியான வரலாற்றையும் விளக்க முடிகின்றது.

முன்னேஸ்வரம் திருக்கோணேஸ்வரத்தைப் போன்று மிகவும் புராதனமானது என்பது இப்போது தெளிவாகியுள்ளது. அதனை நாகர்குல வேளிர் அமைத்தனர் என்பது மணிணாகன் என்று இலிங்கத்தில் எழுதப்பட்ட பெயரினால் உணரப் படுகின்றது. வேள்ணாகன் மகன் வேள் கண்ணன் என்ற வசனத்தின் அடையாளங்களும் அதிலே காணப்படுவதால் இக்கருத்து உறுதியாகின்றது.

### 3. கடலாதெனிய உபுல்வன் கோயிலிலுள்ள புராதனமான நடராஜர் படிமம்

கடலாதெனிய தேவாலய மண்டபத்தின் ஒரு பகுதியில் நடனக் கோலத்தில் அமைந்திருக்கும் வடிவத்தை நடராஜரின் படிமம் என்று வர்ணித்துள்ளனர். ஆயினும் அதில் ஒன்பதாம் நூற்றூண்டு முதலாக உருவாக்கப்பட்ட பிரதிமாலட்சணங்களைக் காணவில்லை. சடாபாரத்திலே கங்கையும் நிலாவும் தெரியவில்லை. சடையும் விசாலமாக விரித்த சடைபோல அமையவில்லை. டமருகமும் அக்கினிக் கலசமும் ஏந்திய கரங்களைக் காணவில்லை.

கைகள் இரண்டு மட்டுமே அமைந்துள்ளன. இடக்கரம் வீசித் தொங்கவிட்ட டோல கரம் போல் அமைந்துள்ளது. வலக்கரம் முன்னோக்கி மார்பளவில் மடித்த அபயகரமாகும். காதணிகள் தெளிவாகத் தெரியவில்லை. வலக்கால் நாட்டிய கரணத்திற் போன்று சற்று முன்னோக்கி உயர்த்தி முழங்காலில் மடித்துத் தொங்கிய கோலமானது. இடக்கால் ஊன்றிய பாதம் அதனால் மிதிக்கப் படுவது அரவின் வடிவான முயலகன் போலும். சிற்பம் செதுக்கிய நாற்சதுரமான கல்லின் வலப் பக்கத்து அடிப்பகுதி மூலையிற் பாம்புகளின் உருவங்கள் தெரிகின்றன. முகத்திலே புன்முறுவலான கோலம் தெரியவில்லை.

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐவகைத் தொழில்களையும் விளக்கும் வண்ணமாக நடராஜர் படிமங்களை அமைப்பது வழமை. இங்கு அந்த அமைப்பானங்



சிவனின் வைரவக்கோலம், கொழும்பு அருங்காட்சியகம்

களைக் காணவில்லை. எனவே இந்தப் படிமம் சைவசித்தாந்தக் கோட்பாடுகள் வரையறையாவதற்கு முற்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும். அல்லா விடின் சிற்பத்தைச் செதுக்கியவர்கள் சைவசமய தத்துவங்களை நன்கு அறியாதவர்களாதல் வேண்டும். இச்சிற்பத்தில் மணிணாகன் என்னும் பெயர் எழுதப்பட்டுள்ளது. அது சிற்பத்தையும் அது செதுக்கப்பட்டுள்ள நாற்சதுரமான கல்லினையும் முழுமையாக நிரப்பும் வகையில் மீண்டும் மீண்டும் எழுதப்பட்டுள்ளது. இது நாகருக்குச் சிறப்பாக உரிய வழமை. இது நாகருடைய சிற்பம் என்பதிலும் சைவசமயச் சார்புடையது என்பதிலும் கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை. கடலாதெனிய கண்டி மாவட்டத்தில் உள்ள ஊர். அங்கு வாழ்வோர் எல்லோரும் சிங்கள மொழி பேசுவோர். அவர்களின் ஆதிகால முன்னோரிடையில் தமிழ்மொழி வழக்கும் சைவசமயமும் நிலவியமைக்கு இச்சிற்பம் ஓர் உதாரணமாகும். அதனை நாகர் குல வேளிர் அமைத்தனர் என்றும் கருதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலாதெனிய தேவாலய பதினான்காம் நூற்றாண்டில் (1344) உருவாக்கப்பட்டது. அது திராவிட கலைப்பாணியில் அமைந்த கட்டுமானம். கணேஸ்வர ஆசாரியார் என்னும் ஸ்தபதியாரின் மேற்பார்வையிலே கட்டப்பெற்றது என்பது ஓர் சாசனக் குறிப்பு. தமிழ்ப் பிராமி வடிவம் எழுதிய சிற்பம் அதற்கு நெடுங்காலத்துக்கு முற்பட்டது. ஏறக்குறைய 1400 வருடங்களுக்கு முற்பட்டது. சுற்றாடலிற் கிடந்த மிகவும் புராதனமான சிற்பத்தை 1344 ஆண்டுக் கட்டுமானத்திற் சேர்த்து வைத்துக் கட்டியுள்ளனர் என்று தான் கொள்ள வேண்டும். இச்சிற்பம் பல அம்சங்களின் வரலாற்றுச் சிறப்புடையது. அது நாகரின் சமய வழிபாட்டுச் சின்னம் அவர்களின் சைவசமய சின்னம். சைவசமத்திலுள்ள ஆடவல்லான் பற்றிய சிந்தனைகளை நாகர் எவ்வாறு புரிந்து கொண்டனர் என்பதற்கும் தங்கள் உணர்வுகளை எவ்வாறு சிற்பக் கோலமாக வடிவமைத்தனர் என்பதற்கும் இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### 4. கொழும்பு அருங் காட்சியகத்து வெண்கலப் படிமம்

ஒரு விசித்திரக் கோலமான வெண்கலப் படிமம் கொழும்பு அருங்காட்சியகத்தில் உள்ளது. அது அநுராதபுரத்தின் நடுப்பகுதியிலுள்ள ஒரு தான சாலையிலிருந்து கொண்டு வரப்பட்டது. அதன் உயரம் 8.43 சென்ரிமீற்றர். அது நடனக் கோல மானது எனக் கலாசார முக்கோணத்தினர் கருதுவர். நூலில் வெளியிட்ட கருத்து தவறானது. அது ஆச னக் கோலமானது. அதன் அங்கலட்சணங்கள் விசி த்திரமானவை. இந்தப் படிமம் ஒன்பதாம் நூற்றாண்டுக்கு உரியதென்று கூறியுள்ளனர். அது முற்றிலும் தவறானது என்பது அதிலுள்ள எழுத்து க்களினாற் புலனாகின்றது. அதன் தலைப்பாகம் கலை நயத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. கண்கள் மூடிய கோலமானவை. மகரகுண்டலம், பத்திர குண்டலம் என்பவை சிவனது படிமங்களிற் போலக் காதணிகளாக உள்ளன. நெற்றிக்கு மேல் கபால மாலையின் இடத்தில் பாம்பு சுற்றியிருக்கும் வளையம் தெரிகின்றது. மகுடம் உச்சியிற் தட்டையான தொப்பி போன்றது. அதன் முன்புறத்தில் நாகபடம் தெரிகின்றது.

வடிவம் திரிபங்கமானது. வளைவுகள் உதரத்தி லும் கழுத்திலும் ஏற்படுகின்றன. இரண்டும் வலப்புறமாகச் சரிந்த கோலத்தைப் பெற்றுள்ளன. கழுத்தில் மூன்று மணிமாலைகள் ஆபரணங்களா கும். உபவீதத்தின் மெலிந்த உருவம் வலப்புறத் தோளிலிருந்து தொங்குவது தெரிகின்றது. இடக் கரம் தொடையில் ஊன்றிய நிலையிற் காணப் படுகின்றது. மேனோக்கி உயர்த்திய வலக்கரம் மணிக்கட்டின் மட்டத்தில் ஒடிந்து விட்டது.

இடப்புறத் தோள் முதலாக உதரத்தின் கீழ்மட்டம் வரை அரவமொன்று தொங்கும் கோலம் தெரிகின்றது. வயிற்றிலே புலித்தலை தெரிகின்றது. மணிணாகன் என்ற பெயர் கைகளிலும் மார்பிலும் பதிக்கப்பட்டுள்ளன. எழுத்துக்கள் கி.பி. முதலாம் நூற்றாண்டுக்குரிய தமிழ்ப்பிராமி வடிவங்கள். எனவே இப்படிமத்தின் காலமும் அதுவேயாகும். இது நாகர் உருவாக்கிய படிமம். இலங்கையிலுள்ள நாகர் உலோக வார்ப்புக் கலையிலே பயிற்சி பெற்றிருந்தமைக்கு இதுவுமொரு சான்றாகும். கி.பி. முதலிரு நூற்றாண்டுகளில் நாகர்குல மன்னர்கள் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்தமை குறிப்பிடற்குரியது.

### 5. காளாமுக வைரவர்

கோரமான முகபாவங் கொண்ட சிற்பமொன்று கொழும்பு அருங்காட்சியகத்தில் உண்டு. அது எங்கிருந்து கொண்டுவரப்பட்டது என்பது தெரியவில்லை. கருங்கல் வேலைப்பாடான இப்படிமம் 51.5 சென்ரிமீற்றர் உயரங் கொண்டது. அதில் எட்டுக் கரங்கள் அமைந்துள்ளன. கீழ் இடக்கரம் சூலம் ஏந்திய கோலமானது. இடப்புறத்து மேற்கரம் அபயகரம் போன்றது. வலப்புறத்து மேற்கரம் முன்புறமாக மடித்து உதரத்தின் மேற்படிந்தவாறு வாள் ஏந்தியுள்ளது. மற்றக் கைகள் எல்லாம் ஆயுதம் ஏந்தியுள்ளன.

முகபாவம் ரௌத்திர கோலமானது. சடாபாரம் விரிசடை போன்றது. இடைக்கட்டுகள் நாகபந்தம் போன்றவை. உடல் சற்றுத்தடித்துப் பருமையானது. இப்படிமத்தின் காலம் 12 ஆம் நூற்றாண்டென்று நிச்சயித்துள்ளனர். பெயர் பொறிக்கப்படாதவிடத்து அக்கருத்தினை நிராகரிப்பது கடினமாகும். ஆனாற் படிமத்திலுள்ள மணிணாகன் என்னும் பெயர் இக்கருத்தினைத் தகர்த்து விடுகின்றது.

பெயர் தமிழ்ப்பிராமி வடிவங்களில் எழுதப்பட்டுள்ளது. படிமம் முழுவதிலும் எழுத்து கள் நிறைந்துள்ளன. எழுத்துகளின் மூலம் படிமத்தின் காலம் வரையறையாகின்றது. அது கிபி மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகும். அது நாகரின் வேலைப்பாடு. அக்காலம் அளவில் இலங்கையிலுள்ள நாகர் சைவசமயப் படிமங்களைப் பற்றிய மரபுகளை அறிந்து கொண்டனர் என்று கருதமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வைரவர்,
பொலன்னறுவை



முன்னேஸ்வரம்
ஆதிகாலலிங்கம்

### 6. மகாகாள வைரவர்

சிற்றுருவமான இப்படிமம் பொலன்னறுவையிலுள்ள ஆலாஹன பிரிவெனாவின் அழிபாடுகளை அகழ்வு செய்தபோது கிடைத்தது. படிமத்தில் உதரமும் தலையும் சற்று பெருத்த கோலத்துடன் தெரிகின்றன. நான்கு கரங்கள் பொருத்தியுள்ளன. மேல் வலக்கரம் வளையம் போன்ற படைக்கலத்தை ஏந்தியுள்ளது. மற்றைய கரத்தில் வில் (?) போன்ற உருவம் தெரிகின்றது.

இடக்கரங்களில் ஒன்று உதரத்தின் மேற் படிந்துள்ளது. மற்றக் கரம் எருமைத்தலை போன்ற வடிவத்தைப் பற்றியுள்ளது. கழுத்தில் அரவம் போன்ற வடிவத்தில் மாலைகள் தொங்குகின்றன. முகத்தில் வெட்டுப் பற்கள் இரண்டும் நீண்டு வாய்க்கு வெளியே தெரிகின்றமை கோரத் தன்மையின் அடையாளங்களாகும். உதரபந்தத்தின் கீழ், சுருக்குகளுடன் தடித்த வஸ்திரம் கணைக்கால் வரை நீண்டுள்ளது. இது போன்ற கடவுட் படிமமொன்று இதுவரை இலங்கையில் வேறெங்கும் காணப்படவில்லை. மணிணாகன் என்ற பெயர் காணப்படுவதால் இது நாகரின் கைப்பணி என்பதும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்பதும் உணரப்படும்.

### 7. இஸுறுமுனியா அருங்காட்சியகத்துச் சிவன் - பார்வதி

இஸுறுமுனியாவிற் சிவன்-பார்வதி என்றும், காதலர் என்றும் வர்ணிக்கப்படும் வெவ்வேறு விதமாகக் கலாவிமர்சகர்களினால் அழகிய கோலமான சிற்பமுண்டு. இப்பொழுது அங்குள்ள அருங்காட்சியத்தில் அதனை ஒத்த வேறொரு சிற்பம் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. அது கடவுட் படிமம், சிவன், பார்வதி ஆகியோரின் படிமம். அது ஆதி பகவன் ஆகிய உமாமகேஸ்வரரின் படிமம். சிவனது ஆசனக் கோலம் வலப்பக்கத்திலும் இடப் பக்கத்தில் அம்மனின் உருவமும் அமைந்துள்ளன. இது பிற்பட்ட காலத்து உமாசகித மூர்த்தியின் முன்னோடியான வடிவம் என்று கொள்ளத் தக்கது.

கல்லில் ஏற்பட்டுள்ள அரிப்பின் காரணமாக உருவங்களின் முகபாவம் இயல்பான கோலத்திலே தெரியவில்லை. சிவனின் உருவத்தைச் சுற்றிப் பாம்பொன்றின் உருவம் வளையம் போலத் தெரிகின்றது. சடை விசாலமாக விரிந்த நிலையிற் காணப்படவில்லை. உருவத்தில் இரண்டு கைகள் மட்டுமே காணப்படுகின்றன. வலக்கரம் மடித்த கோலத்திலே வலக்காலில் அமைந்திருக்கின்றது. இடக்கரம் அம்மனை அரவணைக்கும் ஆலிங்க வடிவமாகும். அம்மனின் கரங்கள் பாம்பினைப் பிடித்த நிலையிற் காணப்படுகின்றன. இருவரின் படிமங்களிலும் கழுத்தணிகளும் காதணிகளும் மங்கிய கோலத்திற் காணப்படுகின்றன. படிமங்கள் செதுக்கிய கல்லின் மேற்பாகத்தின் வலது புறத்தில் நாகபந்தம் தெரிகின்றது. பல்லவர், சோழர் காலங்களில் இவ்வாறான அமைப்புக் காணப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரின் வழக்கான மணிணாகன் என்னும் கடவுட் பெயர் மீண்டும் மீண்டும் எழுதப் பட்டுள்ளமை இப்படிமத்தின் சிறப்பம்சமாகும். அதனால் இப்படிமம் நாகரின் வேலைப்பாடு என்பது உறுதியாகின்றது. பெயர் பிராமி வடிவங்களில் அமைந்திருப்பதால் இப்படிமம் கி.பி. நான்காம் நூற்றுண்டுக்கு முற்பட்டதாகும். நாகரின் வழிபாட்டு மரபிலுள்ள அம்சங்கள் சைவசமயத்திற் கலப்புற்றமைக்கு இச்சிற்பம் சிறந்தவொரு எடுத்துக் காட்டாகும்.

### 8. அநுராதபுரம் விஜயராமத்திலுள்ள உமாமகேஸ்வரர்

விஜயராமத்தின் கட்டடங்களில் ஒன்றின் அடித் தளத்திலே பல தேவகோட்டங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றிலே சிவன் - பார்வதியின் படிமம் அமைந்துள்ளது. படிமங்கள் ஸ்தானகக் கோலமா னவை. சிவனது வடிவத்தோடு ஒப்பிடுமிடத்து பார்வதியின் படிமம் அளவில் மிகவுஞ் சிறியது. உமாதேவியாரின் படிமத்தில் முகம் சிதைவாகிவிட் டது. கழுத்தணிகளான பல ஆரங்கள் தெரிகின்றன. கரங்கள் இரண்டும் ஏதோ ஒன்றினைப் பிடித்திருக்குமாப் போன்ற கோலத்தில் உள்ளன.



சிவன் பார்வதி, விஜயராம, அநுராதபுரம்

நான்கு கரங்களை உடைய சிவனின் படிமம் கலையழகு பொலிந்த வண்ணமானது கீழ் இடக் கரம் தேவியைப் பற்றியிருக்கும் ஆலிங்கனக் கோலத்திலுள்ளது. மற்றக்கரங்களில் மேல் இடக்கரம் அக்கினிக் கலசம் ஏந்தியுள்ளது. மேல் வலக்கரத்தில் டமருகத்தின் கோலம் தெரிகின்றது. கீழ் வலக்கரம் அபயகரம் போன்றது. மகுடம் கரண்ட மகுடம் போலத் தெரிகின்றது. அது அடுக் கடுக்காகப் பாம்பு வளைந்திருக்கும் அமைப்புப் போன்றது. உச்சியின் மேலே நாகபந்தங்கள் பிரமாண்டமான வடிவங்களாகச் செதுக்கப் பட்டுள்ளன.

நாகவழிபாட்டு மரபுகளோடு சைவசமயம் கலந் திருப்பதற்கு இப்படிமம் மற்றுமோர் உதாரணமா கும். இப்படிமமும் நாகரால் அமைக்கப்பட்டது. மணிணாகன் என்ற பெயர் படிமம் முழுவதிலும் எழுதப்பட்டுள்ளது. செதுக்கு வேலைப்பாட்டில் நாகர் உன்னதமான முன்னேற்றங் கண்டிருந்தனர் என்பதற்கு இப்படிமம் சிறந்தவொரு எடுத்துக் காட்டாகும்.

### 9. பொலன்னறுவை அருங்காட்சியகத்து வைரவர்

கலாசார முக்கோணத்தினர் பொலன்னறுவையில் நடத்திய அகழ்வாய்வுகளிற் கிடைத்த சைவசமயச் சார்புடைய படிமங்களில் ஒன்று வைரவரின் படிமம். பிரதிமாலட்சணங்களைப் பொறுத்த வரையில் அது மத்திய காலப் படிமங்களைப் போன்றது. அது லலிதாசனக் கோலமானது. முழந்தாள் மட்டத்திலே மடித்துத் தொங்கிய காலின் பாதம் ஊன்றிய கோலமானது. இடதுகால் மடித்து ஆசனத்தில் வைக்கப்பட்டுள்ளது. கணைக்காலில் வீரக்கழல்கள் போன்ற வடிவங்கள் தெரிகின்றன. அதனைச் சுற்றி வளைந்திருக்கும் பாம்பின் வடிவமாகவும் கொள்ளலாம்.

படிமத்தில் நான்கு கரங்கள் அமைந்துள்ளன. மேல்வலக்கரம் திருசூலம் ஏந்தியது. கீழ்வலக்கரம் அபயகரம். மேல் இடக்கரத்தில் அக்ஷமாலை போன்ற வடிவம் தெரிகின்றது. கீழ் இடக்கரத்திலே சுருண்ட பாம்பு போன்ற வளையம் தெரிகின்றது. முகபாவம் கோரமானது. மகுடம் கூம்பிய வடிவமானது. காதணிகள் அகன்று தொங்கும் கோலம் தெரிகின்றது. கழுத்து மாலையும் உபவீதமும் அமைந்துள்ளன. உதரபந்தம் இரு படைகளில் அமைக்கப்பட்டுள்ளது. தோள்வளை சற்றுப் பதிவாகி முழங்கைக்கு அண்மையிற் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொலன்னறுவையிற் கிடைத்த, நாகரின் வழிபாட்டு அம்சங்கள் கலந்த சிவபெருமானின் படிமம், அநுராதபுரத்து அபயகிரி விகாரையிற் கிடைத்த அர்த்தநாரி. ஏனையவை ஐந்தும் கற்படிமங்கள், அநுராதபுரத்திலே கிடைத்த ஆசன கோலமான சிவனின் படிமம் இவை அனைத்திலும் மணிணாகன் என்ற பெயர் தமிழ்ப்பிராமி வரி வடிவங்களில் அமைக்கப் பட்டுள்ளது. அதனால் அவற்றின் உற்பத்திக் காலத்தை வரையறை செய்யமுடிகின்றது.**

இது 12 ஆம் நூற்றாண்டுக்குரியதென்று இதனை வெளியிட்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆயினும், இதில் எழுதிய பெயரின் வரிவடிவங்கள் அக்கருத்தினை நிராகரிக்க வல்லவை. முன்னே குறிப்பிட்ட படிமங்களிற் போல இதிலும் மணிணாகன் என்ற பெயர் காணப்படுகின்றது. அது ஆதியான தமிழ்ப்பிராமி வரிவடிவங்களில் அமைந்துள்ளது. இலங்கையில் ஏழாம் நூற்றாண்டு வரை தமிழ்ப்பிராமி வடிவங்கள் புழக்கத்தில் இருந்தமையால் இச்சிற்பத்தை ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளுக்கு உரியதாகக் கொள்ளலாம். தமிழகத்தில் இவ்வாறான வடிவங்கள் அக்காலமளவிற் கிடைக்கவில்லை. ஆனால் வட இந்தியாவிற் கதை வேறுபட்டதாகும். வந்தாறு மூலையிலுள்ள நீர்முகப்பிள்ளையார் கோயிலிலும் மணிணாகன் என்ற பெயர் எழுதிய வைரவரின் படிமம் உள்ளமை குறிப்பிடற்குரியது.

### 10. அநுராதபுரத்திற் கிடைத்த அர்த்தநாரியின் வெண்கலப் படிமம்

அநுராதபுரத்து அபயகிரி விஹாரையின் அழிபாடுகள் பரவியுள்ள இடத்தை அகழ்வு செய்த பொழுது அர்த்தநாரியின் வடிவமான வெண்கலப் படிமங் கிடைத்தது. அதில் வழமைக்கு மாறாக இறைவரின் பாகம் இடப்புறத்திலும் இறைவியின் பாகம் வலப்புறத்திலும் அமைந்துள்ளன. சடை வலப்பக்கமாகச் சரிந்து காணப்படுகின்றது. அது புளியங்காய் வடிவத்திலே, பின்னிய நீண்டு தொங்கும் முடிச்சுகள் போலத் தெரிகின்றது. குண்டலங்களும் மகரமாகவும் தாடங்கமாகவும் வேறுபட்டுத் தெரிகின்றன.

அம்மனின் மேற்கரம் மேனோக்கி உயர்த்திய கரம். கையில் ஏதோ ஒரு பொருள் தெரிகின்றது. கீழ்க்கரம் தொங்கி வீசிய கரமாகும். கச்சைகட்டிய உதரபந்தமும் தெரிகின்றது. கீழ்க் கரத்தில் வளையல்கள் நிறைந்து காணப்படுகின்றன. உதர பந்தத்தின் கீழ் அம்மனின் ஆடை விசாலமான கோலத்தில் அளவுக்கு மேலாக அகன்று காணப்படுகின்றது. இறைவரின் காலுடை வஸ்திரமும் சாதாரணமான கோலமுடையவை. கீழ்க்கரத்தின் விரல்கள் சின்முத்திரைக் கோலத்தில் அமைந்துள்ளன. மேற்கரம் முழங்கை மட்டத்தில் மடித்து உயர்த்திய நிலையிற் காணப்படுகின்றது. தோளின் மேல் நாகபடம் தெரிகின்றது. முகபாவம் புன்முறுவற் கோலமானது. இப்படிமம் உன்னத தரமான உலோக வார்ப்பாகும். பிற்காலத்துப் படிமங்களிற் போன்ற விதமான பீடமில்லை. அது பழைமையின் அறிகுறியாகக் கொள்ளத்தக்கது. அதிலே பதிக்கப்பட்டுள்ள மணிணாகன் என்னும் பெயர் அதனை உறுதி செய்கின்றது. இது நாகரின் வேலைப்பாடு என்பதில் எதுவிமான ஐயமில்லை.

இக்கட்டுரையில் எல்லாமாகப் பத்து (10)த் தொல்பொருட் சின்னங்களின் விபரங்கள் விளக்கப்பட்டுள்ளன. அவற்றிலொன்று திருக்கோணேஸ்வரத்தின் ஆதியான நந்தி 2000 வருடங்களுக்கு முற்பட்ட காலத்திற்குரியது. இரண்டாவது முன்னேஸ்வரத்திலுள்ள இலிங்கம். அது அக்கோயிலின் ஆதியான இலிங்கம். ஏனையவற்றுள் மூன்று உலோகப் படிமங்கள்:

1. பொலன்னறுவையிற் கிடைத்த, நாகரின் வழிபாட்டு அம்சங்கள் கலந்த சிவபெருமானின் படிமம்.
2. அநுராதபுரத்து அபயகிரி விகாரையிற் கிடைத்த அர்த்தநாரி. ஏனையவை ஐந்தும் கற்படிமங்கள்.
3. அநுராதபுரத்திலே கிடைத்த ஆசன கோலமான சிவனின் படிமம்

இவை அனைத்திலும் மணிணாகன் என்ற பெயர் தமிழ்ப்பிராமி வரி வடிவங்களில் அமைக்கப் பட்டுள்ளது. அதனால் அவற்றின் உற்பத்திக் காலத்தை வரையறை செய்யமுடிகின்றது. அத்து டன் அவை அனைத்தும் நாகரின் வேலைகள் என்பதும் உறுதியாகின்றது. இலங்கையில் ஏற்பட்ட சிற்பக்கலை வளர்ச்சி, உலோக வார்ப்புக்கலை வளர்ச்சி என்பன நாகரின் சாதனைகளை மூலமாகக் கொண்டவை என்பதும் இப்பொழுது தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொம்பு முறிக்கொம்பு விளையாட்டுச் சடங்கு



மூதூர் பிரதேசத்தில் உள்ள பள்ளிக்குடியிருப்புக் கிராமத்தில் பாரம்பரிய சடங்காக நடைபெற்று வருகின்ற கொம்பு முறிக்கொம்பு விளையாட்டுச் சடங்கு பல நூற்றாண்டு காலமாக நடைபெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. கொம்பு என்பதற்கு விலங்குகளின் கொம்பு என்றும் மரங்களில் இயல்பாகவமைந்த வளைதடி என்றும் பொருள்



திருகோணமலை தேசமானது பல இன்னல் இடர்பாடுகளுக்கு மத்தியிலும் தனது பாரம்பரிய கலைகள், கலாசாரங்கள், மற்றும் பண்பாட்டுக் கூறுகளை இறைவழிபாடுகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் மூலமாக இளம் சந்ததியினருக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில் மூதூர் பிரதேசத்தில் உள்ள பள்ளிக்குடியிருப்புக் கிராமத்தில் பாரம்பரிய சடங்காக நடைபெற்று வருகின்ற கொம்பு முறிக்கொம்பு விளையாட்டுச் சடங்கு பல நூற்றாண்டு காலமாக நடைபெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. கொம்பு என்பதற்கு விலங்குகளின் கொம்பு என்றும் மரங்களில் இயல்பாகவமைந்த வளைதடி என்றும் பொருள்.

கடந்தகால யுத்த சூழலினால் மூதூர் பிரதேசத்தின் பாரம்பரிய கலைகளான கும்மி, வசந்தன், கோலாட்டம், குரவை, பறை, சிலம்பாட்டம், நாட்டுக்கூத்து போன்றவைகளை வளர்த்தெடுக்க முடியாத சூழல் காணப்பட்டது. பல எண்ணிக்கையிலான அண்ணாவிமார்களினால் கலைகள் வளர்க்கப்பட்டு உன்னத நிலையில் இருந்த கொட்டியாரபுரப்பற்று பிரதேசம் (இன்றைய மூதூர், சேருவில மற்றும் ஈச்சிலம்பற்று) இன்று அதன் தனித்துவத்தை அங்கொன்றும் இங்கொன்றுமாக பேணிக்கொண்டிருப்பது யதார்த்தமாகும். இதற்கு இப்பிரதேச வாழ் தமிழ் மக்களின் நிலத்தொடர்ச்சி துண்டாடப்பட்டமையும் அரசியல் அநாதரவுத் தன்மையும் இங்கு தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த வன்செயல்களும், மக்களின் விழிப்புணர்வுக் குறைவுமே காரணங்கள் எனலாம்.

இக்கொம்பு முறிக்கொம்பு விளையாட்டு (கொம்புமுறித்தல் விளையாட்டு) ஐந்து வருடங்களுக்கொரு முறை நடாத்தப்படுகின்றது. பரம்பரை பரம்பரையாக நடைபெற்று வந்த

வைத்திய கலாநிதி
அருமைநாதன் ஸதீஸ்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விளையாடத்தயாராகும்
வடசேரி, தென்சேரி பிரிவினர்

இச்சடங்கு 1976ஆம் ஆண்டு நடைபெற்ற பின் தொடர்ந்து வந்த 34 வருடங்களுக்கு நடாத்தப்பட முடியாத சூழ்நிலை காணப்பட்டது. ஆனால் இக்கிராம மக்களின் அயராத முயற்சியினால் கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் ஐந்து வருடங்களுக்கொருமுறை நடாத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டு நடாத்தப்பட்டும் வருகின்றது.

இக்கொம்புமுறி விளையாட்டானது மழையை வேண்டியும், மக்களை அம்மன் நோய், வெப்பு நோய், கோதாரி, கொள்ளை நோய் முதலியவை அணுகாமல் இருப்பதற்காகவுமே நடாத்தப்பட்டு வருவதாக இவ்வூர் மக்கள் கூறுகின்றனர்.

கொம்பு விளையாட்டு பொதுவாக மதுரையை எரித்த கண்ணகியின் காலத்துடன் ஆரம்பிக்கப் பட்டதாக அறியப்படுகின்றது. கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங் களின் பல கிராமங்களில் மிகச்சிறப்பான முறையில் பக்தியுடன் கொம்புமுறி விளையாட்டு நடைபெற்று வருகின்றது.

இவ்வாறே கொம்புமுறிப்பு நிகழ்த்தப்படும் இடங்களும் கொம்புச்சந்தி அல்லது கொம்பு முறிப்புச்சந்தி என்று அழைக்கப் படுவதையும் நாம் காணமுடிகின்றது. பள்ளிக்குடியிருப்பிலும் கொம்புமுறிச்சந்தி என்னுமோர் இடமும் உள்ளது.

இதேபோல் மட்டக்களப்பிலும் களுதாவளை கொம்புச்சந்தி, காரைதீவு கொம்புச் சந்தி, மண்டூரிற் கொம்பு வம்மியடி போன்ற இடங்கள் காணப் படுகின்றன.

இவ்விளையாட்டின் போது மக்கள் வடசேரி, தென்சேரி என இரு பிரிவுகளாகப் பிரிந்து கொள்ளு வர். வடசேரியாரது தெய்வமாகச்சிவனும் தென்சேரியாரது தெய்வமாக உமாதேவியும் கொள்ளப்படுவர். (இங்கு பத்தினித் தெய்வமாகிய கண்ணகி உமாதேவியாகவே நோக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.)

## கொம்புமுறிப்பு சொல்லும் கதை

மட்டக்களப்பு பகுதியில் சிலப்பதிகாரத்து கண்ணகி-கோவலன் வரலாற்றின் வழியாக, மதுரையை எரித்து வெளியேறிய கண்ணகியின் சினந்தணிய ஆடிய விளையாட்டாக இது நோக்கப் படுகின்றது.

ஆனால் இங்கு வழக்கிலுள்ள பிறிதொரு கர்ண பரம்பரைக் கதையின்படி, சிவனும் உமையும் கானகத்தின் இயற்கைக் காட்சிகளை இரசித்துக் கொண்டு வருகின்றபோது அழகிய நீர்த்தடாகம் ஒன்றைக் கண்டனர். அதனுள்ளே மலர்ந்து நறுமணம் வீசிக்கொண்டிருக்கும் செந்தாமரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலரைக்கண்ட உமாதேவியார் அதனைப் பறித்துத் தரும்படி இறைவனை வேண்டினார். இறைவனும் ஒரு கொக்கைத் தடி கொண்டு அம் மலரைப் பறிப்பதற்கு ஆயத்தமானார். இதே போன்று தேவியும் கொக்கைத் தடியொன்றைக் கொண்டு மலரைப் பறிக்க முற்படுகையில் இருவரது கொக்கைத்தடிகளும் ஒன்றை யொன்று கொழுவிக் கொண்டது. இருவரும் தமது கொம்புகளை இழுக்கும் போது தனது தாய் நீர்த்தடாகத்தினுள் விழப்போவதைக் கண்ட முருகப் பெருமான் தாயின் பக்கமாக நின்று இழுத்ததாகவும், இதன்மூலம் தேவிக்கு வெற்றி கிட்டியதாகவும் கூறப்படுகிறது.


செந்தாமரை உள்ள தடாகம்

இதன் காரணமாகவே கொம்பு இழுப்பின் போது வடசேரி மற்றும் தென்சேரியினர் இங்கு சிவன், உமையாக உருவகிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

## நீலாப்பளை தாயம்மன் கோயில்-பாட்டுவாழிக்குடியினர்

இங்கே கொம்பு முறிக்கொம்பு சடங்குக்கு நீலாப்பளை என்னும் ஊரிலுள்ள தாயம்மன் (பத்தினியம்மன்) கோவில் பூசகர் பாரம்பரிய முறைப்படி அழைத்துவரப்படுவார். இவரே பிரதம பூசகராகவும் செயற்படுவார். இந்நடைமுறையே ஆதிகாலந்தொட்டு இன்றுவரை நடைபெற்று வருகின்றது.

இலங்கை வேந்தன் கஜபாகு கண்ணகி விழாவுக்கு சேரநாடு சென்றிருந்த போது, சந்தன மரத்தால் செய்த கண்ணகி உருவமும், ஒரு சிலம்பும் சந்தன மரப்பலகையால் செய்த பேழையில் வைத்து கஜபாகுவுக்கு செங்குட்டுவன் மன்னன் கொடுத்தான். பாண்டிய அரசன் வெற்றிவேற் செழியன் யானை மேல் அரசனையும் சந்தனப் பேழையையும் ஏற்றி வேதாரணியம் வரை கொண்டுவந்து விட்டிருந்தான். பின் அங்கிருந்து கப்பல் மூலம் இலங்கையின் திருவடிநிலையில் இறங்கிய இவர்கள் யானை ஊர்வலமாக திருவடி நிலையிலிருந்து அங்கணாமைக்கடவை, வேலம் பாறை, வன்னியூடாக வற்றாப்பளை, சாம்பல்தீவு, திருகோணமலை, தம்பலகாமம், பாலம்போட்டாறு வழியாக நீலாப்பளை வரை சென்றனர். அங்கிருந்து தாவளமாட்டின் மூலமாக மட்டக்களப்பு கோராவெளி முதலான பலவிடங்களினூடாக கண்டிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக வரலாறு கூறுகின்றது.

இப்பத்தினியம்மன் கோவில் பூசகராக 'பாட்டு வாழிக்குடி'யைச் சேர்ந்தவர்களே தாய்வழியாக (மருமக்கள் - தாயமுறை)ஆதிகாலந் தொட்டு இருந்து வருவது வழமை. இவர்கள் மூதூர்ப் பிரதேசத்திலுள்ள சம்பூர் கிராமத்தில் காணப் படுகின்ற பன்னிரண்டு குடிகளைச் சேர்ந்த மக்களுள் ஒரு குடியினராவர். இவர்கள் பத்தினி(கண்ணகி) வழிபாட்டை இலங்கைக்குக் கொண்டு வந்த கஜபாகு மன்னனே தங்களை அழைத்து வந்ததாகக் கூறுவர். இம்மன்னன் காலம் கி.பி 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். மூதூர், சேருவில, ஈச்சிலம்பற்று, வெருகல், கதிரவெளி, வாகரை போன்ற இடங்களிலுள்ள பத்தினியம்மன் கோவில் வேள்விகளை நீலாப்பளைத் தாயம்மன் கோவில் பூசகரே தலைமை தாங்கி நடத்துவது இக்காலம் வரை தொடர்கிறது.

## கொம்பு முறிக்கொம்புச் சடங்கு

இச்சடங்குக்கான ஆரம்ப நிகழ்வு ஆவணி, புரட்டாதி மாதத்தில் ஆரம்பிக்கும். இதன்போது இரண்டு தேங்காய்கள், ஐயனார் வேள்விக்காக ஒரு ஆட்டுக்கடா, வடசேரி, தென்சேரியினருக்கான கொம்புகள் போன்றவைகளை மோராண்டார் குளக்கட்டில் அமைந்துள்ள பத்தினியம்மன் ஆலயத்தில் வைத்து வழிபாடியற்றப்படும். பின் ஆட்டுக்கடாவை எடுத்த பட்டியிலேயே விட்டு விடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி அல்லது ஆனி மாதத்தில் கொம்பு விளையாடுவதற்கென உள்ள பகுதியில் பாரம்பரிய முறைப்படி தென்னோலைகளாலான இரண்டு குடிசைகள் கிழக்கு நோக்கியவாறு கட்டப்படும். பெரிய குடிசையில் சுவாமியும் சிறிய குடிசையில் கொம்புத் தலைவர்கள், விரதகாரர்கள், பாட்டு வாழியார் (பிரதம பூசகர்), மேளகாரர்கள் போன்றோரும் இருப்பர். கொம்புகள் இரண்டும் வைப்பதற்காக கொம்புமால் அமைக்கப்படும். இங்குதான் கொம்புகளுக்கான பூசைகள் இடம்பெறும்.

முதிரை, கருங்காலி, பாலை போன்ற உறுதியான மரங்களிலிருந்து கொம்புகள் தயாரிக்கப்படும். வடசேரி மற்றும் தென்சேரியினர் தங்களுடைய சுவாமிகளுக்கான தேர்களை மிகவும் சிறப்பானதாக அலங்காரங்களுடன் வடிவமைப்பர்.

இறுதிநாள் முழுமதி நிலவாக இருக்கத்தக்கவாறு, கொம்பு முறிக்கொம்பு விளையாட்டுச்சடங்கு நடைபெறுவதற்குரிய நாள் தீர்மானிக்கப்படும். அதற்கு முதல்வரும் வெள்ளிக்கிழமை பத்தினியம்மன் ஆலயத்தில் வைக்கப்பட்ட தேங்காய்கள், கொம்புகள் போன்றவை கொம்பு முறிச்சந்தியில் அமைக்கப்பட்ட தற்காலிகக் கொட்டிலுக்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு வழிபாடியற்றப்பட்டு இரு தேங்காய்களும் கொம்புத் தலைவர்கள் மூலம் போர்த்தேங்காய் அடித்துடைத்து விழா ஆரம்பித்து வைக்கப்படும்.

இதற்கு முன்னர் நீலாப்பளை பத்தினியம்மன் ஆலயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட தீர்த்தத்துடன் மோராண்டார் குளக்கட்டு விநாயகர் தீர்த்தமும் கலக்கப்பட்டு வீதிகள் மற்றும் வீடுகளுக்குக் கட்டுமானம் செய்யப்படும். மக்களும் சைவ உணவுகளையே உண்டு விழா முடியும் வரை பத்தியுணர்வுடன் காணப்படுவர்.

## இலங்கைக் காவலனுக்குத் தீ மூட்டல்

முதல்நாளில் போர்த்தேங்காய்கள் உடைக்கப்பட்டு பூசை வழிபாடுகள் ஆரம்பமாகும். அடுத்து இலங்கைக் காவலனுக்கு காவற்கட்டைகள் கொண்டு தீ மூட்டும் சடங்கு இடம்பெறும். நேர்த்தி செய்த மக்கள் இக்காவற் கட்டைகளை வழங்குவர். இங்கு இலங்கைக் காவலன் யார்? எந்தக் கடவுள் அல்லது எந்த தேவதை? என்பது உறுதியாகக்கூற முடியாத நிலையில் இது ஆய்வுக்குரியதொன்றாகவே காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொம்பிழுத்து வசை பாடுதல்

இங்கு ஒவ்வொரு நாளும் வடசேரி மற்றும் தென்சேரி பகுதியினர் தம்பான் கயிறு கொண்டு கொம்பு இழுப்பர். இதன் போது வென்ற பகுதியினர் மற்ற சேரியினருக்கு வசைபாடி வாழ்த்துவர். இவ்வாறு எட்டு நாட்களும் பூசை வழிபாடுகளும் இருதேர்களின் ஊர்வலங்களும் வசைபாடுதலும் இடம்பெறும். வசைப்பாடல்களுள் சில!

*''வடசேரியான் கொம்பு எங்கே எங்கே
மணமுள்ள தாழை மரத்தினுள்ளே.. உள்ளே
தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே
தென்கோடி மூலைக்குள்ளே... உள்ளே''*

*''வடசேரியான் கொம்பு எங்கே எங்கே
வண்ணான்ட சாடிக்குள்ளே.. உள்ளே
தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே
சித்திரத் தேருக்கு மேலே மேலே''*

*''வடசேரியான் கொம்பு எங்கே எங்கே
மணமுள்ள தாழை மரத்தினுள்ளே... உள்ளே
தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே
தென்கோடி மூலைக்குள்ளே... உள்ளே''*

*''வடசேரியான் கொம்பு எங்கே எங்கே
மணமுள்ள தாழையின் மேலே மேலே
தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே
செம்பர பற்றைக்குக் கீழே கீழே''*

*''ஒகோ கோ தென்னா னே
மன்றும் மனையும் தழைக்கத் தழைக்க
மக்களும் சுற்றமும் வாழ்க வாழ்க
என்றும் சுகமாய் இருக்கவும் வேணும்''*

*''எப்போதும் எம் கொம்பு வெல்லே வெல்லே
நாளைக்கும் எம் கொம்பு வெல்லே வெல்லே
தென் சேரியான் எங்கே எங்கே
செய்வதறியாது ஒடுகிறுன்
ஒகோ கோ தென்னா னே..!''(5)*

இவ்வாறான வசைப்பாடல்களும் இதைவிடக் கீழான வசைப்பாடல்களும் இங்கு பாடப் படுகின்றன.

### தேர்களின் வீதிவலம்

மூன்றாம் நாள் அதிகாலை பூசை முடிந்ததும் ஆலயத்தில் இருந்து தென்சேரி (உமை), வடசேரி (சிவன்) தேர்கள் பள்ளிக்குடியிருப்பிலிருந்து மூதூர் பிரதான பாதை வழியாக பாலத்தடிச்சேனை,



பட்டித்திடல், மணல்சேனை, பெரியவெளி, மல்லிகைத்தீவு போன்ற கிராமங்களுக்கூடாக நீலாப்பளை பத்தினியம்மன் கோயிலை சென்றடையும். இதன் போது சிவன்தேரை விட அம்மனின் தேர் விரைவாகச் செல்வதைக் காணலாம்.

கோயில் பூசை வழிபாடுகள் நிறைவடைந்ததன் பின்னர் அதே வழியாக இருதேர்களும் மீண்டும் பள்ளிக்குடியிருப்பை வந்தடையும். இதன்போது வீதிகள் தோறும் தோரணங்களும் பூரண கும்பங் களும் தேர்களை வரவேற்கும். வழியிலே மோர், அன்னதானம் வழங்குதல், வசந்தன் ஆடுதல், குரவையிடுதல், கும்மி, கோலாட்டம் ஆடுதல், பறை அடித்தல் போன்ற நிகழ்வுகளில் வழி யிலுள்ள கிராம மக்கள் ஈடுபடுவதைக் காணலாம். இன்றும் கூட இவற்றுள் பல நிகழ்வு கள் பாரம்பரிய முறைப்படியே காலாகாலமாக இடம்பெறுவதாக முதியவர்கள் கூறுகின்றனர்.

அத்தோடு மூன்றாம் நாளிரவு ஐயனார் வேள்விக் காக நேர்ந்து விடப்பட்ட ஆட்டுக்கடா பலியிடும் நிகழ்வு நடைபெறும். ஐயனாரை இவ் ஊரைக் காக்கும் காவல் தெய்வமாக கருதியே இவ்வேள்வி இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

இதே போல ஐந்தாம் நாள் காலை பூசையின் பின்னர் தேர்கள் மீண்டும் தங்கபுரம், கணேசபுரம், கட்டைபறிச்சான் வழியாக சேனையூரைச் சென்ற டையும். அங்கு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்திலும் அருள்மிகு ஸ்ரீ வர்ணகுலப் பிள்ளையார் ஆலயத்தி லும் பூசை தாகசாந்திகளை ஏற்றவாறு இரு தேர்களும் பள்ளிக்குடியிருப்பை சென்றடைந்து ஊர்வலத்தை நிறைவு செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாம் நாள் இரவு கும்மி, கோலாட்டம், காவியங்கள், நாட்டுக்கூத்து போன்ற இன்னோரன்ன கலைநிகழ்வுகளுடன் இந்துசமய கலாசார நிகழ்வுகளும் இடம்பெறும்.

## இறுதி நிகழ்வு

ஒன்பதாம் நாள் அதிகாலையில் வடசேரி மற்றும் தென்சேரியினரின் இரு கொம்புகளும் கொழுவுப் பட்டு, மான்தோலால் திரிக்கப்பட்ட வெழுக் கயிற்றினால் இரு கொம்புகளும் கட்டப்படும். பின் பெரிய நீளமான தம்பாங் கயிறுகளால் இரு கொம்புகளும் கட்டி இழுக்கப்படும்.

தென்சேரிப் பக்கமாக வைரம் நிறுத்தி மரம் முருகப் பெருமானாக ஆவாகனப்படுத்தப்படும். (இது தனது தாயான உமாதேவியாருக்கு முருகப் பெருமான் உதவி செய்ததை நினைவூட்டுகின்றது.) தென்சேரியினர் வைரம் நிறுத்தி மரத்தில் ஒரு சுற்று சுற்றி (அடுவை) பிடிக்க, பூசகரின் தலைப்பாகைச் சைகை மூலம் கயிறு இழுத்தல் ஆரம்பமாகும்.



கொம்புமுறி விளையாட்டை ரசிக்க ஆவலுடன் குழுமியிருக்கும் மக்கள்

இரு பகுதியினரும் வெல்லே வெல்லே என்று கயிற்றைப் பிடித்து இழுப்பர். இறுதியாக இதில் தென்சேரியினரே (அம்மன்) வெற்றி கொள்வர். பின்னர் இருபகுதியினரதும் வாழ்த்துதல் இடம் பெறும்.

## வாழி பாடுதல்

கொம்பிழுத்தல் முடிவடைந்ததும் பூசைவழிபாடுகள் இடம்பெறும். மாலை பூசையைத் தொடர்ந்து இரு பிரிவினரும்

சேரி வாழ்க!
செஞ்சேரி வாழ்க!
நோய்நொடியின்றி மக்கள் வாழ்க!

என வாழி பாடி ஊர் சுற்றி முடிந்து ஆலயத்தை வந்தடைந்ததும் மூன்று மண்பானைகளில் விநாயகருக்கும் மற்றும் இறைவன், இறைவிக்கும் பொங்கிப் படைத்து, பூசைகள் முடித்து, நள்ளிரவில் நிகழ்வு இனிதே நிறைவடையும்.

இக்கொம்பு விளையாட்டு நிகழ்வானது திருகோணமலை மாவட்டத்தில் பள்ளிக்குடியிருப்புக் கிராமத்திலேயே நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வு மிகவும் பயபக்தியுடனும் தங்கள் மூதாதையினர் வழியாக வருகின்ற இச்சடங்கை தாங்களும் கடைப்பிடித்து ஊர் சிறக்கவும் செழிப் படையவும் வைப்பதற்கு இவ்வூர் இளைஞர்கள் முன்னின்று பல செயற்பாடுகளிலும் ஈடுபடுவதைப் பார்க்கும் போது இந்துமதம் இன்னமும் இப் பிரதேசத்தில் செழிப்புடனிருக்கின்றது என்னும் நம்பிக்கை ஏற்படுகின்றது.

### அடிக்குறிப்புகள்

1. பள்ளிக்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மகாகும்பாபிஷேக சிறப்பு மலர் (2000)- கட்டுரையாக்கம் - திரு.வி. பாக்கியராசா
2. மேலது - கட்டுரையாக்கம் - திரு.செ. எதிர்மன்னசிங்கம்
3. கொம்புமுறிக்கொம்பு விளையாட்டுப் பெருவிழாவும் கிராமியச் சிறுதெய்வ வழிபாடுகளும் (2015) - கலாபூசணம் த. சிதம்பரப்பிள்ளை (பக் - 20)
4. பத்தினி வழிபாடு (1978) - சி. கணபதிப்பிள்ளை (பக்-5, 6 )
5. பள்ளிக்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மகாகும்பாபிஷேக சிறப்பு மலர் (2000)- கட்டுரையாக்கம் - திரு.வி. பாக்கியராசா
6. மட்டக்களப்புத் தமிழகம் (1964ற3சவசளய)- வித்துவான், பண்டித வி.சீ. கந்தையா (பக்-184, 185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகக்கல்வியின் குறியீடாக விளங்கும் அட்டன் ஹைலண்ட்ஸ் மத்திய கல்லூரி

## 125ஆவது வருடத்தை நோக்கிய கல்விப்பயணம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக நகரங்களைப் பொறுத்தவரை சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் கிறிஸ்தவ அமைப்புக்களான மெதடிஸ்ட் திருச்சபை மற்றும் ரோமன் கத்தோலிக்க திருச்சபையான புனித ஜோசப் சங்கம், அங்கலிக்கன் திருச்சபை ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட கல்லூரிகளே இன்று புகழ் பூத்தனவாக விளங்குகின்றன. அந்த வகையில் மலையகத்தின் பழைமையான நகரங்களில் ஒன்றான அட்டன் மாநகரில் உருவானதே ஹைலண்ட்ஸ் கல்லூரி. இது அட்டன் மெதடிஸ்த திருச் சபையால் 1893 ஆம் ஆண்டு மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையாக உருவானதாகும். அடுத்த வருடம்(2017) இக்கல்லூரி தனது 125 ஆவது ஆண்டில் காலடி எடுத்த வைக்க உள்ளது.




### அட்டன் மெதடிஸ்த சபை

இலங்கையில் 1814 களில் மெதடிஸ்த சபைகள் உருவாகின. ஆரம்பத்தில் தலைநகரில் முதலாவது மெதடிஸ்த்த ஆலயம் 1816 இல் அமைக்கப்பட்டது. (Wesleyan Mission House) இது ஆசியாவிலேயே பழைய மெதடிஸ்த ஆலயமாக இன்றும் விளங்குகிறது. ஆரம்ப காலத்தில் இலங்கையில் இச்சபைகள் அமைந்திருந்த இடங்களை இரண்டு பிரதான பிராந்தியங்களாக வகுத்திருந்தனர்.

1. தென் பிராந்திய மாவட்டம் (South Ceylon District)
2. வட பிராந்திய மாவட்டம் ( North Ceylon District )

இதில் தென் பிராந்திய மாவட்ட பிரிவிலேயே பிரதான நகரங்களான கண்டி,அட்டன், தலவாக்கலை,பதுளை ஆகிய மெதடிஸ்த நிலையங்கள் மற்றும் ஆலயங்கள் அடங்குகின்றன.

அட்டன் பணி நிலையம் மற்றும் ஆலயம் என்பன 1889 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டன. எனினும் 1887 ஆம் ஆண்டே இங்கு தமிழ் மொழிகளிலான நடவடிக்கைகள் ஆரம்பமாகின. தென் பிராந்திய நிலையங்களில் முதன் முதலாக தமிழ் நிலையமாக 1905 ஆம் ஆண்டு அட்டன் மெதடிஸ்த்த நிலையம் உருப்பெற்றது. அக்காலத்தில் இதற்கு அருட் தந்தை ஏ.எஸ்.பீட்டி (1907-1919) என்பவர் பொறுப்பாக இருந்தார். (A.S.Beaty) பின்னர் அருட்தந்தை எச். ஆர்.கோர்னிஷ் (H.R.Cornish 1920 - 1929) பொறுப்பாகவிருந்தார். இவர்கள் இருவர் உட்பட பிற்காலத்தில் அட்டன் நிலையத்தின் பணிப்பாளர்களாக கடமையாற்றிய அருட் தந்தையர்களான சி.தோர்ப் (C.Thorph), ஆர்.ஏ.நெல்சன் (R.A.Nelson), டபிள்யூ. ஓ.பெவன் (W.O.Bevan) ஆகியோரே அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி உருவாக முக்கியஸ்தர்களாக இருந்தவர்கள்.


### ஆலய வளாகத்தில் ஆங்கில கல்லூரி

அட்டன் மெதடிஸ்த ஆலயத்திற்கு அருகாமையில் முதன் முதலாக 1893 ஆம் ஆண்டு இரண்டு சிறிய பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒன்றில் ஆங்கில மொழியும் அடுத்ததில் உள்ளூர் மொழி களான சிங்களமும் தமிழும் போதிக்கப்பட்டன. இந்த இரண்டு பாடசாலைகளே அட்டன் பிராந்தியத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரசாயனவியல் ஆய்வு கூடம்



உயிரியல் ஆய்வு கூடம்



ஆரம்பப்பிரிவு கட்டிடங்கள்

கல்லூரிகளாக இனங்காணப்பட்டன. இவை மெதடிஸ்த மிஷன் கல்லூரி மற்றும் மெதடிஸ்த ஆங்கிலக்கல்லூரி என்றே பெயர்கொண்டு அழைக்கப்பட்டன.

நாளடைவில் இப்பாடசாலைகளுக்கான மாணவர் தொகை அதிகரிக்கவும் பாடசாலையை விரிவுபடுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்கு தற்போதைய கல்லூரி அமைந்திருக்கும் மேட்டு நிலப்பகுதியில் அமைந்திருந்த மெதடிஸ்த பிரதான கட்டிடத்திற்கு அருகாமையில் (Mission House) திருச்சபைக்கு சொந்தமான இடத்தில் கட்டிடம் ஒன்றை அமைக்க முடிவு செய்யப் பட்டது. அதன் படி மெதடிஸ்த ஆலயத்தின் அருகாமையில் இயங்கிய ஆங்கிலப் பாடசாலை யைத் தரமுயர்த்த முடிவு செய்யப்பட்டது.

## ஹைலண்ட்ஸ் கல்லூரி

அதன் படி 1941 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி ஆலயம் மற்றும் சபையின் தலைவராக இருந்த அருட்தந்தை எச்.ஆர்.கோர்னிஷ் என்பவரால் மேற்படி காணியில் தளம் வெட்டப்பட்டு கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இக்கல்லூரி 1942 ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. இதற்கு கோர்னிஷ் கட்டிடம் என பெயரிடப் பட்டது. மேலும் இக்காலத்தில் கல்லூரி அதிபராக சாம் சீவரட்ணம் கடமையாற்றினார். இவரே இக்கல்லூரிக்கு ஹைலண்ட்ஸ் (Higlands) என



பாடசாலை வளாகத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தின் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாம் சீவரட்ணம்
1939-1947



எஸ்.சி.ஜெயசிங்
1953-1964



பி.ஏ. செபஸ்டியன்
1964, 1965-1969, 1977



இர.சிவலிங்கம்
1964-65, 1970-71



சி.சந்திரசேகரன்
1969-1970, 1971




எஸ்.திருச்செந்தூரன்
1971-1976




எஸ்.கிருஷ்ணன்
1976-1977, 1982-1984




திருமதி செல்லம் சிவசிதம்பரம்
1977-1982



வி.நம்பியய்யா
1984




என்.பாலசுந்தரம்
1984, 1997-1999




கே.மெய்யநாதன்
1984-1986



கே.பி.மாயாவதாரம்
1989



ஏ.எஸ்.குமார்
1989-1991



எம்.சுந்தரலிங்கம்
1991-1994



எம்.ரெங்கராஜ்
1994-1997

பெயரிட்டார். புவியில் ரீதியாக பார்க்கும் போது அட்டன் பிரதேசம் மேட்டு நிலமாகும். மேலும் தற் போதைய கல்லூரியின் முதல் கட்டிடம் அமைந்த இடம் மேட்டு நிலமாகும். ஆகவே கல்லூரியின் அமைவிடத்தைப் பொறுத்து அதற்கு ஹைலண்ட்ஸ் (Highlands) என்ற பெயரை அப் போதைய அதிபர் சூட்டியிருக்கலாம். அதே போன்று இக்கல்லூரியின் ஸ்தாபகர்களின் பெயர்களிலேயே கோர்னிஷ், நெல்சன், தோர்ப் மற்றும் சௌரத் ஆகிய இல்லங்கள் அமைந்துள்ளன.



எஸ்.விஜயசிங்
1991, 1999 இப்போது வரை

### *மாணவிகள் விடுதி (பீட்டி சென்டர்)*

மெதடிஸ்த திருச்சபைக்கு சொந்தமான இடத் தில் (ஹைலண்ட்ஸ் கல்லூரிக்கு அருகாமையில்) அமைந்துள்ளதே பீட்டி சென்டர் பெண்கள் விடுதியாகும். (Methoist Beaty Girls Hostel) இதில் மாணவிகள் தங்குவதற்கு மட் டுமே அனுமதி வழங்கப்பட்டு வந்தது. இப்போது வரை அந்த மரபு கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் ஹைலண்ட்ஸ் கல்லூரி கலவன் பாட சாலையாக மாறிய பின்பு இங்கு கல்வி கற்ற மாணவிகள் தங்கியிருந்தனர். பின்பு ஏனைய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவிகளும் இங்கு தங்க அனுமதிக்கப் பட்டனர். 1907 இலிருந்து 1919 ஆம் ஆண்டு வரை அட்டன் திருச்சபைக்கு பொறுப்பாக இருந்த அருட்தந்தை ஏ.எஸ்.பீட்டி அவர்களின் நினைவாக அவரது பெயர் விடுதிக்கு வைக்கப்பட்டது. அட்டன் மெதடிஸ்த ஆலய நிர்வாகத்தின் கீழ் இன்று வரை இவ்விடுதி சிறப்பாக இயங்கி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வளர்ச்சிப்படிகளில் அதிபர்களின் பங்களிப்பு

அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் வளர்ச்சிப் படிகளில் அதன் அதிபர்களே செல்வாக்குச் செலுத்தியுள்ளனர் என்றால் மிகையாகாது. அதிபர் சாம் சீவரட்ணத்திற்குப்பிறகு சாம் தம்பாப் பிள்ளை, எஸ்.சி.ஜெயசிங், ஏ.செபஸ்டியன், இர.சிவலிங்கம், வீ.ஏ.செபஸ்டியன்,எஸ்.திருச் செந்தூரன், எஸ்.கிருஷ்ணன், முதல் பெண் அதிப ரான திருமதி செல்லம் சிவசிதம்பரம், என்.பால சுந்தரம், கே.மெய்யநாதன், பி.மாயாவதாரம், எஸ்.குமார், எஸ்.சுந்தரலிங்கம், எம்.ரெங்கராஜ், மற்றும் இப்போதைய அதிபர் எஸ்.விஜயசிங் ஆகியோரது பங்களிப்பிலும் அர்ப்பணிப்பிலும் கல்லூரி பல துறைகளில் வளர்ச்சி கண்டுள்ளது.

### இர.சிவலிங்கம் மற்றும் எஸ்.திருச்செந்தூரன் ஆகியோரின் காலகட்டம்

அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் விடிவெள்ளி காலமாக இவர்கள் இருவரின் காலகட்டம் இன்று வரை சிலாகித்துக் கூறப்படுகிறது. 1964 ஆம் ஆண்டு இக்கல்லூரியின் அதிபராக பொறுப்பேற்ற இர.சிவலிங்கம் அவர்கள் கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத் தக்கது. இவர் தலவாக்கலை லிந்துலை பகுதியைச் சேர்ந்தவர். இவரின் காலப்பகுதியிலேயே கல்லூரியிலிருந்து முதன் முதலாக மாணவர் குழு ஒன்று பல்கலைக்கழகம் சென்றது. பல துறைகளில் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பங்காற்றினார் இர.சிவலிங்கம் அவர்கள். இவர் ஒரு சட்டத்தரணியுமாவார். தனது தமிழ் மற்றும் ஆங்கிலப் புலமையால் அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி சமூகத்தை மட்டுமன்றி இப்பிரதேச இளைஞர்களை வழிநடத்தியதால் இவர் இளைஞர் தளபதி என



வாசிகசாலை



ஆரம்பப்பிரிவு கட்டிடங்களுக்கு முன்னால் அமைந்துள்ள கலைமகளின் சிலை

அழைக்கப்பட்டார். அடுத்ததாக 1971 ஆம் ஆண்டு அதிபராக பொறுப்பேற்ற எஸ்.திருச்செந்தூரன் அவர்கள். கண்டி கலஹா பகுதியைச்சேர்ந்தவர். இவரது காலகட்டத்தில் பாடசாலைக்கு கட்டிட வசதிகள் கிடைத்ததோடு இலக்கியம் மற்றும் நாடகத்துறை வளர்ச்சி கண்டது. சிறந்த பேச்சாளரான இவர் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியிருந்தார்.

### தற்போதைய காலகட்டம்

இக்கல்லூரியின் தற்போதைய அதிபரான எஸ்.விஜயசிங் அவர்கள் 1999 ஆம் ஆண்டு கல்லூரி அதிபராகப் பொறுப்பேற்றார். இவர் இக்கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. இர.சிவலிங்கம்,திருச்செந்தூரன் ஆகியோரின் காலகட்டத்தை விடிவெள்ளி காலம் என்றால் இவரின் காலகட்டத்தைப் பொற்காலம் எனலாம். தலவாக்கலை லிந்துலை பகுதியில் தோட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நுண்கலை நிலையம்


பௌதீகவியல் ஆய்வு கூடம்

தொழிலாளர் தம்பதியின் புத்திரராக பிறந்த எஸ்.விஜயசிங் அவர்கள் அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் கற்று உயர்தரத்தில் சிறப்பு சித்தி பெற்று 1978 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கல்வியைத் தொடர்ந்தவர். பின்பு இளமாணி பட்டம் பெற்று ஆசிரியராக கடமை புரிந்து அதிபர் சேவை மற்றும் கல்வி பட்டங்கள் மற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவை தராதரத்தை அடிப்படையாகக் கொண்டு கல்லூரி யின் அதிபராக பொறுப்பேற்றார். இவர் நுவரெலியா மாவட்டத்தின் சிறந்த ஒரு அரசியல் விஞ்ஞான பாட ஆசிரியராவார் தனக்கென ஒரு பாணியை இதில் புகுத்தி அப்பாடத்தில் 100 சதவீத சித்திகளை பெற்றுக்கொடுத்து சாதனை புரிந்தவர்.

இவரது காலகட்டத்தில் கல்லூரிக்குக்கிடைத்த வளங்கள் பலவானாலும் சிறப்பாக கூறப்படுபவை விஞ்ஞான ஆய்வு கூடம், ஆரம்பப்பிரிவுக்கான வளங்கள்,பல்லூடக அறை, சாரணியம், நூலக கட்டிடம், அதை விட கல்லூரியின் ஆங்கில மொழிப்பிரிவை ஆரம்பித்தமை. மேலும் புலமை பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யக்கூடிய பாடசாலைகளின் பட்டியலில் அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி இடம்பிடித்துள்ளது. பௌதீக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் வணிகத்துறைகளில் இக்கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர் தொகை அதிகரிப்பானது பட்டப்படிப்புத்துறையில் தமிழ் மாணவர்களின் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது.

சுமார் 15 வருடங்களில் அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியானது அதன் பெயருக்குகேற்ப மலையகத்தின் கல்வித்துறையில் உயர்பீடத்தை அலங்கரிக்க அதிபர் விஜயசிங்கின் நிர்வாகத்திறன், பங்களிப்பு, அர்ப்பணிப்பு இன்றியமையாதது எனலாம்.

### 125ஆவது வருடத்தை நோக்கிய பயணம்...!


மெதடிஸ்த திருச்சபையால் இலங்கையில் உருவான புகழ்பூத்த கல்லூரிகளான வெஸ்லி கல்லூரி (கொழும்பு, கல்முனை), கிங்ஸ்வுட், கண்டி பெண்கள் உயர்தர பாடசாலை, றிச்மண்ட் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, வின்சன்ட் பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை மெதடிஸ்ட் கல்லூரிகளின் வரிசையில் அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியும் இன்று தீவு முழுவதும் பேசப்படும் ஒரு கல்விக்கூடமாக விளங்குகிறது. மட்டுமன்றி விளையாட்டுத்துறையிலும் பிரகாசித்து வரும் கல்லூரி, நுண்கலைப்பிரிவில் மிகத்திறமையான மாணவர்களைக் கொண்டு இப்பிரதேசத்தின் கலை கலாசார பாரம்பரியங்களை


தகவல் தொழில்நுட்ப பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அட்டன் மெதடிஸ்த ஆலயத்தின் தற்போதைய தோற்றம்



1889 இல் அட்டன் மெதடிஸ்த்த ஆலயத்தின் தோற்றம். ஆலயத்தின் அருகே இருக்கும் கட்டிடம் அடம்ஸ் பீக் ஹோட்டல் (இப்போது ஸ்ரீ பாத சிங்கள கல்லூரி) கீழே அட்டன் புகையிரத நிலையம்.


கட்டிக்காத்து தலைநகர் பாடசாலைகளே வியக்கும் வண்ணம் பிரகாசித்து வருகிறது.

107 ஆசிரியர்கள், 2500 மாணவ மாணவியர் மற்றும் 22 கட்டிடங்களை கொண்டு மலையகக் கல்வியின் குறியீடாக விளங்கும் ஹைலண்ட்ஸ் அன்னையின் முடிவுறாக் கல்விப்பயணத்தின் எதிர்கால இலக்குகளை அதிபர் எஸ்.விஜயசிங் வகுத்துள்ளார். கடந்த காலங்களில் தரம் 5 புலமை பரிசில் பரீட்சை, சாதாரண தரம், உயர்தர பரீட்சைகளில் பெறுபேறுகளில் மாவட்ட, மாகாண ரீதியில் முதலிடத்தைப்பெற்று வரும் கல்லூரி 2015 ஆம் ஆண்டு தமிழ்ப்பிரிவில் சாதாரண தர பெறுபேறுகளில் தேசிய மட்டத்தில் 4 ஆம் இடத்தை தொட்டது. இவ்வளர்ச்சிப்போக்கை அதிகரிக்க சில நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

தரம் 6 முதல் 13 வரை உள்ள ஆங்கில மொழிப்பிரிவில் கலைப்பிரிவு கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வருடம் (2016) உயர்தரத்தில் தொழில்நுட்பப்பாடம் (ஆங்கில பிரிவு) ஆரம்பிக்கப்பட்டள்ளது.

இக்கல்லூரியில் கற்ற பலர் இன்று உலகம் முழுதும் பரந்துள்ளனர். அவர்கள் எந்தெந்த துறைகளில் இருக்கின்றனர் என்பதை விரல் விட்டு எண்ணி விட முடியாது. மலையகத்தின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்ட அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி மலையகக்கல்வியின் தாய் மட்டுமல்லாது நிரந்தர குறியீடு என்பதும் மறைக்க முடியாத உண்மை.

**- சிவலிங்கம் சிவகுமாரன்**




ஹைலண்ட்ஸ் கல்லூரியின் முதலாவது கட்டிடம் (கோர்னிஷ் மண்டபம்)

உசாத்துணை நூல்கள் மற்றும் இணையங்கள்

1. A. Hostory of the Methodist Church in Ceylon (1814 1964)
2. யுகவிழி (கல்லூரி இதழ்)
3. Methodist Church in Sri Lanka
4. methodistsrilanka.org
5. நன்றி: அட்டன் மெதடிஸ்த ஆலய நூலகம் மற்றும் கல்லூரி சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனைத்துக் கலாரசிகர்களும் நாடும் ஒரு காட்சியகமாக விளங்குவது சிலப்பதிகாரம் கலாபவனம். மிகச்சிறந்த கட்டிடக்கலை அம்சங்களுடன் இக்கலையகம் விளங்குகிறது.



# பூம்புகார்

## பண்டைத் தமிழ் இலக்கியங்கள் புகழ்ந்தேற்றிய துறைமுகநகரம்

தமிழகத்தின் நாகப்பட்டின மாவட்டத்தின் நகரமாக விளங்குகின்ற பூம்புகாரின் வரலாற்றுச் சிறப்பை அறியாதவர் ஒரு சிலரே. காவிரிப் பூம்பட்டினம் என, ஒரு காலத்தில் மிக வளம் பொருந்திய பழைமையான துறைமுக நகராகச் சிறப்புற்று விளங்கியது.

தமிழ் நாட்டில் முற்கால சோழ அரசர்கள் ஆட்சிக் காலத்தின்போது (கி.பி.2ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர்) அவர் தம் தலைநகராக, காவிரிப் பூம்பட்டினம் பெயர் பெற்றிருந்தது. ''சோழ வளநாடு சோறுடைத்து'' என்ற வாசகம் சோழ நாட்டின் சிறப்பைக் காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காவேரி நதி கடலில் சென்று கலக்கும் இடத்திற்கு, சிறிது அண்மையாக பூம்புகார், கடற்கரைப் பக்கத்தில் அமைந்திருக்கிறது. இதன் அண்மைய நகரங்களாக மயிலாடுதுறையும், சீர்காழியும் உள்ளன.

பண்டைக்கால பூம்புகார் நகரம் கடல் கோளால் அழிந்தது என்பது வரலாறாகும். காவிரிப் பூம்பட்டினம் குறித்து பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி மற்றும் புறநானூறு போன்ற பண்டைய இலக்கியங்கள் சிறப்பாகப் பேசுகின்றன.

இளங்கோ அடிகள் பாடிய சிலப்பதிகாரத்தில் பூம்புகார் நகர அமைப்பு குறித்து விரிவாகக் கூறப்படுகிறது. காவேரி ஆற்றின் வடகரைகளில் கட்டப்பட்ட இந்நகரத்தில் இரு தனித்துவமான மாவட்டங்களாக மருவூர்ப்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் என்பன விளங்கின. கடலின் பக்கத்தில் மருவூர்ப்பாக்கம் அமைந்திருந்தது. பட்டினப்பாக்கம் மேற்கில் அமைந்திருந்தது. இவ்விரு கிராமங்களையும் பிரிப்பவையாக, நீளத்திற்கு பூங்காக்களும் செடிகொடிகளும் அமைந்திருந்தன. இப்பாக்கங்களின் கீழ் தினச்சந்தைகளும் நடைபெற்றன. பகல் வேளைகளில் இச்சந்தை நாளங்காடியெனவும் இரவு நேரத்தில் அல்லங்காடி எனவும் அழைக்கப்பட்டது.

கடற்கரையோடமைந்த மருவூர்ப்பாக்கத்தின் பல்வேறு பிரமாண்டமான மாயன்களது கட்டடக்கலைப் பாணியில் நகரம் அமைக்கப் பட்டிருந்ததாகக் கூறுவர். மாளிகைகளும் பண்டக சாலைகளும் இருந்தன. இந்தப் பண்டக சாலையின் யன்னல்கள் மான் விழிகள் போன்ற அமைப்பில் கட்டப்பட்டிருந்தன. கடற்கரையை அண்மித்து மருவூர்ப்பாக்கம் அமைந்திருந்ததனால் அங்கிருந்த கப்பல் தரிப்பிடங்கள், வெளிநாட்டுப் பிரயாணிகள், வர்த்தகர்கள் யவனர்கள் (வெளிநாட்டவர்கள்) பலராலும் பெரிதும் நாடப்படுபவையாக விளங்கின. இங்கு பெரும்பாலும் மீன்பிடித்தொழிலாளர்கள் வாழ்ந்தார்கள். அத்துடன் நெசவாளர்கள், பட்டுத்துணி வர்த்தகர்கள், வியாபாரிகள், மீன் மற்றும் இறைச்சி வியாபாரிகள், குயவர்கள், தானிய வர்த்தகர்கள், தங்க ஆபரணம் செய்வோர், வைரத் தயாரிப்பாளர்கள் ஆகியோரும் வாழ்ந்திருந்தனர். பட்டினப்பாக்கத்தில் அரசர்கள், பிரபுக்கள், செல்வந்தர்கள் அவர்களது வைத்தியர்கள், சோதிடர்கள், நான்கு படைகளில் உள்ள வீரர்கள், அரண்மனை நடனக் கலைஞர்கள் ஆகியோர் வாழ்ந்திருந்தனர்.

பட்டினப்பாக்கத்தில் வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூதச்சதுக்கம், பாவை மன்றம் என ஐந்து மன்றங்கள் இருந்தன. இளவந்திழை சோலை, உய்யவனம், சம்பதிவனம், உவவனம், காவேரிவனம் எனும் வனங்கள் நகருக்கு அழகூட்டின.



கலாநிலையத்தின் வாயிலில் காணப்படும் மகரதோரண வாயில்

பரம்பொருளான சிவபெருமானுக்கு அமைக்கப் பட்ட ஆலயம் முதற்கொண்டு கடைசி தெய்வங்களான சதுக்க பூதம் வரை தெய்வங்களுக்கான கோவில்கள் அங்கு காணப்பட்டன. அங்கு சிவபெருமான், இந்திரன் அவனது யானையான ஐராவதம், அவனது ஆயுதமான வஜ்ஜிராயுதம், பலராமன், சூரியன், சந்திரன், அருகன், திருமால் ஆகியோருக்கான கோவில்கள் காணப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்த ஸ்தூபங்கள் (தூண்கள்), புத்த விகாரைகள் ஆகியனவும் காணப்பட்டன. இந்தக் கோவில்களை விட சம்பாபதி அம்மனுக்கும் கோவில்கள் காணப் பட்டன.


''அக்காலத்தில் காவிரிப் பூம்பட்டினம் சோழ நாட்டின் சிறந்த துறைமுகப்பட்டினமாகத் திகழ்ந்தது. காவேரி ஆறு கடலோடு கலக்கும் இடத்தில் வளமும் அழகும் வாய்ந்து விளங்கிற்று அந்நகரம். பட்டினம் எனும் சொல் சிறப்பு வகையில் காவிரிப் பூம்பட்டினத்தையே குறிப்ப தாயிற்று. இக்காலத்தில் பட்டணம் என்பது சென்னைப் பட்டணத்தைக் குறிப்பதைப் போன்று அந்தக் காலத்தில் பட்டினம் என்னும் பெயர் காவிரிப் பூம்பட்டினத்திற்கு வழங்கிற்று. அழகு வாய்ந்த அப்பட்டினத்தை கவிஞர்கள் பூம்புகார் நகரம் எனவும் அழைத்தனர். பூம்புகார் போற்றுதும், பூம்புகார் போற்றுதும் எனப் பாடினார் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ அடிகள்.

அந்நகரத்தில் ஏற்றுமதியும் இறக்குமதியும் இடையறாது நடந்தன. தமிழ் நாட்டாரோடு வணிகம் செய்து வளம்பெற்ற யவனர் என்ற கிரேக்கர்கள், காவிரிப் பூம்பட்டினத்தின் கடற்கரை யில் உயரமான மேடைகளுடன் கூடிய விண்ண ளாவிய மாடங்கள் கட்டி குடியிருந்தார்கள். தெய்வ மணமும் அந்நகரிலேயே கமழ்ந்து கொண் டிருந்தது. சிவன் கோயில், முருகன் கோயில், பெருமாள் கோயில், வாசவன் கோயில், இன்னும் பல கோயில்கள் அங்கு நின்று அணி செய்தன. இந்திரன் திருநாள் கோலாகலமாக 28 நாள் கொண்டாடப்பட்டது. இங்ஙனம் காவிரிப் பூம்பட்டினம் பொருள் வளமும் தெய்வ நலமும் பெற்று விளங்கிய காலமே சிலப்பதிகாரக் காலம்''



எனக் குறிப்பிடுகிறார் அறிஞர் ரா.பி. சேதுப்பிள்ளை. சிலம்பின் காலம் எனும் தலைப்பிலான தமது வானொலி உரையொன்றில். (ஆதாரம்: ''தமிழ் இன்பம்'' நூல்)

''பண்டைய புகார் நகரில் நடந்த வர்த்தகத்தை பட்டினப்பாலைப் பாடல் கூறுகின்றது. தமிழ் நாட்டில் கப்பல்களைச் செய்து அவற்றை பலவகை யில் பயன்படுத்திக் கொண்டனர். காவிரியிலும் பட்டினத்து கடற்கரையில் உள்ள பல பண்டக சாலைகளில் பல நாடுகளில் இருந்து வந்த பண்டங்கள் இருந்தனவென்று பட்டினப் பாலை தெரிவிக்கின்றது'' என தமிழ்க் கலைகள் என்ற தமது கட்டுரையொன்றில் குறிப்பிடும் மகோ பாத்தியாயர் டாக்டர் சுவாமிநாதரய்யர் பலவகை த்தொழில் செய்வார்க்குரிய வீதிகள் முறைப்படி அமைக்கப்பட்டிருந்தன. மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களில் மதுரை, காவிரிப் பூம்பட்டினம், வாஞ்சிமாநகர், காஞ்சி முதலிய நகர அமைப்புக் களைப் பற்றிச் சொல்லும் பகுதிகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்காலத்தில் நகரங்கள் அமைக்கப்பட்ட முறைகள், இவற்றிலிருந்த தெருக்கள், இடங்கள் முதலியவற்றைப் பற்றி பல செய்திகளை அறிய லாம்.

அத்துடன் சங்க காலத்துக்கு முன்பும் அதன் பிற்பட்ட காலங்களிலும் புகழ்பெற்று விளங்கிய சோழ மன்னர்கள் பற்றியும் அவர்களது வீரம் செறிந்த, மதியூகம் மிக்க பணிகள் பற்றியும் பண்டைய நூல்கள் கூறும். இவர்களுள் கரிகாலற் சோழன், கோச்செங்கனையன், கிள்ளிவளவன், போன்றோர் பற்றி சிறப்பாக வரலாறு கூறும்.

இவர்களுள் கரிகாற் சோழன் பற்றிக் குறிப்பிடுகை யில் ''இவனது அரிய செயல்களுள் காவேரிக்கு கரைகட்டி சோழ நாட்டை வளப்படுத்தியதும் தொண்டை நாட்டில், வேளாண் மக்களை குடியேற்றியதும் காஞ்சி மாநகரையும் காவிரிப் பூம்பட்டினத்தையும் பலவகைகளில் அழகுற அமைத்தவை, சிறந்தவை'' எனவும் அறிஞர் வீ.ரா.ராமச்சந்திர தீட்சிதர் குறிப்பிடுகிறார்.

பண்டைப் பூம்புகார் நகரம் கடல் கோளினால் அழிவுற்றது. பழைய நகரம் கடற்கரையில் இருந்து சுமார் 2 மைல் தூரத்தில் கடலுக்கடியில் உள்ளதெனக் கூறுவர்.

காவிரிப் பூம்பட்டினத்தில் இந்திர விழா நடைபெற்ற விடயத்தை இலக்கியங்கள் குறிப்பிடு கின்றன. சோழ மன்னன் தனது மகனை இழந்த கவலையில் பெரும் துன்பத்தில் மூழ்கியிருந்தான் என்றும் அதனால் வழமையாக நடைபெறும் இந்திர விழாவை நடத்த மறந்து விட்டான் என்றும் இச்செயல் மணிமேகலை தெய்வத்தை ஆத்திரம் கொள்ள வைத்தது என்றும் அவளே நகரம் கடலால் அடித்து செல்லப்பட வைத்தாள் எனவும் மணிமேகலையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பர். இது ஒரு அதீத சக்தியின் செயலைக் குறிக்கும் எனவும் கூறுவர் ஆனால் ஒரு பெரும் கடல்கோள் தோன்றி நகரத்தை அழித்தொழித்தது என்ற ஒரு கூற்றும் உள்ளது.

பண்டைய பூம்புகார் நகரம் வேகமான கடலரிப்பினாலும் கடல் கோளினாலும் கி.பி. 2ஆம் நூற்றாண்டளவில் அழிவுற்றது எனக் கூறப்படுகிறது. இக்காலகட்டத்தின் பின் தமிழ் நாட்டின் பெரும் பகுதியை களப்பிரர் ஆண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






நவீன பூங்காவின் ஓர் அழகிய தோற்றம்

இக்காலம் இருண்ட காலம் என வர்ணிக்கப் படுகிறது. சுமார் 6 ஆம் நூற்றாண்டளவில் பல்லவர்கள் ஆட்சிக்கு வந்தனர் எனவும் அவர்கள் ஒரு சிறு ஆலயத்தை (பல்லவனீஸ்வரம்) கட்டினர் எனவும் கூறுவர். ஆனால் நகரம் முன்னைய மகத்தான நிலையைப் பெறவில்லை. சில காலங்களுக்குப் பின் சோழர்கள், விசேடமாக பரந்தகசோழன் பூம்புகார் அதன் முன்னைய சிறப்பை அடைய பல முன்னேற்றக்காரியங்களைச் செய்தான்.

பூம்புகார் நகரம் குறித்த அகழ்வாராய்ச்சிகள் 1910 ஆம் ஆண்டில் இருந்து நடைபெற்று வருகின்றன. கடற்கரை அருகில் இந்திய அகழ்வாராய்ச்சித் திணைக்களம் மேற்கொண்ட ஓர் ஆய்வின் போது வட்ட கிணறுகள் (ஊரணி கிணறுகள்) பல காணப்பட்டன என்பதைத் தெரிவித்தது. சங்க இலக்கியமான பட்டினப்பாலை இக்கிணறுகள் பற்றிக் குறிப்பிடுகின்றது.

சம்பாபதி அம்மன் ஆலயம் மற்றும் பல்லவனீஸ்வரம் ஆலயங்களின் பக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் (1960 - - 61) பல்வேறு கட்டடங்களின் எச்சங்கள் காணப்பட்டன. பூம்புகாரின் கீழையூர்ப்பகுதியில் செங்கல் கட்டடம் ஒன்றின் எச்சங்கள், படகு இறங்குதுறை எச்சங்கள் ஆகியன காணப்பட்டுள் ளன. பல்லவனீஸ்வரத்தில் நீள்சதுர அறைகளுடன் கூடிய 60 அடி புத்தவிகாரை கண்டுபிடிக்கப்பட்டது. சலவைக் கல்லினால் ஆன புத்த பாதமும் தாமரைப்பூ, பூரண கும்பம், சுவஸ்திகம் போன்ற புனித சின்னங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.







கடலுக்கடியில் ஆய்வாளர்களால் கண்டுப்பிடிக்கப்பட்ட பண்டைய பூம்புகார் நகரின் எச்சங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனைத்து நோய்களையும் குணப்படுத்தும் அற்புதத்தன்மை கொண்ட குளத்தைக் கொண்ட இலஞ்சிமன்றம்



நீதிக்குரிய பாவைமன்றம். அநீதி ஏதும் நடக்குமாயின் இப்பாவை கண்ணீர் சிந்தும்

அத்துடன் வட்டவடிவமானதும் நீள்சதுர வடிவிலானதுமான செப்புக்காசுகள் கண்டுபிடிக்கப் பட்டன. அவற்றில் சோழர் சின்னங்களான வாலை உயர்த்தி நிற்கும் புலி மற்றும் சூரியன் ஆகியன பொறிக்கப்பட்டிருப்பதும் கண்டுபிடிக்கப் பட்டது. இவை கரிகால சோழனுக் குரியவை எனக் கருதப்படுகிறது.




எதனையும் நினைத்துத் தொட்டவுடன் அதனைத் தரக்கூடிய சக்தி வாய்ந்த கற்பகதரு(மரம்) பொறிக்கப் பட்ட நாணயம் ஒன்றும் புதைப் பொருள் ஆராய்ச்சியின் போது கண்டெடுக்கப்பட்டது.

வெள்ளையன் இருப்புப் பிரதேசத்தில் பண்டைய ரோமன் நாணயம் ஒன்று புதைபொருள் ஆய்வில் கண்டெடுக்கப்பட்டது. மற்றும் தியானத்தில் அமர்ந்திருக்கும் புத்தரின் செப்புச்சிலை, பச்சை மணிகள், சிற்பிகள், கண்ணாடி வளையல்கள் ஆகியனவும் அகழ்ந்தெடுக்கப்பட்டன. 1927 இல் மேலையூரில் தங்கமுலாம் பூசப்பட்ட புத்தரின் செப்புச்சிலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இது 8 ஆம் நூற் றாண்டைச் சேர்ந்ததாகும். இவ்வாறு இணையச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

தற்போதைய பூம்புகார் நகரின் கடற்கரைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வு இந்நிகழ்வை உறுதிப்படுத்துகின்றது எனக் கூறப் படுகிறது. கடலுக்குக் கீழே மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளும் வரலாற்றாசிரியர்களின் ஆய்வுகளும் இரண்டாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த கரிகாற் சோழனின் ஆட்சிக்காலத்தில் பூம்புகார் வளர்ச்சி பெற்று மேலோங்கி விளங்கியதென்பதனையும் அம்மன்னன் சீனா, அரேபியா, ரோம இராச்சியம் ஆகிய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்தான் என்பதனையும் உறுதிசெய்கின்றன. காலத்துக்குக் காலம் கடலின் கீழ் புதைபொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தடயங்கள் கண்டு எடுக்கப்பட்டுள்ளன. கடலின்கீழ் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியின் போது செங்கல் கட்டடங்களின் சிதைவுகள், நீர்த்தேக்கங்கள், ஒரு படகுத்துறை மற்றும் ரோமன் நாணயங்கள் காணப்பட்டுள்ளன. பூம்புகார் பற்றி பல்வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பிடும் சங்க இலக்கியங்கள் புதைபொருள் ஆய்வாளர்களின் கண்டு பிடிப்பு களுடன் ஒத்திருப்பவையாகக் காணப்படுகின்றனஎனத்தெரிவிக்கப்படுகிறது.

சமுத்திர தொழில்நுட்பத்திற்கான தேசிய மன்றம் 2006ஆம் ஆண்டில் சில ஆய்வுகளை மேற்கொண்டு பழைமைமிக்க இத்துறைமுக நகரத்தின் எச்சங்கள் கடலில் 2 கிலோ மீற்றருக்கு அப்பால் இருப்பதாக தெரிவித்தது. தமிழர்களின் சர்வதேச வர்த்தக சாதனைகள் மற்றும் கட்டடக்கலை ரீதியான அற்புதங்கள் கடலின் ஆழத்தில் அமைதியாகக் கிடக்கின்றன என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூம்புகாரில் உள்ள பழம் பெரும் கோவில்களில் ஒன்றாக விளங்குவது மாசிலாமணி நாதர் கோவில். மாரவர்ம குலசேகர பாண்டியனால் 1306 ஆம் ஆண்டு இந்த ஆலயம் கட்டப்பட்டது. பண்டைய கட்டிடக் கலைப்பாணியில் இக்கோவில் அமைந்து சிறப்புப் பெறுகிறது.



பூம்புகாரில் புகழ் பெற்ற தேவாலயங்களில் ஒன்றாக விளங்கும் ஸியன் தேவாலயம் டச்சு குடியேற்றவாசிகளால் 1701 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. மறுமலர்ச்சி காலத்தில் இருந்து டச்சு கட்டிடக் கலைப் பாணியை இது பிரதிபலிக்கிறது.

இம்மன்றத்தில் அகழ்வாராய்ச்சிக்குழு 1991 ஆண்டு மார்ச் மாதத்தில் ஆய்வுக்கப்பல் ஒன்றின் மூலம் நடத்திய ஓர் ஆய்வில் நாகப்பட்டினத்துக்கு அண்மையில் தரங்கம்பாடி பூம்புகார் கரைக்கு அப்பால் கடலின் ஆழத்தில் ஆங்கில யூ எழுத்தைப் போன்ற வடிவத்தில் மனிதனால் ஆக்கப்பெற்ற ஒரு பொருளைப்படம் பிடிக்கும் ஒரு நவீன கருவி மூலம் கண்டுபிடித்தனர்.

இந்த 'யு' வடிவ அமைப்பு எகிப்து அல்லது பண்டைய மொசெப்பத்தேமியாவின் (தற்போதைய ஈராக் தேசம்) முதலாவது கட்டடக்கலை சின்னத்தினை விட ஆயிரம் ஆண்டுகள் பழைமையானது என்ற வரலாற்று முக்கியத்துவத்தைக் கொண்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு காலத்தில் பல்வேறு சிறப்புக்களுடன் உலகப் புகழ்பெற்று விளங்கிய இந்தத் துறைமுக நகரமான பூம்புகாரில் தற்போது சுமார் 86 ஆயிரம் மக்கள் வாழ்கின்றார்கள். பூம்புகாருக்கு விஜயம் செய்ய டிசம்பர் முதல் பெப்ரவரி வரையான காலம் உகந்தகாலமாகும். இங்கு பார்த்துக் களிக்க முக்கிய இடங்களில் ஒன்றாக விளங்குவது சிலப்பதிகாரம் கலாபவனம் ஆகும். ஏழு மாடிகளைக் கொண்ட இக்கலாபவனம் அழகான கட்டட அமைப்பைக் கொண்டது. முதல் மாடி 12 அடி உயரமானது. ஏனைய மாடிகள் ஒவ்வொன்றும் ஐந்து அடி உயரமானது. கோபுர கலசங்கள் 8 அடி உயரமானவை. மொத்தமாக 50 அடி உயரம் கொண்டது.

இக்கலாபவனத்தின் வாயிலில் 22 அடி உயரமான மகர தோரண வாயில் உள்ளது. இவ்வாயிலின் வடிவமைப்பு சுருளிமலை மங்கலதேவி ஆலயத்தின் மகர தோரண வாயிலைப் போன்றது. கட்டடத்தின் உள்ளே அமைக்கப்பட்டிருக்கும் சிலம்பு வடிவான குளத்தில் கண்ணகி மற்றும் மாதவி சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள கலைத்துவ பொருட்களுள் சங்ககால சிலப்பதிகாரக் காட்சிகள் அமைந்த கூடங்கள் குறிப்பிடத்தக்கன. அடுத்து இலஞ்சி மன்றத்தில் இரு விசேடம் மிக்க குளங்கள் உள்ளன. சூரியனுக்கும் சந்திரனுக்கும் அர்ப்பணிக்கப்பட்ட இக்குளங்களின் நீர் எல்லா நோய்களையும் குணப்படுத்தக்கூடியது என்பார்கள்.

**- லக்ஷ்மி**

### பூம்புகாருக்கு எவ்விதம் செல்வது?

நாகப்பட்டினம் மாவட்டத்தின் சீர்காழி தாலுகாவில் அமைந்துள்ள பூம்புகார் நகருக்கு அண்மித்ததாக உள்ள விமான நிலையங்கள் புதுச்சேரியும் திருச்சியுமாகும். இருப்பினும் அவை உள்ளூர் விமான நிலையங்களாக இருப்பதால் சர்வதேச தொடர்புகள் இருக்கும் சென்னை விமான நிலையம் மிகவும் உகந்தது.


புகையிரதத்தில் செல்வதாயின் மிக அண்மையில் உள்ள புகையிரதப் பாதை நாகப்பட்டினமாகும். இங்கிருந்து பல்வேறு மாநிலங்களுக்கும் அடிக்கடி புகையிரத போக்குவரத்து உண்டு.

வீதியைப் பாவிப்பதாயின் NH67 பாதை மூலம் ஆட்டோரிக்ஷா அல்லது டாக்ஷி மூலம் பூம்புகாரைச் சென்றடையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லெஷான்

## மாபெரும் புத்தர் உருவச்சிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இந்த மலை ஒரு புத்தர்; இந்த புத்தர் ஒரு மலை"

உலகின் மிக உயரமான புத்தர் சிலையாக விளங்குவது லெஷான் மாபெரும் புத்தர் உருவச் சிலையாகும். (Giant Buddha of Leshan) சீனாவின் தென் ஷெஷுவன் மாகாணத்தின் (Szechuan province) கி.பி.8 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புத்தபிக்கு ஒருவரினால் செங்குத்தான மலைப்பாறை ஒன்றில் இம்மாபெரும் புத்தர் சிலை உருவாக்கப்பட்டது.

மின்ஜியாங், தாது (Dadu), ஷின்ங்யி ஆகிய மூன்று நதிகளும் சங்கமிக்கும் பகுதியை மேற் பார்த்தவாறும் புதின எமி (Emei) மலையைப் பார்த்தவாறும் கம்பீரமாகக் காணப்படும் இம்மா பெரும் புத்தர் சிலை மேற்குறிப்பிட்ட மலைப் பிரதேசத்துடன் சேர்ந்து 1996 ஆம் ஆண்டில் இருந்து ஐ.நா. உலக தொல்லியல் அந்தஸ்தினைப் பெற்று உள்ளூர் சுற்றுலாப் பயணிகளையும் உலக சுற்றுலாப் பயணிகளையும் கவர்ந்து வருகிறது. சீன மக்கள் இதனை ஓர் அருங்காட்சியகம் என்றே நோக்குகிறார்கள். 71 மீட்டர் (233 அடி ) உயரமான இவ்வுருவச் சிலையைச் செதுக்கும் மாபெரும் பணி கி.பி. 713 ஆம் ஆண்டில் ஹைடொங் (Haitong) என்னும் சீன பிக்கு ஒருவரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. கீழே பாய்ந்து கொண்டிருந்த மூன்று நதிகளின் கொந்தளிப்பினால் அந்த இடத்தைக் கடந்து செல்லும் கப்பல்கள் மூழ்கிப் போகும் அபாயம் ஏற்பட்டிருந்தது. அவ்விடத்தில் புத்தரின் உருவச் சிலை ஒன்றினை அமைப்ப தினால் புத்தரின் கருணைக்கு உட்பட்டு கொந்தளிக்கும் நதிநீர் அமைதியாகும் என அவர் நம்பினார்.

இச்சிலை அமைப்புக்கு நிதியைச் செலவழிப் பதில் அச்சுறுத்தல் ஏற்பட்டபோது, அந்தப் புத்த பிக்குவானவர் தமது பக்தி விசுவாசத்தைக் காட்டும் விதத்தில் தமது கண்களைத் தோண்டி எடுத்து தம்மைக் குருடாக்கிக் கொண்டார் எனக் கூறப்படுகிறது.

அவர் மறைந்தபின்பு அதனைக் கட்ட நிதி இல்லாமையால் வேலை நின்று போனது. சுமார் 70வருடங்களுக்குப் பின்னர் வேலை மீண்டும் தொடங்கப்பட்டு கி.பி.803 ஆம் ஆண்டில் ஹைடொங்கின் சீடர்களின் முயற்சியால் பூரணமாக்கப்பட்டது.

இதில் விசேடமாக வெளிப்பட்ட விடயம் என்னவென்றால், செங்குத்தான மலையில் புத்தரின் உருவத்தைச் செதுக்கும் போது உடைத் தெறியப்பட்ட பெருந்தொகையான கற்குவியல் கள், ஆற்றுக்குள் ஒரு பகுதியில் வீழ்ந்து நிறைந்தமையால் நீரோட்டம் மாற்றம் கண்டு கப்பல்கள் அவ்விடத்தினால் கடந்து செல்லும் போது ஒரு பாதுகாப்பான நிலை தோன்றிவிட்டது.




தீபமேற்றி வணங்கும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


லெஷான் புத்தர் சிலையை உருவாக்குகின்ற போது ஒரு பாதுகாப்பான வடிகால் அமைப்பு முறையும் மேற்கொள்ளப்பட்டது. மழை பெய் தால் தண்ணீர் அவ்வுருவத்தில் எங்கும் தேங்கி நிற்காதவாறு உலகின் பல்வேறு பகுதிகளிலும் குழாய் அமைப்பு முறைகள் மேற்கொள்ளப் பட்டன.

இந்த உருவச்சிலையைச் செதுக்கி முடித்த போது அதனை சீதோஷ்ண நிலைகளில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு அதற்கு மேல் மிகப் பென்னம் பெரியதான 13 தளங்களைக் கொண்ட மரத்தாலான வீடு ஒன்று கட்டப்பட்டது. யுவான் அரச வம்ச ஆட்சி முடிவுறும் காலத்தில் மங்கோலியர்கள் போர் தொடுத்த வேளை தாக்கி அழிக்கப்பட்டது. அதன் பின் அந்த உருவச்சிலை வெயிலுக்கும் மழைக்கும் உட்பட்டே இருந்து வருகிறது.

71 மீட்டர் உயரம் கொண்ட இச்சிலையின் தோள்கள் 28 மீட்டர் (92 அடி) அகலமுள்ளது. உருவத்தின் மிகச்சிறிய கால் பெருவிரலில் ஒருவர் உட்கார்ந்து இருக்க முடியும். புருவங்கள் 18 அடி நீளம் உள்ளவை. ''இந்த மலை ஒரு புத்தர்; இந்தப் புத்தர் ஒரு மலை'' என்ற வாசகமும் வழங்குகின்றது. கைகளை முழங்கால்களில் வைத்தபடி அமர்ந்திருக்கும் இப்புத்தர் ''டபோ'' எனப் பெயர் பெற்றிருக்கிறார். அமர்ந்திருக்கும் இவர் 'மைத்திரேய புத்தர்' எனக் கருதப்படுகிறார். மைத்திரேய என்பவர் எதிர்கால புத்தர் எனவும்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லெஷான் மாபெரும் புத்தர் உருவச்சிலையின் பக்கத்தில் மலையில் செதுக்கப்பட்டுள்ள உருவச்சிலைகள்.

| | | |
|---|---|---|
| இதன் தன்மை | : | உலக தொல்லியல் இடம், சின்னங்கள், உருவச்சிலைகள், காட்சிகள். |
| சிறந்த பருவகாலம் | : | மார்ச்சில் இருந்து நவம்பர் வரை. |
| சிபாரிசு செய்யப்பட்ட, பார்வையிடும் நேரம் | : | 4 மணித்தியாலங்கள் |
| திறந்திருக்கும் நேரம் | : | ஏப்ரல் 1 இல் இருந்து அக்டோபர் 7 வரை. 7.30 முதல் மாலை 6.30 மணிவரை. அக்டோபர் 8 முதல் மார்ச் 31 வரை. 8.00 மணிமுதல் 5.30 மணிவரை. |
| விலாசம் | : | இல 2435 Linguyn Street, Shighous District, Leshan 614000, China. |

கௌதம புத்தரின் போதனைகள் மறைந்து போகின்ற காலத்தில் மைத்திரேயர் தோன்றித் தர்மத்தைப் போதிப்பார் எனவும் நம்பப்படுகிறது.

இம்மாபெரும் கலைப் பொக்கிஷத்தை படைத்திருந்த காலத்தில் இப்புத்தர் உருவச்சிலைக்கு தங்கத் தகடுகளினால் ஆடைகள் உருவாக்கப்பட்டிருந்தன. ஆனால் இங்கு படையெடுப்புகள் மேற்கொள்ளப் பட்டதையடுத்து இந்த விலைமதிப்பில்லாத தங்க ஆடைகள் களவாடப்பட்டுவிட்டன.

நதியில் சுற்றுலாப்பயணிகளுக்கான படகுகளில் இருந்தும் புத்தர் உருவத்தின் காதுக்குப் பக்கத்தில் உள்ள சமதரையில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள், நிமிர்ந்து பார்க்கின்றனர். சமதரையின் ஒரு புறத்தில் புத்தபிக்குவான ஹைடொங்கின் நவீன சிலை ஒன்று உள்ளது. இதன் பின்னால் லிங்குன் ஆலய அருங்காட்சியகம் உள்ளது. இப்புத்தர்சிலையின் அமைப்பு மற்றும் புனருத்தாரணங்கள் பற்றிய பொருட்கள் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

- கங்கா,
ரொபர்ட் அன்டனி



நுழைவாயில் முன் காணப்படும் ஒரு பழைய கோபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செம்மை நிலை எழுத்துக்களுடன் உறவாடிய சிற்பி சிவசரவணபவன்

பேராசிரியர் சபா.ஜெயராசா

ஆசிரியர்கள் ஆழ்ந்த வாசிப்பில் ஈடுபடுவோராயும், ஆக்க இலக்கிய எழுத்தாளராயும் மேற்கிளம்பல் கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கையின் தமிழ் சூழலிலே இடம்பெற்ற முக்கியமான சமூக நிகழ்ச்சியும் கல்வி நிகழ்ச்சியுமாகின்றன.

அந்த வகையில் கனக செந்திநாதன், சிற்பி சிவசரவணபவன், ச.வேலுப்பிள்ளை (சு.வே), கவிஞர் கந்தவனம், காரை சுந்தரம் பிள்ளை என்றவாறு ஆசிரிய எழுத்தாளர்களைப் பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம்.

இலங்கையின் சுதந்திர காலத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற பிறிதொரு முக்கியமான கல்வி நிகழ்ச்சி, தமிழகத்திலிருந்தும் கேரளத்திலிருந்தும் பட்டதாரி ஆசிரியர்கள் இங்குள்ள கல்லூரிகளிலே கற்பிப்பதற்கு வருகை தந்தமையாகும். வாசிப்புப் பழக்கம் ஆக்க இலக்கிய முயற்சி, உயர் கல்வி நாட்டம் முதலியவை மாணவரிடத்தே வளர்க்கப்படுவதற்கு அவர்களின் பங்களிப்பு முக்கியமானது.

அக்காலத்தில் வளர்ச்சி கொள்ளத் தொடங்கிய தமிழ் எழுச்சிச் செயற்பாடுகளில் ஆசிரியர்களதும், வீரகேசரி, சுதந்திரன், ஈழகேசரி முதலாம் இதழ்களின் பங்களிப்பும் சிறப்பிடம் பெறத் தொடங்கின.

அத்தகைய ஒரு பின்புலமே சிற்பி சிவ சரவணபவனை (1933 - 2015) உருவாக்கும் விசையைக் கொடுத்தது. சிற்பி சரவணபவனது உறவினரான வித்துவ சிரோன்மணி கணேசையர் தமிழ், வடமொழி ஆகியவற்றிலே பெரும்புலமை படைத்தவர். பிறிதோர் உறவினரான பிரம்மஸ்ரீ சதாசிவ ஐயர், தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் மிக்கவர். அவர்களின் புலமை வாழ்க்கை சிற்பிக்கு வழிகாட்டியாக அமைந்தது.

சிற்பியின் தந்தையார் சிவஸ்ரீ க.சுப்பிரமணிய ஐயர் ஆசிரியப் பணியை மேற்கொண்டு வந்ததுடன் கல்வி நாட்டத்துக்கும் இலக்கிய நாட்டத்துக்கும் தளம் அமைத்துக் கொடுத்தார். அந்தச் செயற்பாட்டில் தாயார் ஸ்ரீமதி சௌந்தராம்பாளின் பங்கும் முக்கியமானது.

சிற்பி தமது ஆரம்பக் கல்வியைக் கந்தரோடை தமிழ்க் கலவன் பள்ளிக் கூடத்திலும், இடைநிலைக் கல்வியை ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் கற்றார். கல்வி நிலையில் அக்காலப் பகுதியில் கந்தரோடை எழுச்சி கொள்ளத் தொடங்கியது.

ஏனைய ஆங்கில கல்லூரிகளோடு ஒப்பிடுகையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு ஒரு தனித்துவம் உண்டு.

மானிடவாதமும் மார்க்சிய நெறியும் வளர்ச்சி கொள்ளத் தொடங்கிய கலாசாலையாக அது அமைந்தது. சாதிய வேறுபாடு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய வேறுபாடுகள் இன்றி அனைவருக்கும் சம ஆசனம் வழங்கிய கல்விச் சமூகச் செயற்பாடுகள் அங்கே நிகழ்ந்தன. அந்த முற்போக்கு அனுபவத்தின் நீட்சி சிற்பி சிவ சரவணபவனது சொந்த வாழ்க்கையிலும் பிரதிபலித்தது.

தமது இடை நிலைக் கல்வியை நிறைவு செய்து கொண்டு அவர் கொழும்பில் உள்ள உயர் நீதிமன்றில் அரச எழுதுவினைஞராகக் கடமை யேற்றார். உயர் கல்வியைத் தொடர வேண்டும் என்ற உந்தலால், வேலைச் சுமையுடன் கற்றலில் ஈடுபாடு கொண்டு இலண்டன் பல்கலைக்கழகக் கலை இடைநிலைத் தேர்விலே சித்தியடைந்தார். பட்டம் பெற்று விட வேண்டும் என்று அவரிடத்தே தொடர்ந்த உந்தலினால் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலே சேர்ந்து பட்ட தாரியானார்.

பட்டப்படிப்புக்கல்வித்தரத்தைப் பொறுத்தவரை சென்னை கிறிஸ்தவக் கல்லூரி, சிறப்பிடம் பெற்றிருந்ததோடு மாணவரின், ஆளுமை வளர்ச்சிக்குரிய இணைந்த கலைத் திட்டச் செயற் பாடுகளும் அங்கே வினைத்திறனுடன் இயக்கப்பட்டன. அத்தகைய வளமான பின் புலத்தில் சிற்பியின் செயற்பாடுகள் மேலெழுச்சி கொண்டன.

அங்குள்ள மாணவர் மத்தியிலே அவரது ஆற்றலும் ஆளுமையும் கவர்ச்சியுடன் கலந்த ஏற்புடைமையைப் பெற்றனர். அங்கு வெளியிடப் பட்ட 'இளந்தமிழன்' இதழின் ஆசிரியராக ஒருமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.


அக்காலத்தில் இதழ்களின் வெளியீடுகளும் வாசிப்புப் பண்பாடும் தமிழ்ச் சூழலில் மேம்பாடு கொள்ளத் தொடங்கின. கல்கி, கலைமகள், மஞ்சரி, ஆனந்த விகடன் முதலாம் சஞ்சிகைகள் தமிழகத்திலும் இலங்கையிலும் வாசிப்பு கவர்ச்சி யை மேலோங்கச் செய்து வந்தன. தாமும் ஒரு சஞ்சிகையை நடத்த வேண்டும் என்ற எண்ணம் அவரிடத்தே தோற்றம் பெற்றமைக்கு இலக்கியச் சூழலின் விசைகள் வலுவூட்டின.


அக்காலத்தில் கல்கி, தேவன், லக்ஷ்மி, அகிலன் ஆகியோரின் தொடர்கதைகள் வெளிவந்த வண்ணமிருந்தன. தொடர் கதை வாசிப்பு என்ற புதிய சுவையேற்றம் நிகழ்ந்தது. அகிலனின் குடும்ப மனவெழுச்சிப் புனைவுகளால் சிற்பி கவரப்பெற்றார்.

பின்னர் அவரால் வெளியிடப்பட்ட கலைச் செல்வி இதழில் அகிலனின் தொடர் கதை ஒன்றைப்பிரசுரித்தமை அகிலனின் எழுத்துக்களில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டை மீள வலியுறுத்தியது.

இலட்சிய வேகமும் ஆதர்ஸ நோக்கும், காதலோடு இணைந்த மென்மையான மனித உணர்வுகளும் சிற்பியின் புனைவுகளிலே மேலோங்கியிருந்தன.

மலர்ந்த காதல் என்ற அவரது முதலாவது சிறுகதை 1952ஆம் ஆண்டில் சுதந்திரன் இதழில் வெளிவந்தது. ஈழத்து எழுத்தாளர் உருவாக்கத்தில் சுதந்திரன் இதழின் பணி முக்கியமானது. அதன் ஆசிரியர் குழுவிலே பணிபுரிந்த எஸ்.டி.




சிற்பி சரவணபவனது குடும்பம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிவநாயகம் அவர்களும், முற்போக்கு எழுத்தாளர் பிரேம்ஜி அவர்களும் ஈழத்து எழுத்தாளர் ஊக்குவிப்புச் செயற்பாடுகளை சுதந்திரன் இதழ் வாயிலாக மேற்கொண்டனர்.

தாம் எழுத்தை மேற்கொண்டதுடன் எழுத்தாளர்களை உருவாக்கியும் ஊக்குவித்தும் வந்த சிற்பியின் செயற்பாடுகள் ஈழத்து இலக்கிய வரலாற்றின் சிறப்புப் பதிவுகளாகின்றன.

முதன் முதலாக ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தொகுத்து வெளியிட்ட முன்னோடியும் சிற்பிதான். எழுத்தாளர் பன்னிருவரின் சிறுகதைகளைத் தொகுத்து வெளியிட்ட வேளை, தமது சிறுகதையை அதில் இடம்பெறச் செய்யாமல் விட்டமை, அவரிடத்து ஆழ்ந்த உட்கிடையாக அமைந்த அடக்கத்தைக் காட்டுகின்றது.




சிற்பி கல்லிலே கலைவண்ணம் செய்கின்றான் தான் சொல்லிலே கலைவண்ணம் செய்ய முயன்றதால் சிற்பியானதாக அவர் குறிப்பிட்டுள்ளார். சிற்பியின் ஆக்கங்கள், சுதந்திரன், வீரகேசரி, தீபம், ஈழகேசரி, சிந்தாமணி, மஞ்சரி, புதுமை தினகரன், உதயம், கலை மகள் முதலாம் இதழ்களிலே வெளிவந்தன.

சிற்பியின் எழுத்துக்களை விரும்பி வாசிக்கும் வாசகர் நீட்சியும் ஏற்படத் தொடங்கியது. அந்நிலையில் அவரது ஆக்கங்களை மேலும் பல இதழ்களும் பிரசுரிக்கத் தொடங்கின. கலைக்கண், முரசொலி, மத்திய தீபம், அமிர்தகங்கை, வளர்மதி முதலாம் இதழ்களிலும் அவரது ஆக்கங்கள் வெளிவந்தன.

சிற்பியின் எழுத்து நடை அடுக்கும், தொடர்ச்சியும், மீட்சியும், கவர்ச்சியும் எடுப்பு கொண்டது. வகை மாதிரிக்கு அவரது இரண்டாவது சிறுகதைத் தொகுதியின் முன்னுரையில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி வருமாறு:

'கனவு, இலட்சியம், கற்பனை இலக்கியம் - ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடைய இவை மனிதர்க்கே உரியவை. மனித வாழ்க்கையின் போக்கை நிர்ணயிப்பவை. அதன் தரத்தைப் பிரதி பலிப்பவை. மனிதர்க்குத் தூக்கத்திலே கனவு தோன்றுகின்றது. விழிப்பில் அவர்கள் கனவு காண்கின்றார்கள். தூக்கத்திலே தோன்றும் கனவுகளுள் பெரும்பாலானவை, நடந்து முடிந்த நிகழ்ச்சிகளின் அடக்கி வைக்கப்பட்ட ஆசைகளின் - ஏக்கங்களின் மீள் காட்சி. விழிப்பிலே காணும் கனவு நடக்க வேண்டும் என்று விரும்புகின்ற நிகழ்ச்சிகளின் மனக்காட்சி. அக்காலத்தில் தமிழகத்திலும் ஈழத்திலும் சாதிக் கொடுமைகளை எழுதுதல் சமூகத்தின் தவிர்க்க முடியாத தேவையாயிற்று. சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்கம், மார்க்சிய இயக்கம், ஆலயப்பிரவேச இயக்கம், தீண்டாமை ஒழிப்பு இயக்கம், சம ஆசன சமபோசன இயக்கம், முதலியவை சாதியத்தகர்ப்பு வினைப்பாடுகளை முன்னெடுத்தன. அந்நிலையில் எழுத்தாளர்களும் அந்த வினைப்பாடுகளில் இணைந்து கொண்டனர்.

சாதிக் கொடுமையைக் கலை நயத்துடன் சித்திரிக்கும் கோயில் பூனை என்ற சிறுகதையே சிற்பியின் சிறுகதைகளுள் உன்னதமானது என்று செங்கை ஆழியான் க.குணராசா அடையாளப்படுத்தியுள்ளார். சிறுகதைகளுடன் நாவல் எழுதும் முயற்சியினையும் சிற்பி முன்னெடுத்தார்.

அவ்வகையில் உனக்காக கண்ணே, சிந்தனைக் கண்ணீர், அன்பின்குரல் ஆகிய மூன்று நாவல்களும் அவரால் எழுதப் பெற்றன. இதழாசிரியர், கல்லூரி ஆசிரியர், பின்னர் கல்லூரி அதிபர் என்ற பணிகளினூடே நெடுங் கதை எழுதும் முயற்சியை அவரால் மேற்கொள்ள முடியாதிருந்தது.

கருத்து நிலையில் தமிழ்த் தேசியச் செயற்பாடுகளுக்கு சிற்பி ஆதரவாளராக இருந்தார். இலக்கிய கருத்தியல் நிலையில் முற்போக்கு அணியினரும் எதிரணியினரும் கருத்தாடல்களை மேற்கொண்டிருந்த வேளை, சிற்பி பல சம்பவங்களிலே நடு நிலையாளராக இயங்கினார்.

முற்போக்கு அணியினைச் சேர்ந்த யோகநாதன், பெனடிக் பாலன், தெணியான் முதலியோரின் ஆக்கங்களையும், கலைச் செல்வி இதழிலே வெளியிட்டார். கோட்பாடுகளுக்கு மேலாக இலக்கியத்தை நேசித்தார். கோட்பாடுகளையும் இலக்கியங்களையும் வேறுபடுத்திப் பார்த்த அவரது நோக்கில் கோட்பாடுகளைக் காட்டிலும் இலக்கியப் புனைவே மேலோங்கி நின்றது.

சிற்பியின் இலக்கிய, இலட்சிய வேட்கையின் விளைவாகத் தோற்றம் பெற்றதே கலைச் செல்வி இதழ். தமது உழைப்பின் பெரும்பகுதியை அந்த இதழின் ஆக்கத்துக்கென உள்ளீடு செய்தார். இலங்கையின் ஒரு பெரும் எழுத்தாளர் அணியின் உருவாக்கத்துக்கு கலைச் செல்வியே தளமிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், செ.யோகநாதன், பெனடிக் பாலன், யாழ் நங்கை, ச.வே.பஞ்சாட்சரம், தெணியான், மு.கனகராஜன், செ.கதிர்காமநாதன், வே.குமாரசாமி, துருவன் முதலிய பல எழுத்தாளர்களின் உருவாக்கமும் வளர்ச்சியும் கலைச் செல்வித்தளத்திலே நிகழ்ந்தன.

உயர் கல்வி நிலையிலே தமிழ் மொழி பயிற்று மொழியாகிய சூழலில், தமிழில் தமது ஆக்க மலர்ச்சியை வெளிப்படுத்த முயன்ற இளைஞர் களுக்குரிய எழுத்துப் பண்ணையாக கலைச் செல்வி இதழ் அமைந்தது.

சிறுகதை வளர்ச்சியைச் சிற்பி அவர்கள் ஊக்குவித்ததோடு, ஈழத்துக்கவிதை வளர்ச்சியிலும் அவரது கவனம் திரும்பியது.




கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம், கவிஞர் பா. சத்தியசீலன் முதலாம் மரபுக் கவிஞர்களின் ஆக்கத் திறன்களைக் கலைச்செல்வி வாயி லாகப் பரவலுறச் செய்தமை ஒரு முக்கியமான நிகழ்ச்சி. கவிஞர். ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள் தலைமையில் அக்காலத்து இளங் கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து கலைச்செல்வி வெளி யீடாகத் தந்தமை முக்கியமான பதிவுக்குரிய நிகழ்ச்சி.

இலங்கையின் நவீன இலக்கிய வரலாற்றில் கலைச் செல்விக் காலம் சிறப்புப் பதிவுக்குரிய கதாகாலம். தரமான வாசிப்புச் சுவையை இளைஞரிடையே பரவச் செய்தலில் கலைச் செல்வி தனித்துவமான பங்கு வகித்தது.

ஞானம் இதழ் ஆசிரியர் ஞானசேகரன் அவர்களின் வேண்டுகோளை ஏற்று கலைச் செல்விக் கால அனுபவங்களை சிற்பி பதிவுக்கு உள்ளாக்கினார்.

பொதுவாக, இலங்கையின் சிற்றிதழ்களுக்கு நிகழ்ந்த கதி கலைச் செல்விக்கும் ஏற்பட்டது. பெரும் நிதி நெருக்கடிச் சுமையைத் தாங்க முடியாது. கலைச் செல்வி இதழை நிறுத்திக் கொண்டார்.

தமிழ்க் கட்டுரை இலக்கிய வளர்ச்சியிலும் சிற்பி அவர்களின் பங்கு முக்கியமானது. நடப்பு நிகழ்ச்சி களைத் தொகுத்துக் கட்டுரையாக்கம் செய்த அவரது முயற்சிகள் யாழ்வாசி என்ற புனை பெயரில் எழுத்தாளர் நா. பார்த்தசாரதியின் தீபம் இதழ்களில் வெளிவந்தன.

கலைச் செல்வி நின்ற பொழுதிலும் சிற்பியின் எழுத்துப் பணிகள் தொடர்ந்தன. வாழ்க்கை முழுதும் எழுதிய எழுத்தாளராகவே இருந்தார்.

சிற்பியின் ஆசிரியப் பணி தனித்துவமானது. ஆசிரியவாண்மையை மிகுந்த அர்ப்பணிப்புடனும், தளராத அறிவுத் தேடலுடனும் மேற்கொண்டார். மானிப்பாய் இந்துக் கல்லூரி, நெல்லியடி மகா வித்தியாலயம், உசன் இராமநாதன் வித்தியாலயம், வைத்தீஸ்வர வித்தியாலயம், செங்குந்தா இந்துக் கல்லூரி ஆகியவற்றிலே பயின்ற மாணவர் அவரின் புலமைச் சுவையைப் பெற்றுக் கொண்டனர்.

செங்குந்தா இந்துக் கல்லூரியை ஏனைய வளர்ச்சியடைந்த கல்லூரிகளுடன் போட்டியிடுவதற் குரிய அறிவாற்றற் பெருக்கை ஏற்படுத்தியவர்களுள் சிற்பியும், குழந்தை சண்முகலிங்கமும் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள்.

ஆசிரியப் பணியினூடே அதிபர் பதவியையும் பெற்றுக்கொண்ட சிற்பி சிவசரவணபவன், உசன் இராமநாதன் கல்லூரி, வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி ஆகியவற்றின் அதிபராகவும் செயற் பட்டார். கல்விப் பணிகளினூடே அவரது கற்றல் பணிகளும் ஆய்வுப் பணிகளும் தொடர்ந்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியலிலே தமது முதுமாணிப் பட்டத்தைத் தொடர்ந்தார். பேராசிரியர் ப.சந்திரசேகரன் அவர்களின் ஆற்றுப்படுத்தலில் ராஜாஜி அவர்களின் எழுத்துப் பணிகளையும் கல்விப் பணிகளையும் ஆராய்ந்து, கல்வியியலில் முதுமாணிப் பட்டம் பெற்றார். அவரது கல்விக்கு வயது தடையாக அமையவில்லை.

எழுத்தாளராக, எழுதுவோருக்குத் தளம் அமைத்துக் கொடுத்தவராக என்றுமே கற்றுக் கொண்டிருந்தவராக வாழ்ந்த சிற்பி சரவணபவனது எழுத்துக்களின் செம்மைநிலை இளம் எழுத்தாளர்களுக்கு ஓர் உசாத்துணைப் பதிவாக அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்த பெயர் தெரியாத விபரம்

கலாபூஷணம், வித்துவான்
**வசந்தா வைத்தியநாதன்**

# மூங்கில்



மூங்கில் இது ஒருவகைப் புல்லினத் தாவர மாகும். புதர் போல முளைத்து ஒன்றையொன்று பின்னிக்கொண்டிருக்கும் கணுக்களைக் கொண் டது. ஒரு கணுவிற்கும் மற்றைய கணுவிற்கும் இடைப்பட்ட பாகம் மள மள வென்று அழகாகப் பளபளப்புடன் காணப்படும். இலக்கியங்கள் இதனை பெண்களின் தோளிற்கு உவமையாகக் கூறுவதுண்டு. சம்பந்தப் பெருமானும் தனது கோளறு பதிகத்தில்,

''வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்'' என்று குறிப்பிடுகின்றார். வேய், கழை, பரசு, வேழம், மூங்கிற் குழல், தூம்பு வேணு, வங்கியம், புல் எனப் பல பெயர்களால் மூங்கில் அழைக்கப்படுகின்றது. இதன் இலைகள் புல்லைப் போல் கூர்மையானவை. வேரின் பல முளைகள் தோன்றிப் பெருகும். சில மூங்கில்கள் கெட்டி யாகவும் இருக்கும். முட்களும் இருக்கும். இந்தியக் காடுகளிலும் சீனாவிலும் மூங்கில்கள் அதிகமாக வளர்கின்றன. சீனமக்கள் மூங்கிலிலிருந்து காகிதம் தயாரிக்கின்றனர். வீட்டிற்கு வரிக்கல், கொடி மரம், ஏற்றக்கால், பாய், முறம், பானபாத்திரம், கூடை, பல்லக்குத்தண்டு, பந்தக்கால் எனப் பலவிதங்களில் மூங்கில் பயன்படுகின்றது. குறிப்பாக இல்லங்களில் மங்கல காரியங்களுக்கு 7 அல்லது 9 கணுக்கள் கொண்ட மூங்கிலைப் பயன்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கை மக்கள் மூங்கிலை அதிகம் பயன்படுத்துகின்றனர். கொழும்பிலிருந்து கண்டிக்குச் செல்லும் பாதையில் வேவல்தெனிய உள்ளிட்ட இடங்களில் மூங்கில் தட்டிகள், பூச்சாடிகள், புத்தக அலுமாரிகள், நாற்காலி, மேசை, கூடை என விதவிதமான கைவினைப் பொருட்கள் மூங்கிலால் செய்யப்பட்டு காண்பவர் கண்ணையும் கருத்தையும் சுண்டி இழுக்கின்றன. 'வேவல்' என்ற சிங்களச் சொல்லிற்கு மூங்கில் என்பது பொருளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புராணம்

இனி மூங்கிலைப் பற்றிய புராணக் கூற்றுகளைப் பார்ப்போம். கண்வ முனிவர்- முனிவருள் சிறந்தவர். இவரது தந்தை அப்பிரதிரதன் ஆவர். விசுவாமித்திரர், மேனகைக்குத் தோன்றிய சகுந்தலையை எடுத்து வளர்த்தவர். இவர் தவத்தில் ஆழ்ந்திருக்கும் போது அவர் மீது புற்று மூடியது. அதிலிருந்து மூங்கில் முளைத்தது. அம் மூங்கில்களால் நான்முகன் மூன்று விற்கள் செய்தான். முதலாவது வில் 'பிநாகம்' சிவனுக்குக் கொடுத்தான். இரண்டாவது 'சார்ங்கம்' திருமாலுக்கு உரிமையாகியது. மூன்றாவது 'காண்டீபம்' இதனை நான்முகன் வைத்துக் கொண்டார். பிறகு இந்த வில் இந்திரனிடம் 64 ஆண்டுகள் இருந்து பின்பு வருணனிடம் 100 ஆண்டுகளும் பின் அக்கினியிடம் அந்த வில்லை வருணன் அளிக்க, அக்கினி அதனை தன் பொருட்டால் காண்டவ வனத்தை தகனம் செய்த அர்ச்சுனருக்குக் கொடுத்தான். அந்த வில் 65 ஆண்டுகள் பல்குனனிடம் இருந்ததாம்.

### தலைக்கோல்

'குடமுனி' என்றழைக்கப்படும் அகத்தியர் இந்திரனது 'சுதர்மை' என்ற அரச சபைக்கு வர அப்பொழுது இந்திரனின் மகன் பாட, உருப்பசி காம நோக்கோடு ஆடல் நிகழ்த்தியதால் அவ்வாடல் நெகிழ்ந்தது. வாத்தியக் கருவிகள் நெகிழ்ந்தன. நாரத முனிவரின் வீணை பகை நரம்புபட்டு ஒலித்தது. இதனைக் கண்டு கோபம் கொண்ட அகத்தியர், நாரதன் வீணை மங்கலமிழந்து மண்ணிலே மணையாகுமாறும் இந்திரனின் மகன் சயந்தன் விந்திய மலைக்காட்டில் மூங்கிலாகுமாறும் உருப்பசி மண்ணுலக மங்கையாகுமாறும் சாபமிட்டார். சயந்தன் தலைக்கோலாகும் மூங்கிலாய்ப் பிறந்தான். உருப்பசியோ காவிரிப்பூம் பட்டினத்தில் கணிகையர் குலத்தில் மாதவி என்னும் பெயரோடு பிறந்து ஆடற்கலையில் வல்லவளாகி சோழ மன்னனிடமிருந்து மிக உயரிய 'தலைக்கோல்' பட்டம் பெற்றாள்.



தலைக்கோலைக் கொள்ளுமிடத்து மாற்றரசர் வெண்கொற்றக் குடைக் காம்பும், பகை வேந்தரது எயிற் புறத்து வெட்டின மூங்கிலும் புண்ணிய வரைகளில் விளைந்த மூங்கிலும் பயன்படும். இவற்றுள் முன்னைய இரண்டு வேத்தியற்கும் பின்னையது பொது இயற்குமாம்.

### இசைக்கருவி

இசைக் கருவிகளில் இயற்கையானது வேய்ங் குழலாகும். இதனைப் புல்லாங்குழல் என்றும் கூறுவர். நீண்டு வளர்ந்த மூங்கிலில் வண்டுகள் துளையிட அதன் வழியாக காற்று நுழைந்து வருவதே குழலின் நாதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''ஆடமை குயின்ற அவிர் துளை மருங்கில்
கோடை யவ்வளி குழலிசையாக''

என்று கூறும் அகநானூறு. மக்கள் மூங்கிலிலிருந்து வேய்ங்குழலைக் கண்டார்கள். இடையன் பசுத் திரளோடு காட்டில் தங்கியிருக்கும் பொழுது தீக் கடைக் கோலாலே மூங்கிலில் துளையிட்டு பாலைப்பண்ணை வாசித்தான் என பெரும் பாணாற்றுப்படை கூறுகின்றது. மூங்கிற் குழலைக் கோவலரே பெரும்பான்மையும் ஊதி வந்தமை

''குழல் தொடங்கினரே கோவலர்''

''கல்வாக் கோவல ரூதும்
வல்வாய்ச் சிறுகுழல்'' என நற்றிணை அகநானூறு கூறுகின்றது.

மூங்கிற்குழல் புல்லாங்குழல் எனப்படுகின்றது. இது சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி முதலியவற்றாலும் செய்யப்படுவதை சிலம்பு அடியார்க்கு நல்லார் உரை விளக்குகின்றது. மூங்கிற் குழல் தூம்பு, வங்கியம் என்னும் பெயர்களாலும் வழங்கப்பட்டு வந்தது.

குறுந்தூம்பு 'சிறுவங்கியம்' என்றும் பெருந்தூம்பு 'பெருவங்கியம்' என்றும் வழங்கப்பட்டது. இவை ஏழு துளை, ஐந்து துளை கொண்டன என்பதனை

'ஏழ்புழை, ஐம்புழை, யாழிசை கேழ்தன்ன'

என்ற பரிபாடல் வரிகள் விளக்கந்தருகின்றன. மேலும் கொன்றைக் குழல், ஆம்பலந் தீங்குழல், முல்லையந் தீங்குழல் இவைகள் பற்றி சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையுள் காணலாம்.

எக்காலத்தும் எப்பொழுதும் 'சுரம்' வேறுபடாமலிருப்பது குழல் ஒன்றில் தான். யாழிலும் கூட அதன் நரம்புகள் குளிர்ச்சியாகவே குலைவதுண்டு. அப்பொழுதெல்லாம் குழல் ஓசையின் துணைகொண்டு யாழ் நரம்பிற்கு இசை கூட்டுவதை நெடுநல்வாடை கூறுகின்றது.

வீணா, வேணு, மிருதங்கம் என்ற இசை 'த்ரயீயுள் நடுவண் சிறப்பது குழலே'. பெரியாழ்வாரின் திருப்பாசுரத்துள் கண்ணன் குழலூதும் சிறப்பும் ஆனாயர்குழலின்சிறப்பை பெரிய புராணத்துள்ளும் காணலாம்.


***சமய கருத்தில் மூங்கில்:***

துறவிகளுக்குள்ள பஞ்ச முத்திரைகள். (அடையாளம்)

1. உருத்திராக்கம்
2. கமண்டலம்
3. காவியுடை
4. சடை
5. தண்டு என்பனவாம்.

வாழ்க்கை நிலைகளை நான்காக நமது முன்னோர் பகுத்துள்ளனர். அவை பிரம்மச்சரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம்.

இந்நால்வகை நிலைகளை அடையாளப்படுத்தும் தண்டத்தின் தத்துவத்தை அறிய வேண்டும். துறவி தண்டினைக் கைக்கொள்வது ஒரு மன்னன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செங்கோலை ஏந்தியிருப்பதற்குச் சமம். ஒழுக்க நிலை பேணல் அதன் உட்பொருளாகும்.

1. பிரம்மச்சாரிகளுக்கு உபநயன காலத்திலே கொடுக்கும் அரசு (புரசு) குச்சியே தண்டம் ஆகும்.
2. கிரகஸ்தர்களுக்கு ஓட்டை இல்லாத மூங்கில் தண்டம் ஆகும்.
3. வானப்பிரஸ்தர்களுக்கு ஓட்டை உள்ள மூங்கில் தண்டம் ஆகும்.
4. சந்நியாச ஆசிரமத்தில் இருப்போருக்கு மூங்கில் வகையைச் சேர்ந்த ஒரு குச்சியே தண்டம் ஆகும். இதில் ஓட்டை கிடையாது. ஸ்ரீ சங்கர மதத்தைப் பின்பற்றுவோரும் ஸ்ரீ மத்வ மதத்தைப் பின்பற்று வோரும் ஒரு தண்டத்தை வைத்திருப்பர். இது ஏகதண்டமாகும். வைஷ்ணவ மதத்தைச் சார்ந்தோர் மூன்று தண்டங்களை ஒன்றாகக் கட்டி வைத்திருப்பர். இதற்கு 'திரிதண்டம்' என்று பெயர்.

முத்துக்கள் விளையும் இடங்கள் இருபது என்பர். அவற்றில் மூங்கிலும் ஒன்று.

'தந்தி வராகம் மருப்பு இப்பி பூகம் தனிக்கதலி நந்து சலஞ்சலம் மீன்தலை கொக்கு நளின பின்னார் கந்தரம் சாலி கழை கன்னல் ஆவின்பால் கட்செவி கார் இந்து உடும்பு கரா முத்தம் ஈனும் இருபதுமே' தாம் சொன்னது உண்மை என்பதை நிரூபிக்க மூங்கிலைப் பிடித்துக் கொண்டு சத்தியம் செய்த வரலாற்றை பெரியபுராணம் 'திருநீலகண்டர்' வரலாற்றில் பொறித்து வைத்துள்ளது.

சிவயோகியார் கொடுத்த ஓடு தொலைந்தது உண்மை என மனைவியின் கையைப்பிடித்து சத்தியம் செய்யுமாறு தில்லை மறையோர்கள் கேட்க எங்களுக்குள் ஓர் சபதம் உள்ளதால் நான் மட்டும் குளத்துள் மூழ்கி சத்தியம் செய்கின்றேன் என்று திருநீலகண்டர் கூற அதனை அந்தணர்கள் ஏற்க மறுத்தனர்.

அதனால் ஒரு மூங்கிலின் நுனியை மனைவியும் மறுமுனையை திருநீலகண்டரும் பிடித்துக் கொண்டு தில்லை திருப்புலீச்சரத்து ஆலயத் திருக்குளத்தில் மூழ்க இழந்த இளமையுடன் எழுந்தார்.

*"மனைவியார் தம்மைக் கொண்டு மறைச்சி*
*வயோகியார் முன்*
*சினவிடைப் பாகர் மேவும் திருப்புலீச் சுரத்து முன்னர்*
*நனைமலர்ச் சோலைவாவி நண்ணி தம் உண்மை*
*காப்பார்*
*புனை மணி வேணுத் தண்டின் இருதலைபிடித்துப்*
*புக்கார்"*

### வேணுः மூங்கில்
### மூங்கிலால் புகழடைந்த தலங்கள்

திருப்பாலூர்: தொண்டை நாட்டுத் தலம்

திருத்தணி பேருந்து சாலையில் கடம்பத்தூர்சாலை பிரியுமிடத்தில் உள்ளது திருப்பாலூர்.

மூங்கிற் காட்டிலிருந்து வெளிப்பட்ட பெருமான் பசுவொன்று மூங்கிற் புதரில் பால் சொரிய அதனைக் கண்ட வேடர்கள் அவ்விடத்தை வெட்டிப் பார்க்க சிவலிங்கம் வெளிப்பட்டது. சிவலிங்கத்தின் மேற்புறத்திலும் பக்கவாட் டுக்களிலும் வெட்டுத் தழும்புகள் உள்ளன.

மூலமூர்த்தி : பாலூர்நாதர் ; பசுபதீஸ்வரர்

சுயம்பு தீண்டாத் திருமேனி. சதுரபீட ஆவுடையார். மூங்கிற் புதரினின்று வெளிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பட்டதால் திருமேனி சொர சொரப்பாகவும் தழும்பு களுடனும் உள்ளது. சுவாமிக்கு எண்ணெய்க்காப்பு மட்டும் செய்வதில்லை.

**தலமரம்** : மூங்கில்

**திருநெல்வேலி** : பாண்டி நாட்டுத் திருத்தலம். பொருனையாற்றின் கரையிலுள்ளது. எல்லா இடங்களிலிருந்தும் டெல்லி, பேருந்து, புகை வண்டி வசதிகள் உள்ளன.

பாற்குடம் சுமந்து சென்ற பக்தன் ஒருவனை, இறைவன் மூங்கில் வடிவமாக இருந்து இடறச் செய்து பால் முழுவதையும் தன்மீது கவிழச் செய்தார். மூங்கில் புதரை வெட்டிப் பார்க்க, அதனால் வெட்டுண்ட திருமேனியுடன் இறைவன் காட்சி கொடுத்தார். அதனால் வேணுவனநாதர், வேணுவனேஸ்வரர் என்றழைக்கப்பட்டார்.

மூலவர் : வேய்முத்தநாதர் நெல்லையப்பர் என்ற திருநாமங்களுடன் சுயம்பு மூர்த்தி.

**தலமரம்** : மூங்கில்

கோயில் 14 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. வெட்டப்பட்ட அடையாளத்துடன் கூடிய மூலமூர்த்தி. இப்பொழுதுள்ளது 21 ஆவது ஆவுடையார் என்றும் 20 ஆவுடையார்கள் பூமியின் கீழ் உள்ளனர் என்றும் கூறுகின்றனர். இம்மூர்த்தி 'மிருத்யஞ்ச மூர்த்தி'யாவார்.

### *செவிவழிச் செய்தி :*

இரண்டு நண்பர்கள், இசைஞானம் உடையவர் கள். ஒருநாள் இருவரும் சங்கீதத்தைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தனர். அதில் இராகங்க ளின் தன்மைகள் பற்றியும் பாவ பூர்வமாக ஒரு ராகத்தைப் பாடினால் அந்த ராகத்தினால் விளையும் விளைவைப் பற்றியும் சர்ச்சை எழுந்தது. ஒருவன் உடன்பாடாகவும் மற்றவன் மறுத்தும் பேசி தங்களுள் பூசலிட்டனர்.

அதில் ஒருவன் கூறினான். 'ஆகிரி' என்ற இராகத்தை பாடினால் உணவு கிடைக்காது என்றான். மற்றவன் மறுத்து நாளைக்கு நான் உணவைக் கையிலேயே கொண்டு வந்து ஆகிரி பாடுவேன் எப்படி உணவு கிடைக்காமல் போகும் என்று பார்க்கிறேன் என்று சவால் விட்டான்.

மறுநாள் நண்பர்கள் இருவரும் காவிரிக் கரையில் கூடினர். இளங்காலை மனோரம்மியான நேரம். கொண்டுவந்திருக்கும் உணவைக் கீழே வைத்தால் எறும்புகள் மொய்த்துவிடும். அல்லது நாய் முதலான பிராணிகள் கொண்டு சென்றுவிடும். அதனால் பக்கத்திலே வளைந்து நின்ற ஓர் மூங்கிலில் • உணவை கட்டிவிட்டு கவலை யில்லாமல் 'ஆகிரி' ஆலாபனையைப் பாடத் தொடங்கி மிக விஸ்தாரமாக அதனை வளர்த்துச் சென்றனர். நேரம் மதியம் ஒரு மணியைத் தாண்டிவிட்டது. பசி வயிற்றைக் கிள்ளியது.

உணவைத் தேடினர், காணவில்லை. அவர்கள் மூங்கிலில் கட்டிய உணவு எட்டாத உயரத்திலேயே நின்று அவர்களைப் பார்த்துச் சிரித்தது. காரணம் என்ன தெரியுமா? காலையில் வெயில் படாத நேரத்தில் மூங்கில்கள் தழைந்து மண்ணைத் தொட்டபடி இருக்கும். வெயில் ஏற ஏற மூங்கில்கள் நிமிர்ந்து விடும்.

இப்பொழுது தெரிகிறதா? கையில் உணவிருந்தும் பசிக்குப் புசிக்க முடியாமல் போனதற்குக் காரணம் ஆகிரி இராகமா? மூங்கிலா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோத்திரவம் என அழைக்கப்படும் வரகு

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன்
M.D. (S) India சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

இது ஓராண்டுக்குரிய செடியாகும். உலர் வலயத்தில் கால போகத்தில் கிடைக்கும் மழைவீழ்ச்சி இப்பயிரின் உற்பத்திக்கு போதுமானதாகும். நெடுந்தீவுப் பகுதியில் கூடுதலாக பயிரடப்படுகிறது. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

இதன் நெல் உருண்டு திரண்டு ஒருவித கருநிற உமியால் மூடப்பட்டிருக்கும்.

### வரகு நெல்லிலிருந்து வரகு புழுகங்கலரிசி தயாரிக்கும் முறை

வரகை நீர் விட்டு நெல் அவிப்பது போல் அவித்து வெயிலில் நன்கு காயவைத்து, அரைக்கும் ஆலையில் அரிசியாக்கி புடைத்து, கொளித்து அரிசியை வேறாக்கவும், நீரிழிவு நோயாளிகள், உடற்பருமன் அதிகரித்தவர்கள் வாரத்திற்கு இரு நாட்களாவது வரகரிசியை சோறாக சமைத்து உண்ணுதல் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



***100 கிராம் வரகில் உள்ள சத்துக்கள்***

புரதம் 8.3 கிராம்
கொழுப்பு 1.4 கிராம்
காபோவைதரேற்று 65.9
கல்சியம் 27 மி.கிராம்
பொஸ்பரஸ் 188 மி.கிராம்
இரும்பு 5.2 மி.கிராம்
தயமின் 330 மைக்ரோ கிராம்
ரைபோபிரோவின் 90 மைக்ரோகிராம்
நார்ப்பொருள் 9.0கிராம்
ஈரலிப்பு 12.8 கிராம்
சக்தி 309 கி.கலோரி

***வரகரிசிமா தயாரித்தல்***

வரகு பச்சையரிசி கழுவி உமி, மண் நீக்கி வெயிலில் நன்கு காயவைத்து மில்லில் மாவாக்கவும் பின்பு அரித்தெடுக்கவும் காற்றுப் படாமல் அடைத்து வைக்கவும்.

***வரகுப்புழுங்கல் அரிசிக் கஞ்சி***

வரகுப்புழுங்கலரிசி 100 கிராமிற்கு 600 மில்லி நீர்விட்டு தேவையானளவு உப்புப் போட்டு கொதிக்க வைத்த நீரில் வரகரியை வேகவிட்டு கொதித்துவரும்போது நீர்த் தன்மையற்று இறக்கவும்.

***நோயாளிகளுக்கு ஏற்ற இலகு ஆகாரம் வரகு உப்புக்கஞ்சி***

50 கிராம் வரகு புழுங்கலரிசியை கழுவி மண், உமி அகற்றி 4 டம்ளர் நீரைக் கொதிக்கவைத்து வரகுப்புழுங்கலரிசியை சேர்த்து வேகவிட்டு அரிசி வெந்துவரும் போது, 1/4 தேக்கரண்டி வெந்தயத்தை பொட்டணியாகக் கட்டி 2 பல்லு உள்ளியையும் வெட்டி சேர்த்து அவியவிட்டு இறக்கும்போது சிறிது உப்பு சேர்க்கவும். இதனை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இலகுவில் சமிபாடு அடைந்து அகத்துறிஞ்சக் கூடிய இலகு ஆகாரமாக பயன் படுத்தலாம்.



***வரகு பொரியரிசிமா தயாரித்து சமபோசா தயாரிக்கும் முறை***

இக்காலகட்டத்தில்பாடசாலைமாணவர்களாகிய வளரும் சிறார்களுக்கு அதிகளவில் செயற்கை பொதியிடப் பட்ட உப உணவு வகைகளையே வாங்கி பயன்படுத்துவதால் பல்வேறு நோய்களுக்கு இளம் சந்ததியினர் தள்ளப் படுகின்றனர். ஆரோக்கியமானதும் சமவிகித போசாக்கானது மான சமபோசாமாவை வீட்டிலேயே தயாரித்து பயன் படுத்தலாம்.

வரகு புழுங்கலரிசியை கழுவி கல், மண் உமி முதலியவற்றை அகற்றி வாணலியில் போட்டு வறுத்தெடுத்து மில்லில் மாவாக்கி இதில் 3 பங்கு கைக்குத்தலரிசி பொரியரிசிமா 3 பங்கு, உழுத்தமா 2 பங்கு, பயற்றமா 2 பங்கு அமுக்கிராவேர் 1/4 பங்கு சேர்த்து எல்லாவற்றையும் மீண்டும் ஒன்றாக சேர்த்து அரித்து இதனுடன் வறுத்த தேங்காய்பூ, சீனி சேர்த்து சுடுநீர் விட்டு குழைத்து உருண்டையாகப் பிடித்து சாப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





### வரகு இலைக்கஞ்சி

வரகு பச்சையரிசி 200 கிராம்
முளைவிட்ட பயறு 50 கிராம்
தேங்காய் 1/2 மூடி
பொன்னாங்காணிச்சாறு / வல்லாரைச்சாறு
தேவையானளவு
உள்ளி 25 கிராம்
இஞ்சி 25 கிராம்

வரகரிசியை நீரில் கொதிக்க வைத்து அரிசி நன்கு வெந்ததும் முளைவிட்ட பயறையும் போட்டு சிறிது வேகவிட்டு தேங்காய்ப்பால் விட்டு உள்ளி, இஞ்சியை பட்டுப்போல் அம்மியில் அரைத்து அதனையும் சேர்த்து வேகவிட்டு தேவையானளவு உப்பைச் சேர்த்து இறக்கும் போது இலைச்சாற்றை விட்டு இறக்கி 200 மில்லி அளவு தினமும் அருந்தலாம். இதனுடைய,

தாவரவியற் பெயர் - Paspalum Scrobiculatum
குடும்பம் - Poaceae

### பொதுக்குணம்

எறிகபத்தோ டேபலநோ யெய்தும் வறட்சி
சொறி சிரங்கு பித்தத் தொடரும் - நிறையுங்
கரகமெனப் பூரித்த கச்சுமுனை மாதே
வரகரிசிச் சோற்றா வழுத்து

மூச்செறிகின்ற இரைப்பு, இதைச் சேர்ந்த பல நோய்கள் தீரும். உடல்வறட்சி, சொறி, சிரங்கு, அழல் இவை உண்டாம்.

இன்று எம்மக்களிடையே நார்த்தன்மை வாய்ந்த கம்பு, வரகு, குரக்கன் போன்ற பாவனை மிக மிக அருகிவந்துள்ளது. உடற்பருமன், கொலஸ்ரோல் அதிகரிப்பு போன்ற ஆயுள் விரட்டும் நோய்களுக்கு முக்கிய காரணங்களுள் நார்த்தன்மையற்ற உணவுப்பாவனையும் முக்கிய இடம் வகிக்கின்றது.

வரகு நெல்லிலிருந்து அரிசியை பாவனைகளுக்காக பதப்படுத்தும் முறைகள் மக்களுக்கு தெரியாதுள்ளது. எனவே நிச்சயம் வரகரிசி பதப்படுத்தல், பாவனைபற்றி மக்கள் அறிந்திருத்தல் அவசியமாகும். நீரிழிவு நோயாளர்களும் வரகை பயன்படுத்தல் சிறந்ததாகும்.

### வரகு சேர் அடை

1/2 சுண்டு வரகுமா
1 சுண்டு கோதுமைமா
1/2 பிடி முருங்கை இலை
6 செத்தல் மிளகாய்
4 பச்சைமிளகாய்
1/2 தேங்காய் துருவல்
பெரியவெங்காயம் 1
நல்லெண்ணெய்- 2 மேசைக்கரண்டி
உப்பு அளவாக
கரட்- 100 கிராம்
கறிவேப்பிலை ஒரு நெட்டு

வெள்ளைமா, வரகுமா நன்கு அரித்து, கரட், இலை முதலானவைகளைக் கழுவி, வெங்காயம், பச்சை மிளகாய் எல்லாவற்றையும் சிறிதாக அரிந்து, பாத்திரத்தில் போட்டு அளவான உப்பும், நீரும் சேர்த்து நன்கு பிசைந்து 2 மணித்தியாலம் சேரவைத்து சிறு உருண்டையாக்கி, வாழையிலையில் அடையாக தட்டி தோசைக்கல்லில் நல்லெண்ணெய் பூசி அடைபோட்டு வேகவைத்து எடுத்துக்கொள்ளவும். ஊட்டச்சத்துக்களும் கிடைப்பதுடன் இலகுவில் சமிபாடடைந்து, மலத்தை இளக்கும் தன்மையுடையது.

வரகுநெல்லில் 7 உமி உறைகள் இருக்கும். அவற்றை நீக்கியே பயன்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சங்கமன்கண்டி பிள்ளையார் ஆலயம்

## மூர்த்தி சிறிது, கீர்த்தி பெரிது

திருமதி. யோகா. யோகேந்திரன்

மட்டு. நகரிலிருந்து பொத்துவிலை நோக்கிப் பயணிக்கும் போது கண்களுக்குக் குளிர்ச்சியூட்டும் பற்றைக்காடுகளும் காட்டு மலர்வகைகளும் பச்சைப் பசேலென்ற வயற் பிரதேசங்களும் பசுமையான புல்வெளிகளும் அங்கு கூட்டம் கூட்டமாக மேயும் மந்தைகளும் ஆங்காங்கே நீர் நிலைகளும் வண்ணப் பறவைகளும் எம்மை எதிர் கொள்ளும். அவ்வாறு செல்கையில் திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தாண்டியடி என்னும் கிராமம் குறுக்கிடும். தாண்டியடிக்கு மேற்குப்புறமாக செல்லும் பாதையொன்றினூடாக இருபுறமும் நெடிதுயர்ந்த மரங்களின் நிழலி னூடே கிட்டத்தட்ட அரைக் கிலோ மீட்டர் சென்றதும் வினைதீர்க்கும் விநாயகப் பெருமான் 'காட்டுப் பிள்ளையார்' என்னும் பெயருடன் கோவில் கொண்டருளியிருப்பதைக் காணலாம்.

இனிய இயற்கைச் சூழலில் அமர்ந்திருக்கும் விநாயகரை காட்டுப் பிள்ளையார் என்றே இப்பிரதேச மக்கள் அழைக்கின்றனர். காட்டுப் பிள்ளையார் என இவரை விளிப்பதால் 'நாட்டுப் பிள்ளையார்' என்றொருவரும் உள்ளாரோ? என்கின்ற கேள்வியும் எழ வேண்டுமே! ஆம் இந்தக் காட்டுப் பிள்ளையாருக்கு அனுசரணையாக ரோட்டுப் பிள்ளையாரும் இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரைச் சிலர் குறும்பாக 'ஏரியா மனேஜர்' என்று கூறுவதுமுண்டு. பிரதான வீதியில் இருக்கும் இப்பிள்ளையார் ஆலயத்தடியில் வாகனங்கள் தரித்து நிற்பதும் பயணிகள் அவசர அவசரமாக இறங்கிப் பிள்ளையாரைத் தரிசித்து தம் பயணம் வில்லங்கமின்றி நிறைவேறப் பிரார்த்தித்துச் செல்வதுண்டு. (நம் முறிகண்டியானைப் போல) அது மட்டுமன்றி காட்டுப்பிள்ளையாருக்குப் பொங்கலிடவோ தரிசிக்கவோ செல்லும் அடிய வர்கள் ரோட்டுப் பிள்ளையாரைத் தரிசித்தே செல்வர். பாத யாத்திரையாக கதிர்காமம் செல்லும் அடியார்கள் கூட இவ்விரு பிள்ளையாரையும் வணங்கியே செல்வர்.

ஈழத்தின் பூர்வீகக் குடிகளில் ஒரு பிரிவினரான 'நாகர்' என்னும் திராவிடக் குலத்தவரின் ஆட்சிப் பிரதேசமாகவும் வாழ்விடமாகவும் சங்கமன்கண்டி விளங்கியது.

கி.மு. ஏழாம் நூற்றாண்டளவில் இந்தச் சங்கமன் கண்டி நகரை உருவாக்கியது சங்கமன் என்னும் நாகர் குலத்தவனாவான்.

அதனால் இதற்கு 'சங்கமன் கண்டி' எனப் பெயர் நிலவியதாக வரலாறு. 'கண்டி' என்பதற்கு நகரம் என்னும் கருத்தொன்றும் உள்ளதால் சங்கமன் உருவாக்கிய நகரம் என்னும் பொருள்பட 'சங் கமன் கண்டி' என அழைக்கப்பட்டதாகக் கூறு வாரும் உளர்.



காட்டுப் பிள்ளையாரின் தல விருட்சம் வில்வ மாகவும் தீர்த்தம் அருகிலுள்ள அல்லிக்குளமாகவும் உள்ளது. தல விருட்சம் வில்வமாக இருப்பது சிவாலயத்திலன்றோ என்கின்ற சந்தேகமும் இங்கே தோன்றக்கூடும். ஆதியில் இங்கு சிவாலயமே இருந்ததென்பதே இதற்கான காரணமென்பதும் மூலவர் லிங்க வடிவுடன் இருப்பதும் இதற்கான இன்னுமொரு காரணமாகும்.

பண்டைய கால இலங்கையின் வரலாற்றில் நாகரிகம் வளர்ச்சி பெற்றிருந்த இடங்களில் இந்தச் சங்கமன் கண்டியும் ஒன்றாகுமெனத் தெரிய வருகின்றது. கி.மு. நான்காம் நூற்றாண்டிலேயே

அக்காலம் தொடக்கம் சங்கமன் கண்டியை இராஜதானியாகக் கொண்டு 'நாகர்முனை' எனப் பெயர் கொண்டிருந்த இன்றையத் திருக்கோவில் நாகர்குலச் சிற்றரசர்களால் பரிபாலனம் செய்யப் பட்டு வந்தது. சைவசமயக் கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டிருந்த இச்சிற்றரசர்களிடையே சிவவழிபாடும் வேல் வழிபாடும் சிறப்புற்றிருந் தன. இதன் பிரதிபலிப்பாக 'வெள்ளை நாவற்பதி' எனப்பட்ட திருக்கோவிலில் வேல் வழிபாடும் சங் கமன்கண்டியில் சிவ வழிபாடும் சிறப்புற்றிருந்தன.

கி.மு. நான்காம், மூன்றாம் நூற்றாண்டுகளில் நாகர்முனைப் பிரதேசங்களில் பாண்டியர், நாகர், இயக்கர் போன்ற குடியினர் நிறைந்து வாழ்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கமன் கண்டியிலும் நாகர் குலத்தினரின் செல்வாக்கு அதிகமாயிருந்தது. திராவிடர்களான இவர்களிடையே சைவம் செழித்திருந்ததுடன் வழிபாட்டிடங்களும் பரவலாக இருந்தன. இந்தக் காலகட்டத்தில் பாண்டிய மன்னனின் ஆதரவில் சங்கமன் கண்டிச் சிவாலயம் புகழ் பெற்றிருந்தது.

பாண்டியரின் ஆட்சிக் காலத்தில் கி.மு. 3 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில்தான் இப்பிரதேசத்தில் பௌத்தம் அறிமுகமானது.

இந்த விதமாக பண்டைய வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றிருந்த சங்கமன் கண்டி கி.மு.3 ஆம் நூற்றாண்டில் பௌத்தம் அறிமுகமாகியதைத் தொடர்ந்து இங்கு வாழ்ந்த தமிழ்ச் சைவர்களாகிய பாண்டியர், நாகர், இயக்கர் ஆகிய குல மக்களில் அநேகமானோர் பௌத்த மதத்தைத் தழுவி தமிழ் பௌத்தர்களாக வாழ்ந்தனர். ஆயினும் அவர்கள் தமது சைவ சமய நம்பிக்கைகளையும் வழிபாடுகளையும் கைவிடாது பேணிக்காத்தனர் என்பது ஆய்வுகள் மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

அக்காலம் தொடங்கி சங்கமன் கண்டி உள்ளிட்ட பிரதேசத்தில் சைவமும் பௌத்தமும் ஒருமித்தே வளர்ந்து வந்தன. இதற்கு ஆதாரமாக சங்கமன் கண்டியில் சிவாலயமும் பௌத்த வழிபாட்டுத் தலங்களும் இருந்தமைக்கான வரலாற்றுத் தடயங்கள் காணப்படுகின்றன.

சங்கமன் கண்டியில் காணப்படும் உயரமான படர்ந்த மலைப்பிரதேசத்தின் வடமேற்குப் புறமாக அமைந்துள்ள சிவாலயமானது அக்காலம் தொடக்கம் சங்கமன் கண்டியில் தமிழர்கள் சைவர்களாகவும் பௌத்தர்களாகவும் இருந்த போதும் இச்சிவாலயத்தில் வழிபாடு செய்து வந்துள்ளதும் சோழர்களது ஆட்சிக்காலத்தில் அவர்களது அனுசரணையைப் பெற்றிருந்தமையும் கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சோழர்களது ஆட்சியைத் தொடர்ந்து பொலன்னறுவை ஆட்சிக்காலத்திலும் குறிப்பாக இரண்டாம் கஜபாகுவின் ஆட்சிக்காலம் வரை இந்நிலை காணப்பட்டது. முதலாம் விஜயபாகு இவரது மகனான இரண்டாம் விக்கிரமபாகு, இரண்டாம் கஜபாகு ஆகிய மன்னர்கள் காலத்தில் கி.பி.1070 தொடக்கம் கி.பி.1152 வரை பொலன்னறுவைக்கும் சங்கமன் கண்டிக்கும் இடையில் மிகநெருங்கிய கலாசார உறவுகள் நிலவி வந்ததாக வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. சோழர்களது ஆட்சியில் தமிழும் சைவமும் எவ்வாறு பேணப்பட்டு வந்ததோ அதே விதமாகவே முதலாம் கஜபாகு மன்னன் தமிழையும் சைவத்தையும் ஆதரித்து வந்துள்ளமை அவனது காலக் கல்வெட்டுக்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இலங்கையிலிருந்து சோழர்களை அகற்றுவதற்காக முதலாம் விஜயபாகு போராடி வந்தபோதும் ஈழத்தமிழர்களுடன் சுமுகமான உறவையே கொண்டிருந்தான். பௌத்தத்தைப் போலவே சைவத்தையும் அவன் ஆதரித்து வந்தமை போற்றத்தக்க விடயம். பொலன்னறுவையில் கூட சைவ சமயம் செல்வாக்குப் பெற்றிருந்தது.

முதலாம் விஜயபாகுவின் இரண்டு அரசிகளான திரிலோக சுந்தரியும் லீலாவதியும் இந்திய வம்சத்து இந்துக்கள். இவ்விருவரில் கலிங்கத்துப் பெண்ணான திரிலோக சுந்தரி மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தாள். இவளது சைவசமயப் பணிகள் சங்குமன் கண்டியில் சிறப்புற்றிருந்தன.

திரிலோகசுந்தரி சங்கமன் கண்டியில் அமைக்கப்பட்டிருந்த அரசமாளிகையிலிருந்தே தன் சமயப் பணிகளை மேற்கொண்டாள். இவள் அக்கால கட்டத்தில் திருக்கோவில் ஆலயத்திருப்பணியையும் செய்து முடித்ததாகவும் சங்கமன் கண்டிக்கு வடக்கே இருந்த 'வேவெல' என்ற நெற்காணியை திருக்கோவில் ஆலயத்திற்கு வழங்கியதாகவும் பூர்வ சப்த ஸ்தலங்கள், சூளவம்சம் ஆகிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு திருக்கோவில் கல்வெட்டிலும் பொறிக்கப்பட்டிருப்பது முக்கிய தகவலாகும். இவ்வாறு சங்கமன் கண்டி அரசமாளிகையில் தங்கியிருந்து அரச பரிபாலனமும் ஆலயத் திருப்பணிகளும் செய்த விஜயபாகு மன்னனும் அவனது ராணிகளும் ஆலய விழாக்களிலும் பங்கு கொண்டு சிறப்பித்ததாக வரலாற்றுப் பதிவுகள் மூலம் அறியமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் விஜயபாகுவிற்குப் பின் அவனது மகனான 2 ஆம் விக்கிரமபாகு சைவ சமயத்தவனாகவே பொலன்னறுவையிலிருந்து ஆட்சி புரிந்தான். இவனது அரச நடவடிக்கைகளுக்கான ஊடகமொழி தமிழாகவே இருந்தது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய விடயமாகும். இவன் தமிழ்மொழி மீதும் சைவத்தின் மீதும் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றினை 'ராகம் பிலியாவை' என்னும் கல்வெட்டு மிகச் சிறப்பாகத் தெரிவிக்கின்றது.

விக்கிரமபாகுவிற்குப் பின்னர் அவனது மகனான 2 ஆம் கஜபாகு அரசனானான். இவனது ஆட்சி வடக்குக் கிழக்குப் பகுதிகளிலே செல்வாக்குப் பெற்றிருந்தது. இவனது இளமைக்காலத்தில் கூட சைவசமயமே மேலோங்கி விளங்கியது.

திருக்கோணேஸ்வரத்தைப் போன்று சங்கமன் கண்டிச் சிவாலயமும் கஜபாகு மன்னனின் திருப்பணியில் முதன்மை பெற்று வந்துள்ளதோடு திருக்கோவில் சித்திர வேலாயுதர் ஆலயத்திலும் (அப்போதிருந்த சிவாலயம்) அவனது செயற்பாடுகள் பிரபலம் பெற்றிருந்தது.

## குளக்கோட்டன் திருப்பணி:

கலிங்க குலத்தவனான மாகனும் ஜயபாகு என்ற குளக்கோட்டனும் இலங்கையில் ஆட்சிபுரிந்த காலத்தில் (கி.பி.1251-1241) தமிழ் சைவர்கள் நிறைந்திருந்த திருக்கோவில் பிரதேசத்தில் சமூக சமய பண்பாட்டு வளர்ச்சிக்கு அரும்பணி புரிந்தார்கள் என மட்டக்களப்பு மான்மியம் உள்ளிட்ட மரபு இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

மாகோனது ஆட்சிக்காலத்தில் மாகோனது சைவ சமயச் செயற்பாடுகளை முன்னின்று செய்து முடித்தவன் ஜயபாகு என்ற குளக்கோட்டனேயாவான். திருக்கோவில் சித்திர வேலாயுதர் ஆலயம் சங்கமன் கண்டிச் சிவாலயம் என்பன மாகோனால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டன. திருக்கோவிலில் கற்கோவிலான கருவறையும் சங்கமன் கண்டியில் உயர்ந்த கோபுரங் கொண்ட சிவாலயமாகவும் இவன் நிர்மாணித்தான். கி.மு.6 ஆம் நூற்றாண்டில் ஆரம்பம் முதல் 'நாகர்முனை' எனப்பட்ட திருக்கோவிலின் தென் எல்லைப் பகுதியாக சங்கமன் கண்டியும் வடக்கே சாகாமத்தின் மொட்டையாகல் (தாடகிரி) மலையும் எல்லையாக வகுக்கப்பட்டிருந்தது பற்றி மட்டக்களப்பு மான்மியம் தெளிவுபடுத்துவதாயுள்ளது.

## பாண்டியர் காலம்

பாண்டிய மன்னனான குலசேகரன் இலங்கை மீது போர் தொடுத்து கி.பி.1284 தொடக்கம் கி.பி.1304 வரை இலங்கையை ஒரு மாநிலமாக ஆட்சிபுரிந்தான். பாண்டியர் காலத்தில் இலங்கையின் கிழக்குப் பகுதியில் இவர்களது சைவத்திருப்பணிகள் அதிகமாக நடைபெற்றன. பாண்டியர் காலத்தில் பாண்டிய நாட்டிற்கும் திருக்கோவில் பிரதேசத்திற்கும் நேரடியான சமூக சமய வணிகத் தொடர்புகள் இருந்துள்ளன. திருக்கோவில் துறையானது அக்காலத்தில் பிரசித்தி பெற்ற துறைமுகமாக இருந்து வந்துள்ளது. இக்காலகட்டத்தில் பாண்டியரின் கவனம் சங்கமன் கண்டி சிவாலயத்திலும் இருந்ததாகவும் அங்கு பாண்டியர்கால கலைமரபுகள் இடம் பெற்றதாகவும் வரலாறுகள் இயம்புகின்றன.

## வன்னியர் காலம்

கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் பொலன்னறுவை இராச்சியம் பல படையெடுப்புக்களால் நிலைகுலைந்து போனதைத் தொடர்ந்து மன்னன் மாகனும் அவனது சகாக்களும் கிழக்கிலங்கையின் பல பாகங்களிலும் மக்களைக் குடியேற்றிச் சிற்றரசுகளை நிறுவினர். முன்னர் கலிங்கர் பாண்டியரும் அதைத் தொடர்ந்து வன்னியரும் இப்பிரதேசங்களில் பரிபாலனம் செய்ததால் இலங்கையின் தென் கிழக்குப் பிரதேசங்களில் குறிப்பாக திருக்கோவில் பிரதேசத்திலும் அதை அண்டிய சங்கமன் கண்டிப் பிரதேசத்திலும் தென்னிந்திய சமய கலாசார பரிபாலன வழிபாட்டு முறைகள் செல்வாக்குச் செலுத்தின.

குளக்கோட்டனால் கருங்கற்களைக் கொண்டு அத்திவாரமிடப்பட்டு செங்கற்களால் உயர்ந்த கோபுரத்துடன் நிர்மாணிக்கப்பட்ட சங்கமன் கண்டிச் சிவாலயம் பூசை வழிபாடுகளுடன் சிறப்பாக இருந்தது.

## போர்த்துக்கேயரின் அட்டூழியம்

போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் இலங்கைத் தேசாதிபதியாக இருந்த அசவிடோ என்பவனின் கட்டளைப்படி பல நூற்றுக்கணக்கான கோவில்கள் அழித்துத் துவம்சம் செய்யப்பட்டன. அவற்றுள் திருக்கோவில் திருத்தலம் சங்கமன் கண்டிச் சிவாலயம் என்பனவும் உட்பட்டிருந்தன.

இன்றையக் கட்டடக்கலை வல்லுனர்களையே பிரமிக்கச் செய்யும் பொறிமுறைநுட்பங்களும் ஆதிகாலத் தமிழர்களின் கலைநுட்பங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஸ்ரீ முருகன் ஆலயம்



எழுந்தருளியாக அருள் பாலித்துக் கொண்டிருக்கும் விக்கினேஸ்வரர் திருவூஞ்சல் ஆடுவதற்கு தயாராகும் காட்சி



விசேட தினங்களில் மக்கள் பிள்ளையாருக்குப் பொங்கலிடுவர்

வெறும் மனிதவலுவை மட்டுமே பயன்படுத்தி அமைக்கப்பட்ட பிரமாண்டமான தூண்களைக் கொண்ட கட்டடங்களையும் காட்டு மிராண்டித்தனமாக போர்த்துக்கேயர் நாசப்படுத்தியதைத் தொடர்ந்து சங்கமன் கண்டி நகரப்பகுதியையும் நகரை அண்டிய பகுதிகளையும் வாழிடமாகக் கொண்ட மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறினர். அதனைத் தொடர்ந்து சங்கமன் கண்டி நகர் பாழடைந்து புதர்கள் மண்டிக் காலவோட்டத்தில் அடர்ந்த காடாக மாற்றம் பெற்றது.

### சங்கமன் கண்டியில் பிள்ளையார் ஆலயம் தோற்றம் பெற்றமை

போர்த்துக்கேயர் சங்கமன்கண்டிச் சிவாலயத்தை அழித்த காலத்தில் குடிமக்கள் அப்பிரதேசத்தை விட்டகன்று கிட்டத்தட்ட 200 ஆண்டுகளின் பின்னர் அதாவது 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தற்போதுள்ள சங்கமன் கண்டி பிள்ளையார் ஆலயம் திறந்த வெளிக்கோவிலாக தோற்றம் பெற்றது. முன்பு இருந்து சிதைக்கப்பட்ட சிவாலயத்திற்குத் தென்கிழக்காக இருந்த பண்டைக்காலக் குளமொன்று உடைப்பெடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்மேடாக மலைபோல் இறுகியிருந்த இடத்திலேயே இத்திறந்த வெளிக்கோவில் அமையப் பெற்றது.

ஆங்கிலேயர் ஆட்சியில் ஏற்பட்ட கல்வி, பொருளாதார, போக்குவரத்து வசதிகள் காரணமாக மக்கள் சற்றுப் பயம் நீங்கியவர்களாகப் பல பகுதிகளுக்கும் சென்றுவரும் நிலைமை ஏற்பட்டதைத் தொடர்ந்து முன்னர் சிதைவடைந்த சிவாலயத்தில் அங்குமிங்குமாகக் கிடந்த லிங்க வடிவான மூலவர் சிலைகள், சின்னங்கள் என்பவற்றைக் கண்டெடுத்து இவ்வாலயத்தைத் தோற்றுவித்திருக்கலாமென்பது நம்பிக்கை. தலவிருட்சமாக வில்வமரமும் மூல விக்கிரகமாக லிங்க வடிவமூர்த்தியும் இருந்த போதும் சங்கமன் கண்டிப் பிள்ளையார் எனப் பெயர் கொண்டு இத்தலம் விளங்கியது. இதற்கான காரணம் சரிவரப் புரியாதுள்ளது. போர்த்துக்கேயர் முன்னர் அமைந்திருந்த சிவாலயத்தை இடித்தழித்த பகுதியில் ஆலயத்தின் சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய கற்றூண்கள், சந்திர வட்டக்கல் என்பன சிதைந்து கிடப்பதாகத் தெரிகின்றது.

அதுமட்டுமன்றி சிதைக்கப்பட்ட ஆலயத்திற்குச் சற்றுத் தூரத்தில் பிரம்மாண்டமான அரண்மனையொன்றின் இடிபாடுகள் சுமார் 12 கிலோமீற்றர் பரப்பளவில் பரவிக் கிடப்பதாக தொல்லியற் சுடர் செல்வி தங்கேஸ்வரி கதிராமன் அவரது கட்டுரையொன்றில் குறிப்பிடுகின்றார். இவர் சங்கமன் கண்டி காட்டுப் பிரதேசத்திற்கு நேரடியாகச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சங்கமன் கண்டிப் பிள்ளையார் ஆலயம் தோற்றம் பெற்றதைத் தொடர்ந்து அப்பிரதேசத்தை அண்டிய காட்டுப்பகுதியை வெட்டித்துப்பரவு செய்து சேனைப் பயிர்ச் செய்கை, நெற்செய்கை, கால்நடை வளர்ப்பு என்பனவற்றை மேற்கொண்டதோடு குடியிருப்புக்களை அமைத்து வசிக்கவும் ஆர்வமுடையோராயினர். இவ்வாறு காடுகளை வெட்டிச்சுத்தம் செய்கையில் பழைய சிவாலயத்தின் லிங்கங்கள், கோவிலுக்கான பாவனைப்பொருட்கள் இந்தப் புதிய திறந்த வெளிக் கோவிலில் இடம்பெற்றன.

## ஆலயத்தின் வளர்ச்சி

இந்த ஆலயம் 1935 ஆம் ஆண்டிற்குப் பின் மெல்ல மெல்லப் பிரபலமடைய ஆரம்பித்ததும் கோவிலின் அயற்கிராமங்களான கோமாரி, திருக்கோவில், தம்பிலுவில், தம்பட்டை, அக்கரைப்பற்று, பனங்காடு, கோளாவில் போன்ற கிராமங்களிலிருந்தெல்லாம் வெள்ளிக்கிழமைகளிலும் பௌர்ணமி போன்ற விஷேட நாட்களிலும் மாட்டு வண்டிகளில் குடும்பம் குடும்பமாக, மக்கள் வந்து பொங்கலிட்டு அவல், கடலை, மோதகம், பழவகைகள் சகிதம் படையலிட்டு வழிபாடு செய்து திரும்புவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளுக்கு முதல் முடி எடுத்தல், காது குத்தல் போன்ற சம்பிரதாயச் சடங்குகளும் நேர்த்திக் கடன் நிறைவு செய்யும் நிகழ்வுகளும் அமோகமாக நடைபெறும். வயல் அறுவடை முடிந்ததும் உற்றார் உறவினர் சகிதம் சங்கமன் கண்டிக்கு வந்து பொங்கலிட்டு மனம் நிறைந்து வீடு திரும்புவர்.

சங்கமன் கண்டி ஆலயத்தைப் பொறுத்தவரை ஆலயத்தின் வடக்கு, தெற்கு, மேற்குப் பக்கமெல்லாம் மலைகளும் மரங்களும் காடுகளு மாகவே இன்றும் காணப்படுகின்றது. ஆங்காங்கே காணப்படும் ஒற்றையடிப்பாதைகளூடாக பழங்கால இடிபாடுகளைப் பார்க்கவென்றும் விளாம்பழம், புளியம்பழம், பாலைப்பழம், நாவற்பழம் என்பன பொறுக்கவென்றும் சில இளவட்டங்கள் செல்வதுண்டு. ஆயினும் அவர்களை யானை மிதித்ததாகவோ புலி, கரடி என் பன கொன்றதாகவோ, பாம்புதீண்டி இறந்ததாகவோ பெரிதாகத் தகவல் இல்லாதது ஆச்சரியம். காடுகளுக்குச் செல்பவர்கள் பத்திரமாக மீண்டதே பொதுவான வரலாற்றுத் தகவல். இது பற்றி வயதானவர்கள் 'சங்கமன் கண்டியான் தான் அதையெல்லாம் பார்த்துக் கொள்வதாக கூறுவதுண்டு'.

அக்காலம் முதல் கால் நடைப் பயணமாக, கதிர்காமத்திற்கு வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மலையகம் போன்ற பகுதிகளிலிருந்து செல்லும் யாத்திரிகர்கள் பெரும்பாலும் சங்கமன்கண்டி பிள்ளையாரை வழிபட்டு ஒரு நாள் அல்லது ஒருவேளை தங்கியே தம் பயணத்தை மேற்கொள்வ துண்டு. 1877 ஆம் ஆண்டில் மட்டும் கால்நடையாக இப்பகுதியால் சென்ற பக்தர்கள் இருபதினாயிரம் பேர்களென ஒரு வரலாற்றுத் தகவல் கூறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கி.பி.1910 ஆம் ஆண்டளவில் சங்கமன் கண்டிப் பிள்ளையார் ஆலயம் மேலும் பிரசித்திபெற்றது. கிழக்கிலங்கையில் சங்கமன் கண்டி ஆலயம் பற்றித் தெரியாதவர்கள் இல்லை என்னுமளவிற்கு கிழக்கின் பல பகுதிகளிலிருந்தும் அடியார்கள் வர ஆரம்பித்தனர்.

இந்தக் காலகட்டத்தில் ஆங்கிலேயரால் பொத்துவில் கல்முனை வீதி விரிவாக்கப்பட்டு கற்பாதையாக மாறியது. இதனால் வடக்கே கல்முனை தொடக்கம் தெற்கே பாணமை வரையுள்ள மக்கள் சங்கமன் கண்டிக்கு வரத்தொடங்கினர். இதனால் சங்கமன்கண்டி பக்தர்கள் தொகை மேலும் அதிகரித்தது. சகல பாத்திரங்களுடனும் பூசைப் பொருட்களுடனும் மாட்டு வண்டிகளில் வந்து குருத்தோலைகள், மாவிலைகள், கரும்பு, பூக்கள் என்பவற்றால் கோவில் பகுதிகளை அலங்கரித்து பொங்கல் செய்வது வழக்கமாயிற்று.

இக்காலத்தில் திருக்கோவில் பிரதேசத்தை வாழ்விடமாகக் கொண்டு இப்பிரதேசத்தில் அமைந்துள்ள மங்கை மாரியம்மன் ஆலயச் சூழலில் பெரும் தென்னந்தோட்டத்தை உருவாக்கியவரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வள்ளல் கே.வி.மார்க்கண்டன் என்னும் பெருமகன் சங்கமன் கண்டி பிள்ளையார் மீது அளவற்ற பக்தி கொண்டிருந்தார். இவர் சங்கமன் கண்டியானை



பைரவர் கோயிலும் மணிக்கோபுரமும்

முன்னிறுத்தி மேற்கொண்ட நற் பணிகள் ஏராளம். இவர் 1912 தொடக்கம் 1936 வரை தன் ஆயுள் முடியும் வரை திருக்கோவில் ஸ்ரீசித்திர வேலாயுதசுவாமி ஆலயத்தின் தலைவராகச் செயற்பட்ட சிறப்புக் குரியவரும் கூட.

இவர் வருடா வருடம் யானை பூட்டிய தனது வண்டியில் பொங்கல், பூசை என்பவற்றிற்குத் தேவையான சகல பொருட்களுடனும் தன் உதவியாளர்களுடனும் சங்கமன் கண்டி சென்று ஆலயச் சூழலைச் சுத்தம் செய்து, அலங்கரித்து பொங்கல், பூசை, அபிஷேகம், ஆராதனை என்பன நிறைவேற்றித் திரும்புவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இக்காலத்தில் சங்கமன் கண்டியானுக்கு ஆலயம் ஒன்றை அமைக்க பெரு விருப்பம் கொண்டிருந்த கே.வி.மார்க்கண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு கோவில் அமைப்பதற்கான சமிக்ஞை கிடைக்கவில்லை. திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயம் தொடக்கம் கதிர்காமம் வரை இவரது சைவத் திருப்பணிகள் வியாபித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இப்போது சங்கமன் கண்டி ஆலயச் சூழலில் எந்தக் கோடைக்கும் வற்றாத இரு கிணறுகள் இருக்கின்றன.

ஆனால் அந்நாட்களில் நீரைப் பெறுவதில் மக்கள் மிகவும் சிரமப்பட்டது கண்ட கே.வி. மார்க்கண்டன் அவர்கள் மாரிகாலத்தில் மலையில் பெய்து வடிந்தோடும் மழைநீரைத் தேக்கிவைத்து உபயோகிக்கும் விதமாக மலையில் அணைகட்டி பேருதவி புரிந்தார். இந்த மிகச்சிறந்த முன்யோசனை மிக்க பொதுப்பணிக்காக ஆங்கிலேய அரசு அவரைப்பாராட்டி முதலியார் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

### *1933 தொடக்கம் 1960 வரை சங்கமன் கண்டியின் நிலை*

இந்தக் காலத்தில் சங்கமன் கண்டியை அண்மித்த பகுதிகளில் நெற்செய்கை, பயிர்ச்செய்கை, கால் நடைவளர்ப்பு என்பன மேலும் அதிகரித்தது. மக்கள் நிரந்தரமாகவே இப்பகுதியில் குடியிருக்கத் தலைப்பட்டனர். ஆலய வளர்ச்சியிலும் இவர்கள் அக்கறை காட்டினர். இக்காலப்பகுதியில் திருக்கோவில் அரச வைத்தியசாலையில் மருந்தாளராகப் பணிபுரிந்த திரு.வேலுப்பிள்ளை என்பவர் சங்கமன் கண்டி பிள்ளையார் மீது மிகவும் பக்தி கொண்டவராக இருந்தார். இங்கு ஒரு ஆலயம் அமைக்க வேண்டுமென்னும் எண்ணம் அவரது மனதில் குடிகொண்டது. அவரது எண்ணம் சங்கமன் கண்டியானின் அருளுடன் 1950 இல் நிறைவுற்றது. சிறிய ஆலயம் ஒன்றை நிர்மாணித்த அவர் கோவிலின் இடது பக்கமாக இருந்த காட்டை வெட்டிச்சுத்தம் செய்து மா, பலா, தோடை, வாழை ஆகியவற்றை நட்டுப் பயனுள்ளதோர் பழத்தோட்டத்தை உருவாக்கினார். இறக்கும் வரை அங்கேயே தொண்டாற்றி வாழ்ந்தார்.

அவர் தன் இறுதிக்காலத்தில் ஒரு நிர்வாக சபையை உருவாக்கி கோவில் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தார். அக்கறைப்பற்று பொத்துவில் பிரதான வீதியூடாக போக்குவரத்து வளர்ச்சியடைந்ததும். பாதையால் பயணிப்போருக்கு சங்கமன் கண்டிக் காட்டுப்பிள்ளையார் ஆலயம் இருக்குமிடத்தை அடையாளப்படுத்தவும் காட்டுப்பிள்ளையார் ஆலயம்வரை நடந்து செல்ல இயலாதவர்களுக்கும் பாதையால் வாகனங்களில் செல்வோரின் தரிசனத்துக்குமாக பாதையருகில் ஒரு சிறு ஆலயம் தோற்றுவிக்கப்பட்டது. அதன்பின் 'ரோட்டுப் பிள்ளையார்', 'காட்டுப் பிள்ளையார்' என்கின்ற பெயர்களால் இவ்வாலயங்கள் அழைக்கப்படலாயின.

சங்கமன் கண்டி ஆலயப் பொறுப்பு நிர்வாக சபையிடம் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்களின் பெரு முயற்சியினால் இங்கு சிறிய அளவிலானகருங்கல் கோவில் நிர்மாணிக்கப்பட்டு 1960 இல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. பின் மெல்ல மெல்ல இப்பிரதேசத்தில் நெற்செய்கை, பயிர்ச்செய்கை, கால்நடை வளர்ப்பு என்பன அதிகரித்தது டன் குடியிருப்புக்கள், போக்குவரத்து வசதிகள், நீர்த்தேவைக்காக ஆங்காங்கே கிணறுகள், கடைகள், பாடசாலை என்பன



விரிவாக்கம் பெற்றது. இதனால் தரிசனத் திற்காகவும் பொங்கலிடவும் சங்கமன் கண்டிக்கு வருகைதரும் மக்கள் தொகை அதிகரித்தது.

1980க்குப் பின்னரான காலத்தில் சங்கமன் கண்டி ஆலயத்தை நல்ல முறையில் சற்றும் பெரிய அளவில் கட்ட வேண்டுமென்கின்ற விருப்பம் நிர்வாகசபையினர் உள்ளிட்ட அனைவர் உள்ளங்களிலும் ஏற்பட்டது. அதன் காரணமாக நிர்வாகசபையினரால், திருப்பணிச்சபையொன்று அமைக்கப்பட்டது. திருப்பணிச்சபையினரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயரா முயற்சியினால் ஆகம முறைப்படி கர்ப்பக் கிரகம், மகா மண்டபம், அர்த்த மண்டபம், யாழி மண்டபம் என்பன நிர்மாணிக்கப்பட்டு 19.10.1979 இல் மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இதேபோல பிரதான வீதிப் பிள்ளையாருக்கும் சிறிய ஆலயமொன்று அமைக்கப்பட்டு இரு கோவில்களிலும் நித்திய பூசைகள் நடைபெறத் தொடங்கின. 25' ஆழத் திற்கு மலையைக்குடைந்து தீர்த்தக் கிணறும் அமைக்கப்பட்டது. பிரதான வீதியிலிருந்து ஆலயத்திற்குச் செல்லும் பாதை சீரமைக்கப்பட்டுப் போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டது. அந்தப் பாதையின் இரு பக்கங்களிலும் குடிசை அமைத்துத் தங்கியிருந்த மக்களுக்கு அரசினால் நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

அந்நாளில் பொத்துவில் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும் சமூக சேவையாளருமான திரு.எம். கனகரத்தினம் அவர்களும் அவரைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினராகப் பணி புரிந்த அவரது சகோதரி திருமதி ரங்கநாயகி பத்மநாதன் அவர் களும் இந்த ஆலயத்திற்கும் சங்கமன்கண்டிப் பிரதேசத்திற்கும் பல அபிவிருத்திப் பணிகளைச் செய்துள்ளனர்.

1983 இல் தொடங்கிய இன வன்முறைகளின் தாக்கம் 1990 மட்டில் சங்கமன் கண்டிப் பிரதேச த்திலும் பிரதிபலிக்க ஆரம்பித்தது. இதனால் ஆலயத்தின் நித்திய கருமங்கள் சீர்குலைந்தது. மக்களின் வருகை குறைவடைந்தது. காடும் காடு சார் இடமும் மலையும் மலைசார் இடமுமாக இப்பிரதேசம் இருந்ததால் போராட்ட நடவடிக்கை களுக்கு வாய்ப்பான இடமாக இப்பகுதி இருந்தது. இருந்தபோதும் இந்த நிலைமையைத் தொடர்ந் தும் சகித்துக்கொள்ள முடியாத அப்பகுதி மக்கள் ஆலயத்தைப் பழையபடி வழமைக்குக் கொண்டு வர அவாவுற்று ஆலய நிர்வாகத்தினரோடிணைந்து திருப்பணிகளில் ஈடுபட்டு கோவிலைப் புனரமை ப்புச் செய்து பரிவார மூர்த்திகளான ஸ்ரீநாகேஸ்வரர், ஸ்ரீமுருகன், வைரவர், ஆஞ்சநேயர் ஆகியவர்களுக் கான ஆலயங்களையும் அமைத்து 2009 இல் கும்பாபிஷேகமும் செய்து முடித்தனர்.

சங்கமன் கண்டிப் பெருமானைப் போற்றி தம்பட்டைக் கிராமத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ நல்லதம்பிக்குருக்கள், தம்பிலுவில் கிராமத்தவரான திரு வில்லியம்பிள்ளை, திருக்கோவில் கிராமத்தவரான சங்கீதபூசணம் திரு சி.கணபதிப்பிள்ளை, தம்பிலுவில்லைச் சேர்ந்த இசை, நாடகக்கலைஞர் திரு இராசையா, திருக்கோவில் இரா. தெய்வராஜா என்போர் பலவிதமான பாடல்களை இயற்றியுள்ளனர்.



கோயிலின் பக்கத் தோற்றம்

அக்கரைப்பற்றைச் சேர்ந்த கவி மணி வடிவேல் அவர்கள் இப்பெருமான் மீது திருவூஞ்சல் பாடல்களை அழகாக இயற்றி உள்ளார்.

மேலும் சங்கமன் கண்டி ஆலயத்தின் வரலாறு சம்பந்தப்பட்ட விடயங்கள் திரு நடராஜா, திரு பரணகம, திரு க.சிற்றம்பலம், கலாநிதி பத்மநாதன், திருமதி தனபாக்கியம் குணபால சிங்கம், திரு ந.தர்மலிங்கம், செல்வி தங்கேஸ்வரி கதிராமன், திரு நா.நவநாயகமூர்த்தி ஆகியோரின் நூல்களிலும் கட்டுரைகளிலும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இவர்களுக்கு முன்னரே இவ்வாலயத்தின் தொன்மையையும் சிறப்புக் களையும் பண்டைய யாத்திரிகர்களும் வரலாற்று ஆசிரியர்களும் தமது ஆக்கங்களில் குறிப்பிட்டி ருப்பதாகவும் ஒரு தகவல் தெரிவிக்கின்றது.

இவற்றை விட இப்பகுதியில் கண்டெடுக்கப் பட்ட கல்வெட்டுக்கள், நாணயங்கள், கோவில் இடிபாடுகள், கோவிலுக்குரிய விக்கிரகங்கள், ஆராதனைப் பொருட்கள் என்பன இப்பகுதியின் தொன்மையையும் சிறப்பையும் பறைசாற்றி நிற்கின்றன. மொத்தத்தில் மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது என்கின்ற சொற்றொடருக்கு மிகப் பொருத்தமானது இவ்வாலயம் என்பது மிகையல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல்கலை வித்தகி விஜயலட்சுமி சண்முகம்பிள்ளை

■ பத்மா சோமகாந்தன்

1940 களிலே இலங்கை வானொலி ரேடியோ சிலோன் என்ற பெயரில் உலகளாவிய ரீதியில் பேசப்படும் ஒரு நிலையமாகப் புகழீட்டியிருந்தது. காரணம் இவ்வானொலியில் மிகவும் தரமான நிகழ்ச்சிகள் செய்திகள், உரைகள், விடயங்கள் என்பன ஏராளமான ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியும் காத்திரமான விடயங்களை மக்கள் மத்தியில் பரவச் செய்வதிலும் ஈடுபட்டிருந்தன. பாராட்டிற்குரிய அமைப்பாக இந்நிலையம் அமைவதற்கு அடிப்படைக் காரணம் இந்நிகழ்ச்சி களின் பின்னணியிலிருந்து செயற்பட்ட கலைஞர்களும் தொழில் நுட்பவியலாளர்களுமே ஆவர்.

இலங்கை வானொலியில் தமிழ் நிகழ்ச்சிப் பிரிவில் கர்நாடக இசையில் 'A' பிரிவுப் பாடகி யாகவும் தன் தேனினும் இனிய குரல்வளத்தால் மெல்லிசை, இசைச் சித்திரங்கள், இசைப்பயிற்சி போன்ற இசை நிகழ்ச்சிகளோடு உரைச்சித்திரம், கல்வி நிகழ்ச்சிகள், நேர்காணல்கள், அறிவிப்புகள் எனப்பல்வேறு நிகழச்சிகளின் ஊடாகவும் தனது திறமையை வெளிப்படுத்தியவரே விஜயலட்சுமி சண்முகம்பிள்ளை அவர்களாவர்.

அக்காலகட்டத்திலே அதிகமாகப் பெண்கள் சமையற்கட்டுக்குள்ளேயே இருந்து குரல் கொடுக்கும் நிலையிலிருந்து பெரிதும் வெளியேறி நாட்டின் நாலாபக்கங்களிலும் வீசும் காற்றின் வீச்சோடு தன் இனிய ஓசையையும் கலக்கவிட்ட பெருமை அம்மையாரையே சாரும். இலங்கை வானொலியில் இவர் தயாரித்து ஒலிபரப்பிய மாதர் பகுதியோடு பிரபல அறிவிப்பாளர் எஸ்.பி. மயில்வாகனத்துடன் இணைந்து வழங்கிய கோபால் பற்பொடி விளம்பரம், இந்தியாவில் பிரபல நாட்டிய மேதை வழுவூர் இராமையா பிள்ளையுடனான இந்திய நர்த்தன கலாவல்லவியின் பேட்டி என்பனவெல்லாமே கலைத் துறையில் இவரது புகழ் இலங்கையில் மட்டுமல்ல தமிழகம் எங்கணுமே பேசப்பட காரணமாக அமைந்ததை நாம் மறப்பதற்கில்லை.

சென்னையில் அரச கர்நாடக இசைக் கல்லூரியில் கற்று சங்கீத வித்துவான் பட்டம் பெற்ற இவர் மென்மேலும் இக்கலையில் உச்சங்களைத் தொடுவதற்காக இசைமேதாவிலாசம் படைத்த முசிரி சுப்பிரமணிய ஐயர், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, திருப்பாம்புரம் சுவாமிநாதபிள்ளை, திருமதி பிருந்தா, வீணை வித்துவான் கல்யாண கிருஷ்ண பாகவதர் என்ற மேதைகளிடமெல்லாம் விலாவாரியாக இசை நுட்பங்களையும் அதனேடொத்த பல்துறை வித்தைகளையும் துறை போக்க கற்றுத் தனது திறமைகளுக்கு மெருகேற்றிக் கொண்டார்.

இளமை தொடக்கமே அவருக்கேற்பட்டிருந்த தணியாத கலைத்தாகத்தைத் தன்னோடு மட்டும் பொத்திவைத்துக்கொண்டிராமல் ஏனையோரிட மும் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்ற நாட்டங் கொண்டமையால் பல இசை விழாக்களில் கலந்து கொண்டு இசை மாரி பொழிந்தார். இசை வகுப்புகளை நடாத்திப் பல மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

இவரிடம் கற்ற மாணவியருள் ஒருவரான பிரமிளா குருமூர்த்தி என்பவரே சென்னை பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவராக பணியாற்றுகிறார். இலங்கையிலே வெகு சிறப்பாக இடம்பெறும் ஆடிவேல் விழாக்களிலும் மற்றும் பல இடங்களில் நடைபெறும் ஆலய விழாக்கள், இசைவிழாக்கள், இலங்கை சங்கீத சபை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை தியாகராஜகானசமாஜம் ''நர்த்தன வாரிதி'' என்ற பட்டம் வழங்கி இவரைக் கௌரவித்தது. அருகில் பழம்பெரும் கலைஞர்கள் மனோரஞ்சிதம் லோகேஸ்வரம், சோமசுந்தரம்பிள்ளை ஆகியோரும் காணப்படுகின்றனர்.



1958ல் இந்தியப்பிரதமர் ஜவஹர்லால் நேருவின் இலங்கை விஜயத்தின் போது இவரது மாணவியர் வழங்கிய கலைநிகழ்சிகளை இந்தியப்பிரதமர் பாராட்டிய காட்சி. இவரது புதல்வி பிரகதாவும் படத்தில் காணப்படுகிறார்.



மகள் வாசுகியின் அரங்கேற்றத்தின்போது குருவாகவும் தாயாகவும் கணவர் மிருதங்க வித்துவான் கே.சண்முகம்பிள்ளையுடன்.



நடன நிகழ்ச்சிக்கு நட்டுவாங்கம் செய்கிறார். அருகில் மிருதங்க வித்துவான் ரி.ரத்தினம் அவர்களும் கலைமாமணி கே.கணேசபிள்ளையும் காணப்படுகின்றனர்.

இலங்கை தியாகராஜ கான சமாஜம், கொழும்பு ராமகான சபா எனப்பல்வேறு அரங்கங்களில் அம்மையாருடைய கர்நாடக இசைக்கச்சேரிகள் தவறாது இடம்பெற்று வந்தன. வெறுமனே தானொரு இனிய குரல்வளம் கொண்ட உரை யாளர், இசையாளர் என்பவற்றோடு மட்டும் தன் ஆற்றலை மட்டுப்படுத்திக் கொள்ளாமல் நடனத் துறையிலும் பல மைற்கற்களைத் தாண்ட முடியும் என்ற தன்னம்பிக்கையுடன் தன்னுடைய திறமையை இனங்காட்டியவரே விஜயலட்சுமி சண்முகம்பிள்ளை அவர்கள்.

நடனக்கலைக்கு கலைத்துவம் மட்டுமே இருந்தால் அக்கலை பூரணத்துவம் பெற்றுவிடும் என்று கருதமுடியாது. நடனத்திற்கேற்ற முகபாவம், உடல்வாகு, தோற்றப் பொலிவு என்பனவும் பொருந்தியிருந்தால் மட்டுமே அக்கலையில் ரசிப்பே இல்லாதவர்களையும் கூட ஈர்த்துவக்கச் செய்யும். இந்த ரீதியிலும் கூட விஜயலட்சுமி அவர்களின் தோற்றப் பொலிவு என்றும் புன்சிரிப்புத் தவழும் முகம், ஒளிவீசும் கண்கள், கம்பீரமான உடற்கட்டு, அமைதி, அடக்கம், பணிவு, இனிமையான பேச்சு, கடமையிலே ஒழுங்கு, கலைகளிலே நாட்டம் போன்ற பண்புகள் எல்லாம் இயல்பாகவே இவரிடம் படிந்திருந்ததை அவதானிக்கலாம்.

கலையையே தன் வாழ்வின் மூச்சாகக் கொண்டி ருந்த விஜயலட்சுமி அவர்களைக் கரம்பற்றிய கணவனார் இணுவிலைச் சேர்ந்த பிரபல மிருதங்க வித்துவான் சண்முகம்பிள்ளையவர்களும், இலங்கை வானொலி 'சுப்பர் கிரேட்' கலைஞராக அமைந்திருந்ததோடு அம்மையாரின் நடன, இசை நிகழ்ச்சிகளுக்கெல்லாம் உறுதுணையாக விளங்கி யதும் அவரது சேவை பழுதின்றி இடம்பெற உதவியது. ஆனாலும் அவரது மிருதங்க வித்துவம் தனது குடும்பத்தினரின் நிகழ்வுக்காகவோ, பக்க வாத்திய நிகழ்வுக்காகவோ இடம் பெற அவர் இயையவில்லை. இக்கருத்தில் அவர் மிக்க கண்டிப்பாகவே இருந்துள்ளார். பரதக்கலையிலும் பல்வேறு பாணிகள் தலைதூக்கியிருப்பினும் விஜயலட்சுமி அவர்கள் தஞ்சாவூர்ப் பாணியை மேற்கொண்டிருந்த பிரபல நடனக்கலைஞர் திருத்தங்கூர் வீரப்பிள்ளையிடம் பரதநாட்டியக் கலையைக் கற்றுக் கொண்டார். இசைக்கலையைப் போலவே நடனக்கலையிலும் வித்துவம் பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் கூட இசை நடனக் கல்லூரிகளில் நடனம் கற்பிக்கும் முதலாவது பெண் ஆசிரியர் என்ற பெருமைக்கும் உரியவரானார்.

பிரபலம் வாய்ந்த கலை நிறுவனங்களான வெள்ளவத்தை சைவமங்கையர், கழகம், 'கலாலயா, இசைநடனக் கல்லூரி ஆகியவற்றின் முதலாவது நடன ஆசிரியர் என்ற சிறப்பு இவருக்கானதே. சைவ மங்கையர் கழகம் மேடை யேற்றிய முதலாவது நாட்டிய நாடகமான ஸ்ரீ ஆண்டாள் இவரது நடன அமைப்பிலே உருவான தாகும்.

1948 இல் இலங்கை சுதந்திர தின விழாக் கொண்டாட்டம், 58 இல் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவின் தன் முதலாவது இலங்கை விஜயத்தின் போதான வரவேற்பு வைபவம் ஆகிய முக்கிய வைபவங்களிலெல்லாம் இவரது மாணவிகளின் நிகழ்ச்சிகளே இடம்பெற்றுப் பாராட்டும் பெற்றன.

பல நாட்டிய நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றியும், நட்டு வாங்கம் செய்தும் தானே மிடற்றிசை அளித்தும் சிறப்பித்துள்ளார். அவற்றுள் பாவை பெற்ற பரிசு, பண்ணும் பரதமும், தைமகள் நர்த்தனம், மீனாட்சி கல்யாணம், கிருஷ்ண பாரிஜாதம், சிவலீலை, குற்றாலக் குறவஞ்சி, வள்ளி திருமணம் என்பன குறிப்பிடக் கூடியவை.

இசை வானில் மட்டுமல்ல நடனக் கலையிலும் நமது இளம் சந்ததி ஒளி விட்டுப் பிரகாசிக்க வேண்டுமென்ற வேணவாவில் 1953 இல் கொழும்பிலே விஜயலட்சுமி நாட்டியக் கலா மன்றம் என்றொரு நடனப் பள்ளியை அமைத்துப் பெருந்தொகையான மாணவர்களுக்கு நடனக் கலையைக் கற்பித்தார். இவரிடம் நடனம் கற்ற பலர் பிற்காலத்தில் பெரும் புகழீட்டிய நடன மணிகளாகத் திகழ்ந்ததோடு அடுத்தடுத்த தலை முறையினருக்கும் இக்கலையைக் கற்பித்தனர். உதாரணமாக இவரிடம் நடனம் பயின்ற சாந்தாரமணி மகேந்திரா, பால சுந்தரிகனகசபை, தயாம்பிகை மகிந்தா, திலகவதி கனகசபை, கௌரி முத்துக்குமாரசாமி, மிராண்டா ஹேமலதா, பிரகதா தில்லைநடராஜா என இவரிடம் நடனம் கற்றோர் பலர் கீர்த்திமிக்க நடன நர்த்தகிகளாக விளங்கு கின்றனர். இதற்கு எடுத்துக் காட்டாக இன்றும் இலங்கையில் மட்டுமல்லத் தமிழகம் உட்பட உலகில் பல்வேறு நாடுகளிலும் பரத நடனத் துறையில் முத்திரை பதித்துப் புகழீட்டிக் கொண்டி ருக்கும் இவரது மகள் வாசுகி ஜெகதீஸ்வரனே தக்க சான்றாக அமைந்துள்ளார். கலாமந்திர் என்ற வாசுகி அவர்களது நாட்டிய நிலையத்தின் ஊடாகச் சுமார் 100 மாணவிகள் வரை தமது நடனக்கலையை அரங்கேற்றம் செய்து இக்கலை யின் மகத்துவத்தை மக்கள் மனதில் பதித்துள்ளன ரென்றால் அம்மையார் விதைத்த விதையின் செழுமையை என்னென்று புகழ்வது?

இரு பெண்கள், இரு ஆண்கள் என நான்கு குழந்தைகளின் தாயாரான விஜயலட்சுமியின் மூத்தமகளே பிரகதா தில்லை நடராஜா. இவரும் தாயாரைப் போல கொழும்பிலும் யாழ் நகரிலும் நடன ஆசிரியராகவே பணிபுரிந்து மறைந்தவர். மகன் எஸ்.விஸ்வநாதன் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராக பல அற்புதமான கலைநிகழ்ச்சிகளை திறம்பட நடத்தி ஓய்வு பெற்ற பின்னும் சர்வதேச வர்த்தக அமைச்சின் ஊடகச் செயலாளர் பதவியை அலங்கரித்து வருகிறார். ''நாட்டிய கலா மந்திர்'' நடனப் பள்ளியின் அதிபராக விளங்குபவர் இவரது இளைய மகள் வாசுகி. கடைசிமகன் ஜெகந்நாதன் வெளிநாட்டில் பணிபுரிகிறார்.

இலங்கை தியாகராஜா சமாஜத்தினால் நர்த்தன வாரிதி எனப் பட்டம் சூட்டிக் கௌரவிக்கப்பட்ட விஜயலட்சுமிதன்னோடும்தன்குடும்பத்தினரோடும் தனது மாணவரோடும் மட்டுமே இக்கலையின் பிரவாகம் செழிப்படைய வேண்டும் என எண்ணாமல் சகலரும் இக்கலையைக் கற்றுப் பயனடைய வேண்டுமென்ற விரிந்த மனப் பாங்குடன் தொழிற்பட்டார். பள்ளி மாணவப் பருவத்திலேயே பிள்ளைகள் இக்கலையைக் கற்கும் வகையில் பாடசாலையில் கற்பித்த தன் அனுபவத்தைப் பயன்படுத்திக் கல்வித்திட்டத்தில் இசை, நடனம், நாட்டிய நாடகம் ஆகியவற்றிற்கான பாடவிதானம் அமைப்பதிலும் முக்கிய பங்கேற்றிருந்தார்.

இவையெல்லாம் அவரது கலையுள்ளத்தின் பேரழகைப் புகட்டுகின்றன.

''தக்கார் தக் ஷியார் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்'' என்ற உண்மையை உணர்ந்த விஜயலட்சுமி சண்முகம்பிள்ளையின் கலையுள்ளம் 1987 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இருபதாம் திகதி நிம்மதியாக இறைவன் திருவடி நிழலில் அமைதிபெற்றுக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க இலக்கியங்களில்
# ஆடற்கலை

**செல்வி. தர்மிகா திருநாவுக்கரசு**
தற்காலிக விரிவுரையாளர் (நடனம்)
சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

சங்ககாலம் எனக் கொள்ளப்படுகின்ற காலப்பகுதி தமிழ் நாட்டு வரலாற்றில் முந்து வரலாற்றுக் காலம் (Early Historic Period) என்று கூறப்படுகிறது. சங்க காலப் பகுதியாக கி.பி. முதலாம் நூற்றாண்டு தொடக்கம் மூன்றாம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி என வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். இந்தக் காலப்பகுதிக்குரிய நூல்களாகத் தொல்காப்பியம், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு என்பன விளங்கு கின்றன. இவற்றில் எட்டுத்தொகையில் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, பரிபாடல், கலித்தொகை என்னும் எட்டு நூல்களும் பத்துப்பாட்டில் திருமுரு காற்றுப்படை, பொருணாராற்றுப்படை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநெல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் எனும் பத்து நூல்களும் அடங்குகின்றன. சங்ககால மக்களின் வாழ்க்கை முறைமைகள் அக்காலப் புவியியல் அமைப்புக்கு ஏற்ப வகைப்படுத்தப்பட்டு அமைந்திருந்தன. நில வேறுபாட்டுக்கு ஏற்ப ஐந்து பிரிவாக மக்கள் வாழ்ந்து வந்தாலும், அவர்களின் வாழ்க்கை முறைகள் பொதுவாக அகம், புறம் என்ற இரண்டினூடாக விளக்கப்படுகின்றன. இங்கு அகம் என்பது ஆண், பெண் காதல் உணர்ச்சியைக் களவு, கற்பு என்கிற இரு நிலைகளில் விவரித்துக் கூறுவதுடன், புறம் என்பது வீரதீரச் செயல்கள் அறம், தொழில் போன்றவற்றின் இயல்புகளை விளக்கிக் கூறுகின்றது.

அந்த வகையில் ஆடற்கலை பற்றிய தேடலைச் சங்ககால சமூக, மானிடவியல் முறைகளில் இருந்து மேற்கொள்வது சிறந்தது. எனினும், இக்காலத்து இலக்கியங்கள் ஆடல் சார்ந்த விளக்கங்களைக் கொண்டுள்ளதைக் காணலாம்.

சங்ககால மக்களின் வாழ்க்கை மன்னர் ஆட்சியின் கீழானது. வேட்டையாடல், விவசாயம், மீன்பிடி, தேன் இறக்கல் என்ற தொழில்களை முக்கிய தொழில்களாகக் கொண்டிருந்தனர். இதன் போது நிகழும் அகம், புறம் சார்ந்த செயற்பாடுகள் மூலமாக மக்கள் ஆடிப்பாடி மகிழ்ந்த செய்திகளைக் காண்கின்றோம். ஐந்திணை மக்களினதும் அகத்திணை வாழ்க்கைப் பண்புகளில் காதல் பேசும் விதமாக ஆடல், இசை, வாத்திய இசை அதிகம் பயன்படுத்தப்பட்டதையும் புறத்திணை வாழ்க்கைப் பண்புகளில் வீரத்தின் எழுச்சியின்

***அனேகமாக சங்க காலத்துப் போர் மரபை ஒட்டியதாகத் துணங்கைக் கூத்து, குரவைக்கூத்து, களவேள்வி, வாடாவள்ளிக் கூத்து மற்றும் காதல் நோயால் மேற்கொள்ளப்பட்ட வெறியாடல் என்பன இந்தக் கால மக்களின் வாழ்வியலுடன் இணைந்திருந்த கூத்து வகைகள் ஆகின்றன.***



இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடிகள் என்று கூறுவதற்கு இணங்க, சங்ககால மக்கள் அமைப்பு மன்னர் ஆட்சி, இயற்கை, புவியியல் மாற்றங்கள் என்பவற்றை அந்தக் காலத்தின் இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. எனினும் சங்ககால மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கையும் இலக்கியங்களில் உள்ளது போன்றே அமைந்தது என்பதை உறுதியாகக் கூறமுடியாது. ஏனெனில் புலவர்கள் பெரும்பாலும் நமது மனதிற்பட்டதை கற்பனையில் பாடியிருக்கக்கூடும்.

ஆடற்கலையினுடைய ஆரம்பம் பற்றிய ஆய்வானது சமூக, மானிடவியல் ரீதியாக மேற்கொள்ளப்படுவதால், மக்கள் வாழ்வியலுடனான கலை வெளிப்பாடுகளை அறிந்துகொள்ள முடிகிறது.

பொருட்டு ஆடல் நெறி புனைந்திருந்தமையையும் அறிகின்றோம். அனேகமாக சங்க காலத்துப் போர் மரபை ஒட்டியதாகத் துணங்கைக் கூத்து, குரவைக்கூத்து, களவேள்வி, வாடாவள்ளிக் கூத்து மற்றும் காதல் நோயால் மேற்கொள்ளப்பட்ட வெறியாடல் என்பன இந்தக் கால மக்களின் வாழ்வியலுடன் இணைந்திருந்த கூத்து வகைகள் ஆகின்றன.

சங்க இலக்கியங்களின் பாடுபொருள்கள் தனித்தன்மை வாய்ந்தவை. சங்க காலத்தில் தனிமனித உணர்வுகளே பெரிதும் பேசப்பட்டன. ஆதலால் சங்க இலக்கியங்களில் தனிமனித உணர்வுகளை நிலத்தின் அடிப்படையில் பகுத்தனர். நிலங்களை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பகுத்து இவ் ஐந்து நிலத்திற்கும் முதல் - கரு - உரி எனும் மூன்று பொருள்களைப் படைத்தனர். இம் மூன்றில், உரிப்பொருள் என்பது உணர்ச்சி அல்லது நிலைக்கருத்து என்னும் ஸ்தாயி பாவத்தைக் கூறும். கருப்பொருள் என்பது துணைக் கருவியாக நின்று உணர்ச்சியின் பல்வேறு நிலைகளை விளக்கும் சஞ்சாரி பாவத்தைக் கூறும். முதற்பொருள் சஞ்சாரி பாவத்திற்குத் துணை செய்யும் அனுபவமாக இயங்கும். இங்கு உரிப்பொருள் என்பது நிலம் சார் உணர்ச்சி; முதற் பொருள் என்பது நிலங்களின் இயற்கைத்தன்மை, நிலங்களுக்குரிய பருவம், நேரம் என்பனவாகும்.

மேலே சொல்லப்பட்ட பொருள்களில் கருப்பொருள் பதினான்கு வகையான பொருள்களை உள்ளடக்கியது. அவை நிலத்திற்கு உரித்தான தெய்வம், உயர்குடி மக்கள், உழைக்கும் மக்கள் வாழிடம், உணவு, தொழில், மலர், நீர், பறவை, விலங்கு, பண், யாழ், பறை என்பனவாகும். முன்பு கூறியது போன்று இப் பொருள்கள் பதினான்கும் சஞ்சாரி பாவத்திற்குத் துணையாய் அமையும்.

கருப்பொருளில் உள்ள பண், யாழ், பறை என்பன ஒவ்வொரு நிலத்திற்கும் ஏற்றாற்போல் இசையும் தாளமும் அமையும். எனவே உடல் இயக்கமாகிய நடனமும் தனித்தனியாய் அமையும்.

சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்களுக்குரிய இருப்பிடங்களில் குழுவாக, கூட்டாக வாழ்ந்தவர்கள். எனவே அவர்களின் நடனமும் குழு நடனமாகத் தான் அமையும். மன்னர்களைக் காணச் செல்லும் விறலியோ கூத்தரோ தனி நடனம் செய்வார்கள். ஆனால் அகப்பொருள் மரபின் கீழ் பயின்றுவரும் பாடல்களில் குழு நடனங்களையே பார்க்க இயலுகின்றது.

சங்க இலக்கியங்களில் காணப்படும் நடனம் குரவை, துணங்கை, வேலன் வெறியாடல் எனும் மூன்று பகுதியாகவே இருக்கும். அந்தவகையில் குரவைக்கூத்துப் பற்றி நோக்குகையில்; தமிழ் இலக்கியங்களில் அதிகமாகப் பேசப்படும் ஆடல் வடிவம் குரவைக்கூத்தாகும். இக்குரவைக்கூத்தை இலக்கியங்கள் 'குரவை அயர்தல், குரவை தூங்குதல், குரவை தழுவுதல் எனப் பல பெயர்களில் குறிப்பிடுகின்றன. அதிகமாக மலைப்பிரதேசங்களில் வாழும் குரவை குடியினர் ஆடுவதால் மலை நடனம் என்று கூறுவர். இக்கூத்து குரவை ஒலி என்கிற ஓசையுடன் தொடர்புபட்டதாகவும் பொதுவாக தினைப்புலம் காத்தலின் போது பறவைகளை விரட்டுவதற்காக ஒலி எழுப்பப்பட்டதாகவும் அதனுடனேயே இக்குரவைக் கூத்து தொடர்பு பட்டதாகவும் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. குரவை என்பது 'குரல்' என்ற சொல்லில் இருந்து பிறந்ததாகக் காணப்படுகின்றது. இங்கு குரல் என்பது சொல், தொண்டை, மூச்சுக்குழல் என்ற பொருளால் வரும் என்றும் இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். எனினும் சங்க இலக்கியத்தில் இவ் ஒலிப்பண்பைவிட ஆடல் பண்பே முக்கியமாக விளங்குகின்றது. சமுதாய



நலன் கருதி அனைத்துப் பிரிவினரும் பங்கேற்கும் இவ்வகை ஆடலில் மனித நேயமும் மேலோங்கி நிற்பது தனிச்சிறப்புப் பெற்றுக்கொண்ட வெற்றியைக் கொண்டாடுவதற்கு உருவான ஆடல் என தொல்காப்பியம் கூறுகிறது.

பஞ்சமரபு, அகத்தியர், கூத்தியல் போன்ற நூல்களில் இக்கூத்து பற்றி குறிப்புகள் காணப்படுவதாக அறியப்படுகின்றது. சங்ககால கலை இலக்கியங்கள் கூறுவதில் இருந்து இக்குரவைக் கூத்தானது மிகவும் ஆரவாரம் மிக்கதாகவும் பக்கவாத்தியங்களுடன் ஆடப்படுவது என்றும் ஏழு அல்லது ஒன்பது பேர் சேர்ந்து ஆடும் ஆடல் என்றும் அறியலாம். பொதுவாக குரவைக் கூத்து ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு ஆடுவதும் ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஆடுவதும், கள் உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெறியில் ஆடுவதும் என்று பல விதங்களில் இலக்கியங்கள் கூறுவதைக் காணலாம். இவர்கள் கள் உண்டு ஆடும் போது வரையறையற்ற ஒரு ஆடலாகவும் ஏனைய பொழுதுபோக்குகளில் ஆடப்படும் போது வரைமுறையுடன் ஆடப்பட்டும் இருக்கிறது. சங்ககாலத்தில் குரவை ஆடல்கள் போர் ஆடல்களாக புகழ் பெற்றிருந்தன. உதாரணமாக முன்தேர் குரவை, பின்தேர் குரவை என்று தொல்காப்பியம் மற்றும் ஏனைய புறத்திணை நூல்களில் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். போர்க்கால குரவை ஆடல்கள் பறை மற்றும் முரசு போன்ற வாத்தியங்களுக்கு ஆடப்பட்டதையும் காணலாம். குரவை ஆடும் போது ஒருவர் பாடி முழக்க மற்றவர் அதனைத் தொடர்ந்து பாடும் தன்மை என்பது.

**''குரவை தழி இயா மாடக் குரவையும்**
**கொண்டு நிலை பாடிக் காண''**

(கலி 39:26:29)

என்று கலித்தொகை அடிகள் விளக்குகின்றது. குரவையில் செய்யுள் எனும் அம்சம் இடம்பெற்றதாக கூறப்படுகின்றது.

**''தண்ணுமை பாணி தளராது எழு உக**
**பண்ணமை இன்சீர் குரவையுள் தென் கணணித்**
**திண்தோள் திரள் ஒளி ஆய்ந்த முருகரால்**
**பெண்தோள் பாராட்டி''**

என்னும் கலித்தொகைப் பாடல் சங்ககாலத்து ஆயர்கள் குரவை அரிய செய்தியை கூறுகிறது.

அது மட்டுமின்றி

**''குரவை தழ்கி யாம் மாஉழிப்பாடி**
**தோயா விரும்புகம் தெய்வம் பரவுதும்**
**எமக்கோ வாழியச் இம்மலர் தலை உலகே''**

என்று பாண்டிய மன்னனைப் பாராட்டி குரவை ஆடி இறுதியில் திருமாலை வழிபட்ட செய்தியை சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

**''அன்புரு காதலார் கைப்பிணைந்து ஆய்ச்சியர்**
**இன்புற்று அயவர் தழு வளு''**

(கலி 106)

என்பது ஆண் பெண் இருபாலாரும் கைகோர்த்து தழுவி ஆடிய குரவைக் கூத்தைப் பற்றிய செய்தியாக விளங்குகிறது. இங்கு அயர்வர் என்பது ஆடலின் உச்ச நிலையைக் குறித்து இதனையே 'குரவை அயரும்' (பதிற் 73, ஆகம் 336) 'தழுவணி அயர்த்தும்' (குறுந்- 394) 'அயரும் குரவை' (மலைப கடா 352) என்பவை குறிக்கின்றது. இது உணர்வை இழத்தல், உணர்வை மறத்தல், களைப் படைதல் என்பதைக் குறிப்பதாகும். இக்குரவை என்ற சொல்லில் கூறப்பட்ட ஆடலை சங்க இலக்கியங்கள் 'போர் வீரனின் போர்க்கள ஆடல்' என்றும் (புற 24) 'கள் உண்ட குரவனின் குரவை' என்றும் (புற 129) 'நெய்தல் மகளிர் குரவை' (அகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20) என்றும் 'தைநீர் ஆடலில் குரவை' (கலி 104) என்றும் (தொல் புற 21) எனப்பல இடங்களில் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

அடுத்து துணங்கைக் கூத்து பற்றி நோக்கும்போது சங்க காலம் போற்றிய ஆடல் வகைகளில் துணங்கைக் கூத்தும் ஒன்றாகும். குரவைக் கூத்தைப் போன்றே போர்க்காலத்தில் ஆடப்பட்ட ஒருவகை ஆடலாகும். போர்க்களத்தில் கள வேள்வியாடல் நிகழ்ந்த பின்னர் இவ்வாடல் நிகழ்ந்ததாக சங்க கால இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன. இத்துணங்கைக் கூத்து மகளிர் துணங்கை, பேய்த்துணங்கை, போர்த்துணங்கை என மூன்று விதங்களில் கூறப்படுகின்றது.

**''துணங்கை ஆடிய வலம் படு கோமான்**
**கோன்று தோள் ஓச்சிய வென்நாடு துணங்கை''**

என்பதால் போர்த்துணங்கை பற்றிய செய்தியைக் காணலாம். போர்க்காலத்தில் வெற்றியைத் தந்த கொற்றவைக்கு பிணங்களைப் பரிசாகக் கொடுத்த அரசனுக்கும் நன்றி செலுத்துவதற்காக கள வேள்வியின் நிறைவாக துணங்கைக் கூத்து போர் வீரர்களால் ஆடப்படுவதாகக் கூறப்படுகிறது. இங்கு கூறப்படும் 'தோள் ஓச்சிய' மடங்கிய இரு கைகளாலும் கூத்து ஆடுதலை ஒத்தது. இது துணங்கைக் கூத்தின் முக்கிய பகுதிகளில் ஒன்றாக விளங்கியது. உ.வே. சாமிநாதையர் தன்னுடைய அடிக்குறிப்பில் இக்கூத்தினை கிங்கக் கூத்து எனக் குறிப்பிடுகின்றார். இது கேரளத்தில் கொறத்தி ஆட்டத்தையும் தமிழில் சிங்கன்- சிங்கி எனப்படும் குறவன் -குறத்தி ஆட்டத்தையும் ஒத்ததாக இருக்கும். துணங்கு என்பது துலங்கு என்பதன் அடியாகப் பிறந்தது என்றும் குலுக்குதல், கலக்குதல், தொங்குதல், தூங்குதல், அசைதல் என நேரடிப் பொருளைத் தருவன என்றும் பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிடுகின்றார். இது ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திற்கு அசைதல் என்பதையும் குறிக்கின்றது.


*சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்களுக்குரிய இருப்பிடங்களில் குழுவாக, கூட்டாக வாழ்ந்தவர்கள். எனவே அவர்களின் நடனமும் குழு நடனமாகத்தான் அமையும். மன்னர்களைக் காணச்செல்லும் விறலியோ கூத்தரோ தனி நடனம் செய்வார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலி கெழு துணக்கை ஆடிய மருங்கில்
வளைதலை முதா ஆம்பல ஆர்ணவும்"

என்பது மகளிர் துணங்கைக் கூத்தாடிய செய்தியாகும். மகளிரது தலையில் ஆம்பல் பூக்கள் சூடப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும். அவர்கள் ஆடியபோது அப்பூக்கள் உதிர்ந்த வண்ணம் பற்றி பதிற்றுப்பத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இதே வேளை, போரில் வெற்றி பெற்ற மன்னன் பெண்களுடன் சேர்ந்து துணங்கை ஆடிய செய்தியும் உண்டு. பெண்கள் இருவர் ஆடும்போது விரல்களாலே அடித்தடித்துக் கூத்தாடும் ஒருவகை மகிழ்ச்சிக் கூத்தென புலியூர் கேசிகன் கருத்துரை கூறியுள்ளார்.



"சுடரும் பண்பின் திருநாறு விழக்கத்து
மாளாஇம்மிழ் துணங்கைக்கு தழுவ புனையாக
சிலை புகழ் ஏற்றின் தலைக்கை தந்து"

(புறத் 31)

இப்பாடல் வரிகள் துணங்கைக் கூத்துப் பற்றிக் கூறும்போது பசுமை படர்ந்த சேரிப் பகுதியில் மக்கள் துணங்கை ஆடுகின்றனர் என்றும் வீரம்மிக்க இளைஞர்கள் தாம் விரும்பிய பெண்களுடன் துணங்கையாடினர் என்றும் அகத்திணையுடன் இணைந்ததாகத் துணங்கைக் கூத்துப்பற்றிக் கூறியிருப்பதைக் காணலாம். மதுரைக் காஞ்சி (159- 163) வரையான பாடல்கள் பேய்மகளிர் என்ற தலைப்பில் பேய்களோடும் துணங்கைக் கூத்துப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இவற்றை விட துணங்கைக் கூத்து எனும் பெயரில் சங்க இலக்கியங்கள் பலவித ஆடல்களை கூறுகின்றன. பெண்களின் ஆடல் என்றும் (பதிற்று -12) போர்க்கள ஆடல் என்றும் (பதிற் -45) பரத்தையருடன் அரசரின் ஆடல் என்றும் (பதிற்-52) தலைவன் பரத்தையருடன் ஆடல் என்றும் (அகம்- 33) ஆண்களும் பெண்களும் விழாவில் ஆடுதல் என்றும் (குறு -364) பேய்களின் ஆடுதல் (மலைபடுகடாம்- 26) என்றும் பலவிதங்களில் கூறியிருக்கின்றனர்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு போர்க்களத்தில் கொற்றவைகளும் பேய்களும் ஆடுவது, விழாக்காலத்தில் ஆண்/ பெண் இருபாலாரும் ஆடுவது என இரு பிரிவுகளாக பிரித்து நோக்கலாம். இவ்வாடலில் பிரதான அம்சமாக 'தலைக்கை தருதல்' என்பது இடம்பெறுகிறது.

அடுத்து வேலன் வெறியாடல் பற்றி நோக்குமிடத்து; சங்க காலத்தில் பரவியிருந்த ஆடற்கலை மதநம்பிக்கையில் பிறந்த சக்தியில் ஆதிக்கம் பெற்றிருக்கின்றது என்று சங்க கால இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்வாறு சங்க இலக்கியங்களில் அதிகம் இடம்பெற்ற ஆடல்களுள் வெறியாடலும் ஒன்று. இவ்வாடலை சங்க இலக்கியங்கள் 'வெறி அயர்தல்', 'வெறி சொரிதல்', 'வெறி உறுதல்', 'காதற் கூத்து' என்று பல பெயர்களில் அழைக்கப்படுகின்றது. இவ்வாடலின் பெயருக்கேற்ப இது வெறி மிகுந்த ஒரு ஆடலாகும். இவ்வாடலை ஆடுபவர் தானாக ஆடுவதில்லை. கடவுள் அருள் ஆடுபவர் மீது இறங்குவதால் ஏற்படுகின்ற உத்வேகத்தால் வெறிமிகுந்து ஆடுவதாகக் கூறுவர். சங்க காலத்தில் அகத்திணையின் கண் நிகழ்த்தப்பட்ட வெறியாடலைப்பற்றி தொல்காப்பியம் செப்புகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''வெறியாடிய சிறப்பின் செவ்வாய் வேலன்
வெறியாட்டு அயர்ந்த கந்தனும் உறுபகை''

கடவுள் நம்பிக்கைக்கும் இளம் பெண்ணுக்கு மிடையே இடம்பெறுகின்ற ஒரு சடங்கு ஆடலாக இவ்வேலன் வெறியாடல் விளங்குகின்றது. மேலும்

''படிநர் தேய்ந்த பல புகழ் தடக்கை
நெடுமுழவாட்டப் போணங் தணிகுவ்ள அவள் என
முதுவாய் பெண்டிர் அதுவாய் கூற.....
உவந்தமை கண்டே......''

இவ்வடிகளில் காதல் நோயால் உடல் மெலிந்த பெண்ணிற்கு தெய்வக் குற்றம் நிகழ்ந்ததென்று முதிர்பெண்டிர் கூற வெறியாடலுக்குரிய களம் அமைக்கப்பட்டு முருகனை நினைத்துப் பாடியாடிக்கொண்டிருக்கின்ற போது அப்பெண்ணி னுடைய தலைவன் அவர்களை அறியாமல் தலைவியிடம் வந்து அவளை அணைத்து காதல் நோய்க்கு மருந்திட்டுச் சென்றான். இதனால் அப்பெண்ணும் காதல் நோயிலிருந்து தெளிவடை கிறாள். இதனை அவதானித்த உற்றார் தெய்வக் குற்றம் நீங்கியதாகக் கருதுகின் றனர். இதேவேளை, பெண்கள் முருகனைநினைத்து வெறியாட்டத்தை ஆடியதை பட்டினத்துப்பாலை பின்வருமாறு கூறுகிறது.

''செறிதெடி முன்னக கூப்பி
செவ்வேள்
வேறி ஆடு மகளிர்.....''

இத்தகைய வெறியாடல் நிகழும் போது வெறியாட்டுப்பறையும் தொண்டகப்பறையும் இசை வழங்கிய தாக தொல்காப்பியம் கூறுகிறது.

குரவை, துணங்கை, வெறியாடல் போன்ற மக்கள் வழக்குகளைத் தழுவிய ஆட்டங்கள் மட்டுமன்றி 'தெய்வங்கள் ஆடிய நடனங்கள்' என சில நடனங்களைச் சங்க இலக்கியங்கள் எடுத்து மொழிகின்றன. அவை திருமால் ஆடிய குடக்கூத்தினையும் அல்லியக் கூத்தினையும் சிவபெருமான் ஆடிய கொடுகொட்டி, பாண்டரங்கம், கபாலம், ஊழிக் கூத்துக்களைச் சிறப்பிக்கின்றது. தமிழர் மட்டு மின்றி தமிழகம் வந்தணைந்த ஆரிய மக்களும் கூத்தாடினர் என்பதை சங்க இலக்கியங்களில் ஒரு சில பாடல்கள் சுட்டுகின்றன. கூத்துக்களை ஆடுகின்ற போது செய்துகொள்ளப்பட வேண்டிய ஒப்பனைகளையும் சங்க இலக்கியங்கள் காட்டி யுள்ளன. அதேபோல் ஆடலுக்குப் பயன்படுத்தப் பட்ட இசைக்கருவிகள் பற்றிய செய்திகளை நோக்கும் போது சங்ககால இசை நிகழ்வு, நாட்டிய நிகழ்வுகளில் குழல், யாழ், மிருதங்கம் போன்றன பயன்படுத்தப்பட்டமையை அறியலாம். மிருதங்கம், மத்தளம் என்ற பெயரில் பயன்படுத்தப் பட்டாலும் மாச்சனை பயன்படுத்தப்பட்ட செய்தியைக் கொண்டு மிருதங்கத்தின் பயன்பாடே என்ற தெளிவைப் பெறலாம்.



இயற்கையோடு இசைந்து எழுந்த இசை வடிவங்கள் அதாவது மூங்கிற் துளையில் காற்றி னால் எழுந்த நாதம், விழு கின்ற அருவி இசை, கலைமான் கூட்டத் தின் குரல், இசையும் பூஞ்சோலைகளில் வண்டுகளின் இசையும் ஒத்து ஒலிக்க அந்த இசையின் இனிமைக்கு மயில்கள், ஆடுகின்றன. இந்த இயற்கை அன்னை யின் ஆடல் இசைக் கச்சேரியை அனுபவித்த சங்க மக்கள் வாழ்வியல் அம்சமாகத் தமக்கான ஆடலையும் பாடலையும் தமது இன்ப, துன்பங்களுக்கு ஏற்ப வகைப் படுத்தித் தமதாக்கிக் கொண்டனர் எனலாம்.

இவ்வாறாக சங்க இலக்கியங்க ளில் குறிப்பிடப் பட்டுள்ள ஆடல் பற்றிய செய்திகளில் இருந்து மக்களின் வாழ்விய லோடு இவ்வகை ஆடல் வடிவங்களானது கொண் டுள்ள முக்கியத்துவத் தினை அறியக் கூடியதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# From 'Veruddy' to 'Virumpi': A creative engagement with the Children



Dr.S.Jeyasankar

Making of 'Veruddy' 'The scarecrow' is the art of the ordinary people. 'Veruddy' means 'that frightens', this is also called as 'Veruli' and 'Konangi'.

The purpose of creating 'Veruddy' is to scare the birds in the paddy fields and vegetable gardens. It is also structured at building construction sites in order to protect from 'Kannooru' the evil eye.

Creativity is not an asset of few specialist personalities. It is a hidden, untapped wealth of all human beings. The creations of 'Veruddy' is a perfect example of creativity and the artistic ability of the ordinary people.

Creating 'veruddy' is not only a satirical process but it also consists of a protest element too. The figures created and displayed in fields and construction sites will reveal this truth.

The creative work with Children which are based on the concept of 'Art of making Veruddy' will simply expose this quality to the people. It has the freedom to allow the hands and minds of children to go beyond the horizons of conventional creative spaces.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Conventionally, the creation of 'Veruddy' is intended to create scare, but the creative process with the children transformed this into as 'Virumpi' means loveable.

Making of 'Virumpi' is a creative process with unending freedom of expressing inner feelings, humour, love and beauty, with discarded waste materials from the environment.

The ultimate objective of the creative exercise is to utilize only environmentally friendly materials to make the children aware of and indulge them into the activism of making the world free from environmental hazards. 'Virumbi' could be installed as outdoor and indoor decorative figure as well as dolls for children to play.


The above creative activity was conceptualized by S. Jeyasankar and creatively facilitated by S.Nirmalavasan with the assistance of Third Eye Local Knowledge and Skill Activists. This immovable character is being transformed into moveable by S.Nirmalavasan.

'Virumbi' is becoming popular among children as moveable and immoveable characters. 'Virumbi' will celebrate her/his tenth birthday soon. Third Eye Local Knowledge and Skill Activists will celebrate the tenth year birth celebration of 'Virumbi' in a grand scale with the kids of every nook and corner.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# Significance of the month of Aadi

(mid July to mid August)

**ThilakaWijeyaratnam**



*Kolukaddai*

From January to June is day time for the Devas. This period is called Utharayanam (North ward journey of the Sun). From July to December it is night time for Devas. This period is called Thadchanayan-am South ward journey of the Sun. The Tamil month of Aadi is the month of significance to Tamils. The first of Aadi which falls in mid July is celebrated as Aadipirappu( birth of Aadi) A renowned poet of Jaffna, NavaliyoorSomasuntharappulavar, sang a song for children about Aadippirappu

"Tomorrow is a holiday for Aadippirappu
Happy are we oh friends
We'll get together eat the Kolukaddai
And drink the tasty Kool.

Hindu Schools close in Jaffna for Aadippirappu

Aadi is a welcome month for it brings rain.

Seeds especially paddy are sown in July

It is in July that the rivers are in spate and it is known as Aadiperukku.

In South India when the the river Kaveri is in spate, people celebrate it by performing special poojah along the banks of river for the water they get. Men, women and children gather at the river bank and offer sweet meats, and other shorteats to the river. Then they enjoy distributing and eating these sweets – either sitting

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



The month of Aadi is dedicated to the forefathers. The belief is that the ancestors visit their families in astral form. The sweet meats are offered to them and in return their blessings are received by the people.

on the river bund or standing in the water. Hindus consider water as Luxmy Goddess of wealth.

In the month of Aadi all auspicious events are stopped. But there are many spiritual observances in this month. Certain days, star galaxies and anniversaries are of great importance to Hindus.

The Pooram constellation in Aady is dedicated to Goddess Umaiyal, consort of God Siva. In one of her incarnations Umayal came of age on this day. This festival is conducted on a grantd scale in the temples for Goddess Umayal. Among the constellation, the one in the form of a lion has on the hindlegs a star called Delta Leonis and by the knee of the hind leg is a star called Theta Leonis. These two stars form the Pooram constellation.

The star galaxy Swathi is of special significance. It is said that if a rain drop falls into an oyster shell on swathi, it becomes a pearl. On such a day did saint Suntharamoorthynayanar and his friend king Cheraman reach Kailas and attained Moksha. A king of Thiruvankoor,was born on the Swathi galaxy and he was named Maharajah Swathythirunal. He was a carnatic musician, a scholar well versed in Sanskrit and several other languages.

Aadi Kiruthikai---The Karthikai star constellation is also known as Kiruthikai. There are seven stars that make up the constellation, They are the plough stars, This is found north west of Orion, The star Alsayaniis the brightest star in this group. In addition to this there are many nebulae in the Kiruthikai galaxy. In Hindu mythology, there were six damsels who cared for boy God Muruga. These six damsels, wives of six rishis are the six stars seen in this group.

When Lord Muruga, God of Kaliyuga who destroys evil and saves the Devas and humans, manifested himself with six faces and twelve hands, Lord Vishnu, commanded these six damsels to care for him. They were called Karthikaipengal (women) HenceMuruga is called Karthikeyan. Not only that God Muruga bade these six women to grant any boon to those who worship him on the day of Karthikai star galaxy.




*Soving poddy in the field*

*Bathing in the holy water by the fasting day*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Another most important festival begins on the 24th of the tamil month of Aady. This will be about the 8th of August. That day is the beginning of the Nallur temple festival. The flag hoisting ceremony of the Nallur temple is on the 24th of Aadi.

## KarthikaiViratham (fasting and benefits)

- Sage Naratha observed Aadi Karthikai fast continuously for twelve years and rose above the ranks of the sabtha rishis.
- A bachelor observed this fast and born in another birth, excelled in every way and finally ruled over the whole earth.
- A King and a veddha observed this fast and were born as Anthimaan and Santhimaan respectively, and became great emperors.
- A Brahmin by observing this fast acquired all that he deserved and was born as Thirusankuchakkaravarthy and became famous.
- Another Brahmin called Baheerathan lost his land and wealth to an evil demon called Kauran. He worshipped God Muruga and observed this fast. By the grace of God Muruga he regained all that he lost. This is the speciality of the Karthihai constellation.

On the first day of Aadi sweetmeats called kolukaddai are made and offered to the ancestors.The kolukaddai is shsped like patties but the filling is of boiled and mashed green gram, scrapped coconut mixed with jaggery

The month of Aadi is dedicated to the forefathers. The belief is that the ancestors visit their families in astral form. The sweet meats are offered to them and in return their blessings are received by the people.

Aadi Amavasai is the new moon in the month of Aadi. This is dedicated to the male ancestors. Their wives, children and all fatherless people fast on the day.

Aadichevvai is the Tuesday in the month of Aadi. Those who observe fast on an AadiChevvai should do so continuously for seven years. Unmarried women benefit by this fast. They get suitable life partners.

As almost the whole month has many such spiritual observances, the month is free from auspicious events like weddings. Another most important festival begins on the 24th of the tamil month of Aady. This will be about the 8th of August. That day is the beginning of the Nallur temple festival. The flag hoisting ceremony of the Nallur temple is on the 24th of Aadi.

The flag pole is a structure of great significance. Once the main entrance is passed one sees the flag pole. It is known as sookumalingam. Its base is square. It depicts the creation of God over this an octagonal plate which depicts Lords Vishnu's function of protection. Over this is the tall cylindrical flag pole depicting the function of destruction by Rudra. So the flag pole represrnts the holy Trio and their funtions.

The flag pole is set up in order to eliminate the evil demons called Asuras, and to invite the Devas and to protect the temple and the devotees . On the cloth of the flag will be imprinted the vehicle of the incumbent deity. The flag is hoisted to the music of the trumpet and the drums and the shouts of "harohara" by the devotees.

Thus the tamil month of Aadi is a month of prayers and spiritual observances.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.pabcbank.com
(011) 4 667 222

உங்கள் சேமிப்புக் கணக்கிற்கு

8%

வ.தே.வ. 8.33%

CHAMPION
SAVER

சேமிப்புக் கணக்கு

தேவைக்கேற்ற தடவைகள் பணத்தினை மீளப்பெறினும் வட்டிவீதத்தில் மாற்றம் ஏற்படாத சம்பியன் சேவர் சேமிப்புக் கணக்கினை இன்றே ஆரம்பித்திடுங்கள்.

(011) 4 667 222

பான் ஏஷியா வங்கி
உங்களை அறியும் வங்கி

* நிபந்தனைகளுக்குட்பட்டது
பான் ஏஷியா பேங்கிங் கோபரேஷன் பி.எல்.சி., இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் நடாத்தப்படும் ஓர் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகும் - Fitch Rating 'BBB(lka)'

www.sarva.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Express Newspapers (Ceylon)(Pvt.)Ltd, at 185, Grandpass Road, Colombo-14, Sri Lanka.